ஓம்:

தனித்தமிழ் மந்திரம்.

★

நாவரசின் பாவரசு.

★

திருத்தேவர்.

★

ஓம்:

தனித்தமிழ் மந்திரம்.

★

நாவரசின் பாவரசு.

★

ஆசிரியர்:-

திருத்தேவர். பழனியப்ப கவுண்டர்,

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆதீன வித்வான்,

சமய விரிவுரையாளர் - உபயகலாநிதி.

விலை] **1950.** [ரூ. 1-4-0.

பொருள் அடக்கம்.

	பக்கம்
மந்திர மருந்துகளின் உண்மை ...	1
மருந்து தேனுகி மந்திரம் மருந்தானது ...	4
ரகஸியக் கருவி ...	6
நம்பிக்கை இழக்க காரணம் ...	8
மாட்டைப் பிடிப்பதா கயிற்றை பிடிப்பதா ...	11
முருக மந்திரப் பொருள் ...	14
முருகமறைத் தனிச்சிறப்பு ...	24
யானைகண்ட குருடர்கள் ...	27
தெய்வ வேடிக்கை ...	28
இருமொழி வேதபிரமாணம் ...	35
"நீரின்றி அமையாது உலகு" என்பதன் விளக்கம்...	39
கோவணாண்டிக் கோலக் குறிப்பு ...	44
மூடைமலையில் வாழ்க்கை ...	48
உயிர்களாகிய நாம் திருத்தியமைக்கப்படவேண்டியவர்	51
தண்டாயுதத்தின் பொருள் விளக்கம்	54–59
சிவமுருக ஒருமை ...	61
நாவரசின் பாவரசு ...	65
ஐந்தெழுத்து அணைத்திற்குமாம் ...	69
மூன்று—ஐந்து—ஆறு, எழுத்து ஜபம் ...	71
பயன் ...	78
முடிவுரை—முடியச் சிறந்த காரணம் ...	81

சி. வி. என். பிரஸ், மதுரை:—50.

ஆசிரியர் முன்னுரை.

மனிதன் கண்டுபிடித்த பலவற்றுள் கடவுளும் ஒன்று. மிருகம் பறவைகளுக்கு இது முடியாது. பசிக்கு உணவு கொள்வது கூரைபோட்டுக் குடியிருப்பது, பிள்ளை பெறுவது இவையெல்லாம் மிருக பறவைகளுக்கும் உண்டு. எலி வளை தோண்டி தான்யம் க்ஷேமிக்கவில்லையா? தூக்கணங் குருவி கூரை கட்டிக் குடியிருந்து பிள்ளைபெறவில்லையா?

எந்தக் கண்டத்தில் பிறந்தாலும் எத்தேசத்திருந்தாலும் மனித உணர்ச்சி எப்படியோ தெய்வத்தை நோக்கிப் படர்கின்றது. ஓரளவுக்குத் தந்தமளவில் அதை அளந்தும் கொள்கின்றது, சொல்லவும் செய்கின்றது. ஆனால் அந்தந்த தேச பாஷைக்குத் தக்க முறையில் சொல் வேற்றுமை இருக்கலாம்; பொருள் வேற்றுமையைக் காணோம்.

மனிதன் என்ற முறையில், எத்தேசத்து மக்களும் ஒன்றானாலும், தேசத்துக்குத் தக்கவாறு நிறம் மாறியும் பாஷை மாறியும் சுபாவம் மாறியும் கூட இருக்கும் போது இனி அவர்கள் கண்ட கடவுளும் சிறிது சொல் மாறியும் இயல்பு மாறியும் கூட இருந்தால் தான் ஒன்றென்பதில் என்ன கெட்டுப் போயிற்று; குற்றமில்லை எனத் தெரிகிறது. இதில் எப்படியோ மனித சமூகம் எங்கேயிருந்தாலும் பிறந்தாலும் கடவுளைத் தேடிக் கண்டு கொள்கிறது என்பது தான் ஆச்சரிய கரமான ஒரு நியதியாயிருக்கின்றது.

இந்தியா இருக்கட்டும் மற்ற மண்பரப்பில் இப்படித் தோன்றி நின்று பிரசித்தியடைந்த கிரித்தவர் முகமதியர் முதலிய மக்களைப் பாருங்கள்! அனைவரும் இந்த (சொன்ன)

விதிக்கு விலக்கானவர்களல்ல பேர்மாருட்டம் இயல்பு மாருட்டம் வேண்டுமானுல் சில காணலாம். ஆனல் உண்மைக்கு மாருட்டம் இல்லே.

உண்மையில் மனித இயல்பை முழுதும் ஆராய்ந்து கண்டவன் "பகுத்துண்டு வாழ்வது எவ்வளவு சிறந்தது" என்று அறிந்திருப்பானே அதனிலும் பலகோடிமடங்கு அதுசிறந்தது என்று கடவுளை முழுதுமாகக் கண்டவன்—சொல்பவன் அறிந்திருக்கின்ருன். முகமது நபி, இயேசு, குருநாநக், ஆழ்வார், அப்பர், திருமூலர் ஔவை, வள்ளுவர், முதலிய கடவுட் கொள்கையுடையவர்களெல்லாம் மக்களுக்கு மாத்திரமா ஓரினமென்று பகுத்துண்டு வாழ்வதைச் சொல்லி யிருக்கிருர்கள்? அடடா! பிராணி வர்க்கம் முழுதையுமே ஓரினமாகக் கொண்டல்லவோ பகுத்தூட்டி வாழுமாறு வேண்டியிருக்கிருர்கள் (பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை).

இப்படி இன்றி இப்போது "கடவுள் கொள்கையுடையவன் தானுண்ணி மனிதன்" என்று சொல்லு மளவுக்குக் கடவுட் கொள்கையுடையான் வருவது சுத்தத்தவருகும். இக் கடவுள் கொள்கையின் புனிதத் தன்மையை உணராது "இந்தக் கொள்கை சுயநலபுத்தியோடு தம் வயிற்றை மட்டும் நோக்கி ஆரம்பிக்கப்பட்டது" என்று சொல்வதும் அதைக்காட்டிலும் சுத்தத்தவருகும். மூடர்கள் இருபுறத்திலும் இருக்கிருர்கள்; என்ன செய்வது.

"நூல்பலகல் என்பதைக் கடைப் பிடித்துப் பல நல்ல நூற்களேக்கல்லாதவன் அந்தஅளவில் அறிவிலாமூடன். அவன் மடமையின் காரணமாகச் சொல்லுவதைப் புரிந்து கொள்ளா

மல் எப்படியும் கேட்கலாம், வாதாடலாம், குறுக்கே திரும்பியும் போகலாம். ஆனால் நீ படித்தவனாயிற்றே! அதன் பயன் என்ன?" என்று வள்ளுவர் கற்றவனைப்பார்த்து கேட்கின்றார். அதற்கவன் விழிக்கும் போது வள்ளுவர் சொல்லுகின்றார்:

இறைவனது திருவடிகளைத் தொழு; அதுவே அதன் சிறந்தபயன் என்கின்றார். வள்ளுவர் 'தாள் தொழு' என்கிறார் தாள் தொழ வேண்டினால் வணங்கா முடியரசாய் இருந்தாற் போதாது; தலையை வணக்கி உடம்பைக் குனித்து காலைமடக்கி மண்டியிட்டால் தான் நேர்மையான தொழுதல் கூடுவதாகும். இந்த மண்டியிட்டு மண்டைதொட்டுச் செய்யும் தொழுதலை நாளுக்கு ஏழுவேளையாக முகமதியர்கள் ஒன்றுகூடிச் செய்து வருகிறார்கள். கிரிஸ்தவர்களும் மண்டியிட்டுத்தலைசாய்ப்பதை மறந்தார்களில்லை.

கற்றபயன் தொழுதல் என்று இந்தியன் (தமிழன்) 2000௵த்துக்கு முன்பே சொல்லுவது; அதை இன்னும் கடைப்பிடித்து நடப்பது முகமதியரும் கிரிஸ்தவருமா? ஆஹா என்ன ஆச்சரியம்! யார் சொல்வது? யார் செய்வது? என்ற வேற்றுமை தெய்வங் கொள்கை யாரிடத்திருக்கிறதா? இப்படியே யேசு, நபி போன்ற பெரும் மஹான்கள் சொன்ன செயல்கள் இன்னும் இந்துக்களிடம் கையாளப்படுகின்றன.

"அக்கமாலை கொடு அங்கையிலெண்ணுவார்—தக்க வானவராய்த் தகுவிப்பது—நக்க நாம நமச்சிவாயவே" என்பதுதேவாரம். இதே மாலையைக் கிரிஸ்தவர் முகமதியர் கையிலும் சட்டைப்பையிலும் பார்க்கிறோம். அது ருத்ராக்ஷமாலையாயில்லா விட்டாலும், தாமரைக் கொட்டையாகவோ அல்லது உருட்டி ஓட்டை போட்ட கட்டையாகவோ இருக்கட்டும்.

மந்திரமும் இங்குள்ளபடி நமச்சிவாயவோ நாராயணுயவோ அல்லாமல், அல்லாவோ பிஸ்மில்லாவோ, ஆமென்ளுே அல்லவென்ருே இருக்கட்டும். எல்லாம் அந்தந்த மொழிக்குத்தக்கவாறு ஆண்டானடிமைத் திறங்கொண்டு கடவுளைக் குறிப்பதாகவே அமைந்திருக்கின்றன.

இத்தகைய சொற்களை மந்திரமாகக் கொண்டு மனிதன் நாளொழியாது நினைத்தோ சொல்லியோ மண்டியிட்டோ கடவுளுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிக்கிருன்.

ஒவ்வொன்றிலும் வைத்திருந்த நம்பிக்கை அறும் சமயங்களில் வெய்யலில் சுற்றி அலுத்து வந்தவனுக்கு நிழல் போல கடவுள் மந்திரம் முடிவில் மக்களுக்கு உதவுகின்றது.

இங்கனமாக ஒவ்வொரு தேசத்தவரும் தங்களின் பாஷை—வழக்கத்திற்குத் தக்க முறையில் பரம்பரையாய்ச் சில சிறந்த சொற்களை கடவுள் மந்திரமாகக்கொண்டுஜபித்து வருகிருர்கள்.

நம் பரத கண்டத்திலும் இமயத்திலிருந்து குமரிவரையும் பல பாஷை பேசும் மக்களும் சிறிதும் வேற்றுமையின்றித் தமதாகவே கையாண்டு வரும் சில சிறந்த மந்திரங்கள் உண்டு. அவை சிவமந்திரம் நாராயண மந்திரம் முதலியனவாகும்.

இவை வடமொழி யிலக்கணப்படி பகுதி விகுதிகளோடு அமைந்த பதங்கள் கூடி, ஒரு சொற்ருெடராகிப் பஞ்சாக்கரம் அஷ்டாக்கரம் என இருக்கின்றன. இந்த அமைப்பில் உலகத்திலுள்ள எந்த பாஷையிலும் அதற்கு இலக்கணவரம்பமைப்பில்லை. ஆதலின் இந்த மந்திரங்கள் வடமொழி மூல மந்திரங்கள் என்பதில் ஐயமில்லை.

இனி:—தமிழ்மொழி எல்லாப்பெரும் பகுதிகளிலும் வடமொழியோடொப்பச் சிறந்தது. பல தனிச் சிறப்புக்களும் உடையது. காணவரிய பெரும்பொருளை ஒருமுகமாகக் கண்டதும், கண்டதை எளியமுறையில் விண்டதும் கூட. இதனது அருமை, பெருமை, ஒற்றுமைகள், நூலகத்தே விளக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய செந்தமிழ் மொழியில் மந்திரவியல்புடையதாய், மொழிப்போராட்டம் நடக்கும் காலத்தும் அதற்கிடங்கொடுத்து நழுவிப்போகாததாய் முக்காலத்தும் மாறுபாடற்றிருப்பதாய் ஒரு தமிழ்மந்திரம் காணுவது தமிழ்த்தாய்க்கு மிகமிக நலமாகும். அப்போதுதான் ' செந்திறத்தமிழோசை வடசொல்லாகி" என்ற பிரபந்தமும், "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்—ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்" என்ற நாவரசும், "ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயனறிகிலா அந்தகர்" என்ற ஞானசம்பந்தமும், "கண்ணுடையரென் போர் கற்றோர்" என்ற திருக்குறளும், "ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்ற திருமூலரும், நேர்மையில் பயனுற்றவைகளாகும்.

இதற்காக இங்கு நாம் காண்பது முருக மந்திரமாகும். சிவ நாராயணாதி உலகப் பிரஸித்த மஹாமந்திரங்களுக்குப் பொருளாழமீள அகலங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவும் அதற்குமேலுள்ள சில தனிச்சிறப்பும் இதில் காணப்பட்டன. அந்தவிசேஷங்களே இதுபற்றி நூலாயெழுதும்படிதூண்டின.

இதற்கு ஆதாரமாகப் பல்லாயிரம் தேவாரத்துள்ளும் நாவரசின் பாவரசாய் ஒரே ஒரு பாசுரம் என் முன்னோர்கள்

செய்த தவப்பயனின் காரணமாகவோ என்னமோ இதற்குக் கிடைத்தது. இது மாத்திரமல்ல, திருநாவரசின் வாக்கி லுதித்த பல்லாயிரம் பாசுரத்தும் முருகமந்திரப் பாசுரம் தனிச் சிறப்பில் அரசு செலுத்தவேண்டுமானால் உண்மையில் முருக மந்திரமே எத்தனை யுகம் தவங்கிடந்து வாடியிருக்குமோ நம் மாலதை அளவிட்டுச் சொல்லமுடியாது. இது "நாவரசின் பாவரசு" என்ற தலைப்பில் விளக்கப்பட்டிருக்கின்றது. நக்கீரர் வாக்கொன்றும் இதற்குப் பக்கத்துணையாயிருந்தது. எது பண்டித பாமரர் சாதாரணமாகப் பயன்றாத்தக்கதோ அது மிகச் சிறப்புடையதும் விரும்பத் தக்கதுமாகும். முருக மந் திரம் சிவ நாராயண மந்திரம் போல எல்லார்க்கும் உரியதும், அவற்றைக்காட்டிலும் யாவர்க்கும் எளியதுமாகும்.

வேதாகமங்களில் இது இன்னாருக்காகும், இது ஆகாது என்ற விதி விலக்கு உண்டு. இதற்கு அது கிடையாது. குளித்துவிட்டு—உட்கார்ந்து—விபூதி, நாமம் போட்டுத் தான் ஜெபிக்கவேண்டும் என்பது இல்லை. நின்றும் சென்றும், நடந்தும் கிடந்தும், உழுதும் உண்டும் ஜெபிக்கலாம். உண்மை யில் ரிக்ஷா வண்டியிழுத்தோடும்போதும், கக்கூஸ் அள்ளி நடக்கும்போதும் இது நினைக்கத் தகும், சொல்லத்தகும்; நெருப்பாலும் வேகாது, நீராலும் நனையாது. உண்மையில் இது புனிதமான இமயமலைச்சாரல் குகைக்குள்ளிருந்து மணி கொண்டு உருட்டுவதைக்காட்டிலும் மேலான பழுதில்லாத பெரும்பயனைக் கொடுக்கவல்லதாகும். இந்த நிலையில் இது எந்தத் தொழிலுக்கும் ஆறுதலளிக்கும் சொல்லாகவும் அமைந்திருக்கின்றது.

ஒருவன் மலையை ஒரு மைல் தூரம் குடைந்து தோண்டி விட்டான் என்றால்—உலகம் உண்மையாய் "அடடா எவ்வளவு

பரமாத்வைத சித்தாந்த ஆசிரியர்

திருத்தேவர் பழநியப்பக் கவுண்டர்.

சிரமமான காரியம் செய்திருக்கிறன்" என்று ஆச்சரியப்படும் பின்என்ன பயன் கண்டான்? என்று கேட்டதற்கு, எலி பிடித்து வந்தான் என்ற பதில் வருமாயின் "சீச்சீ இதற்கா அவன் அவ்வளவு சிரமப்பட்டான்?! என்று உலகம் அவனையும் அச்செயலையும் நிந்திக்கும். ஆதலால் சிரமம் கொஞ்சமும் பயன் அதிகமும் வேண்டும். இத்தகைய சுலபம் இலை முருகமந்திரத்துக்குண்டு.

சில மந்திரங்கள் 16-24-32 எழுத்தில் உண்டு. இதற்குத் தகுந்தாற் போலவே சில பையன்களையும் பார்த்தேன். வாத்தியார் 1 மண்டலம் (48 நாள்) காலை மாலையும் விடாது சொல்லிக்கொடுத்துப் பார்த்தார் ஆனல் அவன் திருப்பிச் சொல்லப் பார்க்கவில்லை. இதைப் பார்த்தால் அந்த மந்திரத்தைச் சங்கில் வைத்து சங்கை அவன் காதில் வைத்து உறக்க ஊதினலும் ஏருது எனத் தெரிகிறது. இத்தகையோனுக்கும் முருகமந்திரம் ஏறுமென்றல், அதுவும் ஒரு தடவையிலேயே ஏறுமென்றல், பயனும் மற்றதற்குக் குறைந்ததில்லை என்றல் இதன் அருமை பெருமை எளிமை முதலியன நாம் அளவிட்டுச் சொல்ல முடியுமா?

தனித்து மந்திரத்தைப் பற்றியே சொல்லிவிடுவது அவ்வளவு நன்றயிராதே என்று கருதி இத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டு இன்றியமையாத பல விஷயங்களும் கால தேசத்திற்கேற்பச் சொல்லப்பட்டன. திருக்குறள்கள் சில இடங்களில் ஆழ்ந்து கவனிக்கப் பட்டன.

கடவுளின் திருவுருவத் திருமேனிகளும் சுருதியுக்தி அனுபவத்திற்கொப்ப உவமானத்தோடும் ஆராயப்பட்டுள்ளன. இதில் பல பாணிகள் வந்தன. அதில் தண்டபாணிக்கு முன்னர் அகிம்சாதத்துவம் வந்து குடிகொண்டது. முருகனின் எழுத்து முறை அமைப்பு முதலியன எனக்குப்பூரண திருப்தியைக் கொடுத்தது. எழுத்துக்களைப் பிரிததும் சில முக்கிய விஷயங்கள் விளக்கப்பட்டன.

பொதுவாக எல்லா விஷயங்களுமே மரியாதை கடவாமல் முன் சொன்ன மூன்றையும் காரணமின்றி முட்டிக் கொள்ளாமல் முடிந்தவரையிலும் நாட்டுமக்கள் பயின்று வரும் எளிய நடை உதாரணம் முதலியவைகளைக் கொண்டே பலவும் விளக்கப்பட்டுள்ளன.

கடின நடையோ, சிரம நடையோ, வக்கிர நடையோ எதுவும் மேற்கொள்ளவில்லை. இன்னும், இலக்கணவழு வருமோ என்றுகூட எண்ணவில்லை. 'நிகழ்கால வருங்காலப் பெரும்பகுதியாயுள்ள சாதாரண மக்களுக்கு எளிமையில் கருதியபொருள் ஐயமயக்கமின்றிப் பளிச்சென்று மனதில்விளங்கிவிடவேண்டும்'' என்ற ஒரே குறிக்கோளைக்கொண்டு எடுத்துக்கொண்ட விஷயங்களோடு அவர்கள் மனதையும் சொல்லையுமே கூட்டி எழுதலாயிற்று.

சால்புக்கும் பண்புக்கும் புலமைக்கும் இருப்பிடமாயுள்ள பல பெரும் பேராசிரியர்கள் இதை மதித்து மதிப்புரையும் கொடுத்தனர்.

ஸ்ரீ மீனாக்ஷி தேவஸ்தான ஆதீன ஸ்ரீ சைலப்ப ஓதுவாரவர்கள் என் வேண்டுகோளுக்கிணங்கி தேவாரம் முழுமையும்

அலசிப் பல்லாண்டு சிரமத்தின்பயனாய் எடுத்த சுமார் ஐம்பது முருக சம்பந்தமான பாசுரங்களை உடனே கொடுத்துதவினார்கள். ஒரு பெருமகன் இது வெளியேறப் பொருளுதவியும் செய்தார். இது குறிப்பிட்ட காலத்தில் வெளிவர திரு. ஷண்முகத்தேவர் அச்சு வேலையை நேரிய முறையில் கவனித்துக் கொண்டார். இன்னும் பல அன்பர்கள் பல்லாற்றானும் துணை புரிந்தனர். இப்படி மந்திர நூல் எழுதும் எண்ணமின்றியிருந்த என்னை எழுதுமாறு கட்டளை இட்ட பெருமகன் பழநியூர் திருஞானச்செல்வர், செ. சுப்பைய கவுண்டராவார். இவர் என் மேல் நிலையைப் பார்க்க எல்லாம் செய்துவந்தவர். பெரியார் கட்டளையும் சிறிது பேணி நிறைவேறியது.—நன்றி மறவற்க நன்மனமே!

ஏழையைக்காக்கவேண்டிக் காலடியில்கிடக்கும் மண்ணைத் தலைமுடியில் சுமந்த பெருமான் ஏறுமுவனை நாவுழவனுக்கி இந்நாள் மதுரையில் வைத்திருந்ததும் இத்தனைக்கும் கூட்டிமுடிக்கும் காரணமாயிற்று என்பதையும் உலகிற்குச் சொல்ல வேண்டியதாயிற்று.

ஆசிரியர்.

ஓம் முருக.

எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததுபற்றி மிகவும் மகிழ்ச்சி தெரிவிக்கிறோம். இந்நூலுக்குச் சிறப்புரை எழுத எங்களுக்குத் தகுதியில்லை; ஆயினும் உரிமையுண்டு என்பது பலருமறிவர். ஆசிரியரவர்களின் பல உபன்னியாசங்களைத் துணையாகக் கொண்டு நாங்கள் ஊரில் ஆலய நிர்மாணம், வித்யாமந்திர நிர்மாணம் முதலியவற்றைச் செய்ய நேர்ந்தது. ஏழைகள் உயர்விலேயும் சிறந்த ஒற்றுமையிலேயும் ஆசிரியருக்கு எவ்வளவு உன்னத ஆர்வம் உண்டு என்பது அவரது எல்லா நூல்களிலும் விளங்கும்.

3, 4 வருஷத்துக்கு முன்பே (பரமாத்துவிதம்) மேலான ஒற்றுமை எனும் நூல் வெளிவந்தது அறிவுலகம் அறியும். அதில் பல வேற்றுமைப்பட்ட பெரிய மதங்களுக்கும் தக்க பதில் சொல்லி சிறு வேற்றுமைக்கும் இடங்கொடுக்காமல் மேலான ஒற்றுமையை நிலைநாட்டியிருக்கின்றார். வேறுபட்டு மாறிச்செல்லும் கருத்துடையாரையும் அணைத்திழுத்துத்தம் பெருநெறியில் மூழ்கச்செய்திருக்கின்றார். பெலாசபியில் இக்காலத்துக்கேற்ற எக்காலத்திற்கும் ஒத்த பெரும் செயலாகும் அது. "மனித இயல்பு" "ஏழை பங்காளன்" இரு நூலும் மனிதன் வெறும் மனிதச்சட்டை போட்டதோடு நின்றுவிடாமல், மனிதனாகவே வாழ்வதற்கான பல காரணங்கள் கூறி, அவன் செய்யும் சிறு தொழிலும் பெரும் பயன் கொடுக்கும் முறைகளையும் சொல்லி பண்டிதர் பாமரர் யாவர்க்கும் பயன்படுமாறு விளங்குகின்றன. இதைக் கொழும்பு—வீரகேசரி,

இண்டியன் எக்ஸ்பிரஸ் முதலிய பல பத்திரிகையும் அறிந்து பாராட்டியதைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

தனித் தமிழ் மந்திரமான இதை ஆராய இருமொழியி லும் நிறம்பிய புலமை வாய்ந்தவர்களும் அதில் ஆர்வமுள்ள வர்களுமே தகுதிவாய்ந்தவர்கள். ஆனாலும் ஐயா அவர்களு டன் சிலபொழுது உடனிருக்கப்பெற்ற நலம் இரண்டொன்று சொல்லும்படி தூண்டுகிறது.

ஆசிரியர், முருகனது கைத்தடியையும்பிடித்துக்கொண்டு முருகன் பெயரையும் சொல்லிக்கொண்டு, பல நல்ல அவசிய மான தர்மங்களையும் அஹிம்ஸா தத்துவத்தையும் விளக்குகின் றார். நூலில் மந்திர லக்ஷணத்தையும் அதன் காரிய காரணங் களையும் அதன் பயன் பெருமை முதலியவற்றையும் சாதாரண உலகானுபவ வாயிலாகவும் விளக்கிக்காட்டி வேதமுடிவு வரை யிலும் நம்மை ஐயமயக்கங்களின்றிக் கூட்டிச்செல்கின்றார்.

அப்பர் பாசுரத்தொன்றை எடுத்துக்கொண்டு ஆசிரியர் மகிழும் மகிழ்ச்சி உலகத்தையே முருகவின்பக் கடலில் முழு கடித்துவிடும் எனத் தோற்றுகிறது.

தமிழ்த்தாய்க்கு இந்த தனித் தமிழ்மந்திரம், திலகம் என அமைந்திருக்கின்றது. பொதியக் காற்று (தென்றல்) வீசு மளவும் இந்தப்பொட்டு, தாயின் நெற்றியினின்றும் அழியாது என நம்புகின்றோம். அதிகம் சொல்வி என்ன?:- நூல் முழுதும் எளிய நடை, தெளிந்த விஷயம், பெரிய போக்கு, ஆழ்ந்து விரிந்த கருத்துக்கள், அழுந்திப்பதிந்த எண்ணங்கள், பொங்கியெழும் ஆர்வங்கள், தங்கித்தடைபடா முடிபுகள், மிக எளிமையான ஒல்லும்வகை அறங்கள், தமிழ்நாட்டுக்கென்றே

சிறந்த பல பேர்க்கிஷங்கள், பல இருமைகள் ஒருமையாய்க் கூத்தாடிக்கும் காட்சி, கல்வி செல்வ மத் வெறிகளின் பறந்தோடும் தாழ்ச்சி, ஊகம், அனுபவம், நூல் இவைகளை அனுசரிப்பது என்பது மாத்திரம் அல்ல, அவற்றை நல்லவகையில் வளப்படுத்தும் முறை முதலியன எங்கும் பரக்கக் காணப்படுகின்றன.

இது மந்திர நூல் மாத்திரமல்ல; அதன் பேராலே தந்திர நூலுங்கூட. பலபெரும் விஷயங்களிலுள்ள மயக்கம் அறுபட்டுப்போவதை அனுபவத்தில் (படித்துணர்ந்து) பார்க்கலாம்.

"கற்க நேரமில்லாத பலரும் இவ்வொரு நூலையாவது அழுந்தி மும்முறை கற்பார்களாயின், பல பெரிய விஷயங்களுக்கும் தைரியமாய் பதில் சொல்லி விடுவார்கள்; பிறரால் கலக்கப்படமாட்டார்கள், தாமும் மனங்கலங்கார்கள்" என்று மனப்பூர்வமாய் நம்புகின்றோம்.

இதற்கு பொருள் கொடுத்து ஆசிரியரையும் உலகத்தையும் ஊக்குவித்த ஸ்ரீ சி. திருமூர்த்திக் கவுண்டருக்கும், ஆசிரியருக்கும் தமிழுலகம் என்றும் கடப்பாடுடையதாகுக.

இங்கனம்,

ஸ்ரீ கர்னம் நைனு பிள்ளை, ஆம்போதி.

ஸ்ரீ V. S. கிருஷ்ணமூர்த்தி சுவாமிகள்,

தேசீய வித்யாமந்திரம்,

செல்லப்பம்பாளையம், புளியம்பட்டி P.O., அவினாசி.

வள்ளலும் புலவரும்

அன்று தமிழ் நாட்டிலே பெருவள்ளல்கள் வாழ்ந்தனர். மொழித்திறன் மிகுந்த பெரும் புலவரும் இருந்தனர். வள்ளல்கள் புலவர்களை போற்றி ஏற்றுப் பரிசில் வழங்கினர். புலவரும் வள்ளல்களை நாடினர். சொல்லும் பொருளும் ஒன்று தான் என்றாலும் சொல்வளம் மிகுந்த புலவர், பொருள்வளம் செறிந்த வள்ளல்களை நாடவேண்டியதாகிறது. பழம் பெரு மன்னர்கள் வள்ளன்மை பெருக இசைவாழ்வு வாழ்ந்தனர். மன்னன் திருப்பார்வையிலே புலவன் சிறந்தான். பெரு மன்னர் அருகி குறுநில மன்னரான போதும் வள்ளன்மை அருகவில்லை! இன்றும் குறுநில மன்னரல்லாத் தமிழ்பெரு மக்கள் வள்ளல்களாக விளங்குகிறார்களல்லவா? அவினாசி தாலூகா செல்லப்பம்பாளையம், ஸ்ரீமான் சின்னதம்பிக் கவுண்டரவர்கள் பொது ஸ்தாபனங்களில் ஈடுபட்டு பல அரிய காரியங்களைச் செய்துள்ளார். முக்கியமாக அக்காலத்திலேயே ஹரிஜனங்களுக்கு ஜலவசதிக்காகப் பல கிணறுகளும், பாடசாலையில்லாத கிராமங்களில் பல பாடசாலைகளும், ரஸ்தாக்களும், கோவாபரேஷன் சொஸைடிகளும் ஏற்பாடு செய்தார். தம் ஆயுள்வரை அவைகளை நிர்வகித்தார். ஏழைகளைக் கண்ணும் இமையுமெனக் காத்து வந்தார்.

அன்னாரின் திருக்குமாரர் சி. திருமூர்த்திக் கவுண்டர் இம்முருக மந்திரம் வெளியேறப் பொருளுதவி புரிந்து வள்ளலாய் "இவன் தந்தை என்னோற்றான்" என்னும் குறளுக்கு இலக்கியமாயுள்ளார்.

திருத்தேவர் பழனியப்பக் கவுண்டர் இருமொழிப்புலவர்! தமிழ்மொழி வடமொழி இவற்றின் பரப்பையும் ஆழத்தையும்

கண்டவர். நல்ல வகையிலே, வரன்முறையாக, குருசிஷ்ய பரம்பரைப் பிரகாரம் பயிற்சி பெற்றவர். பல்லாண்டுகள் உழைத்ததன் பயனாகப் புலமை நிரம்பப் பெற்றவர். கல்வி கேள்விகளில் சிறந்தவர். ஆய்ந்து அறிந்து, அடக்கம் பூண்ட உயரியர். வைதிக நெறி பற்றி லௌகிக நெறி செல்பவர். இத்தகுதி பெற்ற புலவர் பல்லிடங்களும் சென்று தமிழும், நம் பெருமதமும் நிலைக்கத்தொண்டு புரிபவர். பேசுவதிலே, எழுதுவதிலே வல்லவர். பல அரிய நூற்களின் ஆசிரியர். இப்புலவரின் பேச்சையும், நூல்களையும் நம் நாடு நன்கறியும்.

இப் புலவரைத் தகுந்த பாத்திரமாக மதித்து, ஏற்றுப் போற்றிடும் பெருமான் ஸ்ரீமான் திருமூர்த்திக் கவுண்டரவர்கள் மிகச் சிறந்த செய்கை செய்திருக்கின்றார். குன்றாப் புகழுக்கிலக்கியமான காரியம் தமிழ் மொழிக்கு நல்ல நூல் கிடைக்கிறது. தமிழர் புது நூல் பயிலமுடியும். "முருக மந்திரம்" என்னும் புதுப்பெரு நூலும், அதன் ஆசிரியரும் தமிழ் நாட்டிலே நிலை பெறுவன வாகும்.

இதற்குப் பேருதவி புரியும் ஸ்ரீமான் கவுண்டரய்யா அவர்களுக்குத் தமிழகம் கடமைப் பட்டுள்ளது. இப்பெரியார் போன்ற திருவளர் செல்வர்கள் ஆதரித்தால் தான் நாட்டிலே சொல்வளம் மிகுந்து காணும்.

வாழ்க வள்ளலும் புலவரும்.

வி. ஜி. சீனிவாசன், B. A. L. T.,
ராஷ்ட்ர பாஷா விசாரத்,
ஆசிரியர், சேதுபதி உயர்நிலைப்பள்ளி.

மதுரை,
5—x—50



திரு. சி. திருமூர்த்திக் கவுண்டர்,

செல்லப்பம் பாளையம் அவினாசி

தமிழ்மந்திரத்தை உலகமறியச் செய்தவர்.

श्रीः

"नमस्साम्बशिवाय"

महामहोपदेशक, कविकोकिल, वैयाकरण पञ्चानन,
पण्डितराज, महामहोपाध्याय,

के. एस. कृष्णमूर्तिशास्त्रिणः ॥

चेन्नैप्रान्ताऽऽस्थानसंस्कृतमहाकवयः ॥
श्री आर. डी. एस. कालेज़, मथुरा.

आगतोऽयं ग्रन्थोऽस्मद्दृष्टिपथम्। अद्य यावद्विलीनतया स्थितः कश्चन महान्विषयः प्रतिपाद्यतेऽस्मिन्ग्रन्थे। स च द्राविड्यां 'मुरुक' इति व्यवह्रियमाणो मन्त्रः। अस्मन्मातुर्भारत-भूमेस्संस्कृता द्राविडीच विभातोऽक्षिद्वयसन्निभे। उत्तमगुरुमाश्रित्याधिगतोभयभाषापाण्डित्योऽयं ग्रन्थकर्ता, तिरुदेवर भाषाद्वयसाहाय्येन तत्तद्विषयान्विविच्य, अनर्घमेकं माणिक्यमुपलभ्य, द्राविडीमातुर्मुकुटे, मध्यमणिरूपेणार्पयत्येतद्ग्रन्थ प्रणयनद्वारा ॥

न हि दुष्टं भवति माणिक्यं संवत्सरसहस्रमतिमलिनदेशसंस्थितावपि। परन्तु, यदा तत्प्रभाववेत्ता कश्चन पुमांस्तदाऽऽददात्यन्विष्य, तदैव तन्नृपकिरीटाऽऽभूषणं भूत्वा शोभेत फालफल्येन। तथैव प्रकृतम्मुरुकमन्त्रमाणिक्यमप्येतावन्तं कालमापामरपण्डितं सर्वजनदृष्टिगोचरतामापन्नमप्यविज्ञात माहात्म्यमद्यैव ग्रन्थकर्त्रा प्रथमतो दृष्टम्प्रापितञ्च समुन्नतस्थलविशेषम् ॥

सामान्यतो मन्त्रविचार एव न कर्तुं शक्यते सर्वैरपि। अपिचायं द्राविडमन्त्रविचारः प्रौढो रमणीयश्च विभाति। अत्रच कृता विचारफक्किका विजातीया विलसतीति नात्युक्तिरेषा। इतरेषामष्टाक्षर-पञ्चाक्षरादीनाम्मन्त्ररत्नानां यादृशः प्रभावो दृश्यते, सोऽनेनापि द्राविड्याम्प्राप्येतैवेति मन्यामहे ॥

मन्त्रमेनम्प्रत्यक्षरं विभज्यातीव सम्यक्प्रतिपादिता दृश्यन्ते गभीराश्शास्त्रविषया बहवः। अतिदुर्ज्ञेया अपि विषया अनायास ग्राह्या ग्रन्थकर्त्रोपपादिता राजन्ते ॥

मन्महे इदमुचितमभविष्यदिति, यददास्यद्ग्रन्थकर्ता ग्रन्थाय "उभयभाषासिद्धान्तसार" इति नाम। किञ्च, संस्कृतभाषायां पञ्चाक्षरादीनामिवास्यापि द्राविड्यां जपार्हत्वादिनिरूपणं सुष्ठु प्रतिभाति ॥

आशाचास्माकं, सर्वेऽपि द्राविडीव्यवहारिणः पठित्वा ग्रन्थमिमं फलभाजो भवेयुरिति ॥ शम् ॥

ஸ்ரீ

மகா மகோபதேசக கவிகோகில
வையாகரண பஞ்சானன பண்டிதராஜ
மகாமகோபாத்யாய
K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
சென்னை மாகாண சர்க்கார்
ஸம்ஸ்கிருத ஆஸ்தான கவி.

இந்நூல் நமதுபார்வைக்குவந்தது. இன்றுவரை மறைந்து நின்ற ஓர் பெரும் பொருள் இந்நூலில் விளக்கப்படுகின்றது. அது தான் தமிழ் மொழியில் முருக முருகவென வழங்கி வரும் மந்திரமாம். நமது தாய்நாட்டுக்கு வடமொழியும், தென் மொழியும் கண்ணிணை போன்று விளங்குவன. இத்தகைய இருமொழிகளிலும், நல்லாசிரியர் வாயிலாகப் பெரிதும்புலமை பெற்ற இந்நூலாசிரியர், திருத்தேவர் இருமொழிகளிலும் புகுந்து விஷயங்களை ஆராய்ந்து, ஓர் விலையற்ற மாணிக்கத்தைக் கண் டெடுத்தார். எடுத்த மாணிக்கத்தையு மிந்நூலியற்றும் வாயிலா கத் தமிழ்த்தாயின் மகுடத்திற்கு நடுவுபாட்டிலங்கு நன்மணி யாக அர்ப்பணம் செய்கிறார்.

மாணிக்கந்தான் எவ்வளவோ வருடங்கள் குப்பைகளில் மறைந்து கிடந்தாலும் கெட்டுவிடுமோ? அல்லது அதனொளி தானழிந்து விடுமோ? ஆனால் அதன் மான்மியமறிந்தவ னொருவன், அதைக்கண்டெடுக்குங்கால் அது மண்ணாளுமரசர் கிரீடத்தில் பதிக்கப்பட்டுப்பொலிவுறும். அவ்வாறே நமது முருக மந்திரமாணிக்கமும் இதுகாலும் பண்டிதர் பாமரர் வாசி யற எல்லோர் முன்னிலுமிருந்து கிடந்தாலும் பிரபாவமறி பவனின்மையால் கிடந்தவாறே எடுப்பாறற்றிருந்தது. அதைப் பெரும் புலமை படைத்த இந்நூலாசிரியர் முதல் முதலில் கண்டெடுத்தார். அதுவுமுன்னதமான ஓரிடத்திற்கணியாக விளங்குந்தன்மை பெறுகின்றது.

சாதாரணமாக மந்திர ஆராய்ச்சியே எல்லோராலும் செய்யப்படமுடிகின்ற பொருளல்ல. அதிலும், இத்தனித்தமிழ் மந்திரவிசாரமோ மிகவும் கம்பீரமாயும் அழகாயும் விளங்கா நிற்கிறது. இதில் செய்யப்படும் ஆராய்ச்சிமுறை ஓர் தனிப்பட்ட விளக்கமுடைத்தென்பது மிகையாகாது. மற்ற வடமொழி மந்திரங்களாகிய அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷர முதலியவைகளுக்கு எவ்விதப் பெருமையுளதோ, அப்பெருமை தென்மொழியிலிதனுலு மடையப்படுமென வெண்ணுகின்றோம்.

நூலாசிரியரால் இம்முருகவெனும் மந்திரம் ஒவ்வோரெழுத்தாகக் கூறிட்டு, விவரிக்கப்படுகின்றது; பல பெரிய ஆழமான சாத்திரவிஷயங்களும். மிகவுமறிவதற்கரிய பெரும்பொருள்களும் எளிதில் புலனுகும் வகையில் நன்கு ஆங்காங்கெடுத்து விளக்கப்படுகின்றன.

இந்நூலுக்கு ஆசிரியர் "இருமொழிமுடிபுச்சாரம்" எனப் பெயர் கொடுத்திருந்தால் மிக்க அழகாயிருந்திருக்குமென நினைக்கின்றோம். மேலும் வடமொழி மந்திரங்களைப்போன்று இதற்கும் ஜபிக்கப்படவேண்டும்தகுதிகள் பல வுள்ளன வென்று உரைத்தல் மிக நன்றாயிருக்கின்றது.

தமிழ்மொழி பேசும் யாவருமிந்நூலைப்படித்துப் பயனடைவார்களாக வென்று நமது மிகுந்த அவா. || சுபம் ||

முருகன் துணை. 24-11-49

(தங்கல்) மதுரை.

காண்மின் புலவிர்காள்! கேண்மின் அறிஞர்காள் !

நம் தமிழ் மொழியில் இதுகாறும் நாம் அறிந்தது ஒரே மந்திரம் தான். அதுவே திருமூலர் அருளிய திருமந்திரம். இது 3000 பாசுரங்களைக் கொண்டு தத்துவம், யோகம், திருவைந்தெழுத்து, ஞானம், ஏனைச்சாதனங்கள், வைதிக சைவ சித்தாந்த நுட்பங்கள் முதலிய பலவற்றை அநுபவ பூர்வமாய் எடுத்துக்காட்டும் அரியதோர் நூலாம். மந்திரம் என்னும் சொல், ஆலோசித்தல், அரண்மனை என்னும் சில பொருட்களையுடையதாயினும் 'நினைப்போரைக் காப்பாற்றுவது' என்னும் பொருளையே சிறப்பாகக் கொண்டது.

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்"

என்றார் முந்தை இலக்கண நூலாசிரியரும். இஃது இங்ஙனமாக, இப்போது நம் நாட்டின் நல்வினைப்பயனாக ஒரு புது மந்திரம் தோன்றிற்று: அது தமிழ் மந்திரம். மேலும் 'தனித் தமிழ் மந்திரம்' என்றால் அது எத்துணை இன்பம் விளைவிக்காது என மகிழ்ந்து கையேற்று ஊன்றிப் படித்தேன். ஓர்ந்துமுணர்ந்தேன். இந்நூலாசிரியர் மாயவித்தை வல்லுநர்போலும்! புதிய மந்திரம் எனக் கருதிய என்னைத் தூக்கிவாரிப்போட்டது. அச்சோ! இது மிகமிகப் பழையதேயன்றோ? புதுவது அன்றே! பழமையைப் புதுமையாக்கிக் காட்டும் இவ்வாசிரியரின் மதிநுட்பத்தையும் சொற்கோவை அமைப்பையும் என்

னென்று புகழ்வது? இம் மந்திரம் பழையதேயாயினும் இவர் சொல்லுமுன் அது ஏன் நமக்குத் தோன்றவில்லை? இது தான் ஆச்சரியம் விளேக்கின்றது. நம் உள்ளத்தில் ஆழ்ந்து புதைந்து மறைந்திருந்த ஞானக் களஞ்சியமாகிய இவ்வரும் புதையலை நம் ஆசிரியர் தமது மதிவன்மை என்னும் கையால் எழுதுகின்ற மையாகிய அஞ்சனத்தை, எழுதுகோலாகிய அஞ்சனக் கோலில் தோய்த்து நம் உள்ளமாகிய கண்களுக்குத் தீட்டிய பின்னரே இப் பழம்பொருள் தோற்றுவதாயிற்று. இல்லாவிட்டால் கொஞ்சத்தில் வெளிப்படுமா? அறிந்தோம்; ஆனால் முன் மறந்தோம்; இப்போது தெரிந்தோம்.

"பழந்தன மிழந்தன படைத்தவரை யோத்தோம்"

ஊழிகாலத்துக் கடலால் சூழப்பட்டிருந்த உலகம் நீர் சிறிது சிறிதாக வற்றி முன்னர் மலைகள் தோன்றி நாளடைவில் மண்ணுலகம் ஆயிற்று என்பர் பௌதிக நூலாராய்ச்சியாளர் கள். இதனை "கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே—முற்றோன்றி மூத்தகுடி" எனவரும் புறப்பொருள் வெண்பாச் செய்யுளும் வலியுறுத்துவதாம். எனவே மலைநிலமாகிய குறிஞ்சித்திணையே ஏனை நிலங்களாம் முல்லை முதலியவற்றினும் தலைமை சான்றது என்பது போதரும். இக்குறிஞ்சிக் கடவுள் முருகனே யாதலின், அக்கடவுளே தமிழ் மக்களுக்கு மூல முதற்கடவுள் என்றறிகின்றோம். மேலும் ஐந்திணை உரிப்பொருட்களாம் கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் முதலியனவும் குறிஞ்சியிற் கூட்டம் நிகழ்தலை முன்னிட்டு முறையே தோன்றுதலும் அறியப்படும். இவ்வாற்றால் பல

இடங்களிலும் முருகன் கோவில்கள் பெரும்பான்மையும் மலையினிடத்தவாதலும் சான்றுதல் காண்பாம். இவ்வரலாற்றையுட்கொண்டு இவ்வாசிரியர்கூறும் தனித்தமிழ் மந்திரத்தையும் கருதிப்பார்ப்போமானால் இவர் கூற்றுவலியுறும் என்பது என் துணிபு.

இதற்குமுன் பரமாத்துவித சித்தாந்தம், திருக்குறளில் முதற்குறள் விருத்தியுரை, மனித இயல்பு, ஏழை பங்காளன் முதலிய உரைநடை நூல்களை இயற்றித் தமிழ்த்தாயின் திருவடிகளை அலங்கரித்த இந்நூலாசிரியரின் இருமொழிப் புலமையும், நுண்மாண் நுழைபுலச் சிறப்பும் யான் கூறவேண்டா. அறிவுடை உலகம் அறிந்தனவே யாகும். இவையிற்றைக் கற்போரே அறிந்து பாராட்டுவார்கள். இங்ஙனம் இக்காலத்திற்கேற்ற அரிய பல நூற்களை இயற்றித் தமிழ் மக்களின் நல்லறிவை வளர்க்கும் செவிலித்தாயாக இருந்து இந்நூலாசிரியர் நீடூழி இனிது வாழ்வாராக.

இத் தனித் தமிழ் மந்திரத்தை உள்ளத்தில் உருவேற்றி மெய்யன்பர்கள் பலரும் இகபர நலன்கள் முற்றும் எய்தி வாழ்வார்களாக எனத் திருப்பரங்குன்றச் செவ்வேள் சேவடிகளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பேராசிரியர் புலவரேறு,

அ. வரதநஞ்சைய பிள்ளை,

தோரமங்கலம்—சேலம்.

மதுரை தமிழ்ச்சங்கத் தலைமையாசிரியரும்
செந்தமிழ் பத்திரிகை ஆசிரியருமான
உயர்திரு, திருநாராயணையங்கார் சுவாமிகளின் திருக்குமாரர்
ராமேஸ்வரதேவஸ்தான பாடசாலைத் தமிழ்ப பேராசிரியர்

T. N. அப்பனையங்கார், மதுரை.

இந்நூலாசிரியர் இருமொழிப்புலவர், திருத்தேவர் பழனி யப்பக்கவுண்டரவர்களைத் தமிழுலகு நன்கறியும். 'குலனருள், தெய்வங் கொள்கை, மேன்மை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை' முதலிய ஆசிரியரிலக்கணமனைத்தும், இவரிடம் ஒருங்கமைந்துள்ளன; வேதவழக்கொடுபட்ட சான்றோரெனத் தகுதி வாய்ந்த இவர், தமிழரில் தலைமாணிக்கமாய்த் திகழ்பவர் என்னினிழுக்காகாது. வேதத்தை யிழித்து, கடவுளை பழித்து, சமயநெறியை யழித்து, பகுத்தறிவுத் தமிழர் தாமேயெனப் பறைசாற்றித்திரியும் மக்கட் போலிகள் மலிந்துவருமிக் காலத்து, "ஒளித்து வாழ்கின்ற தருமமன்ன"ராய் உறுதிப் பொருளுணர்த்திவருமிவ் வாசிரியர் பெருமை உரைக்குந் தரமாமோ.

இவர் நல்லாசிரியரை வழிபட்டு வரன்முறையாற்பெற்ற கேள்விச் செல்வத்தோடு, சொல்லின் செல்வமும் மிகப் படைத்து விளங்குதல் தமிழ் மக்கள் செய்த தவப்பயனே என்னலாம்? "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது இவர் கடைப்பிடி. மெய்நூற் பொருள்களைத் தமிழுருள்ளத்தில் வேரூன்றச் செய்யவேண்டுமென்பது இவர் வேணவா. இவற்றாலிவரியற்றிய சமயத்தொண்டும் தமிழ்ப்பணிகளும் மிகப்பல. விரிவுரைகளாகவும், உரைநூல்களாகவும்

இவர் வாயிலாக வெளிப்படும் கல்வியறிவொழுக்கங்கள் நாட்டிற்கு நற்பயன் விளைவுக்கு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

அத்தகைய உரைநடை நூலில் தலைசிறந்தது இப்பொழுது வெளிவரும் "தனித்தமிழ் மறைமொழி" என்பது. இது பெறலரும் மாமணியான முருகமந்திரத்தின் பெருமை கூறுவதாம். ஆசிரியரபிமானத்தால் "தனித்தமிழ்" என்று விசேடிக்கப்பட்டதாயினும் இந்நூல் நுவல்பொருள், வடமொழி தென்மொழிக் கடலினின்றும் வடித்தெடுத்தளித்த தெள்ளமுதமேயெனல் சாலப் பொருந்தும். இங்ஙனம் அரிதாகப் பெறும் பொருளை யாவரும் எளிதாகப் பெறுமாறு கொடுத்த ஆசிரியருடைய பெருநல்லுதவி, கைமாறு வேண்டாக்கடப்பாடன்றிப் பிறிதில்லை.

இந்நூல் சிறிய அளவினதாயினும் பெரும் பயனளிக்க வல்லது. பண்டிதர், பாமரர் யாவர் மகிழ, எளிய இனிய நடை தழுவிச் செல்வது. கருதிய பொருளைக் கற்பவர் உளத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிய வைப்பது. மற்றும் இதனருமை பெருமைகள் விரிப்பிற் பெருகும்.

முத்தேவரினும் முதற்றேவர் முருகப்பிரான் அவர் திருமந்திரமும் பிறமந்திரங்களிற் பெருமந்திரமாம். இம் முடிபொருள், இதில் நன்குநிலை பெறுத்தப்படுகிறது. திருந்திய ஏதுக்களும் பொருந்திய எடுத்துக்காட்டுக்களும், இன்றியமையாத தடை, விடைகளும் இதன்கண் மலிந்துகாணப்படுகின்றன. மொழிவேற்றுமை-சமயவேற்றுமை காரணமாக எழுதற்குரிய குற்றங் குறைகள் இந்நூலகத்துச் சிறிதேனும் காணக்கிடையா. சைவை வைணவசமயவாசிரியர்களைப் போற்றியுரைக்கும்பொதுநோக்குடைமை இதன்கண் பெரிதுங் பாராட்டற்குரியதாம்.

சாற்றுக் கவி

"சிவருத்திரர் கலிவெண்பா" முதலிய பன்னூலாசிரியரும்,
மருத்துநூல், சோதிடநூற் புலவருமான
மதுரை, வரகவி, மு. கணபதியா பிள்ளை அவர்கள்
இயற்றிய

அறுசீர் விருத்தப்பா

தருத்தேவஞ் சொருசமயத் தலை முருகன்
தனித்தமிழ் மந்திரந் தென்னாட்டார்
கருத்தேவர் கதிர்ப்புலனுங் களிப்பமுது
புதையலெனக் கலையாய்ந் தீந்தான்
எருத்தேவற் சொக்கரிள மீனவளு
மெழின் மதுரை யிருவென் றுட்கொள்
திருத்தேவர் பழனியப்ப செம்மலெனு
மிருமொழி தேர் சிம்மே றம்மா.

இன்னோரன்ன தமிழ் நூல்கள் இன்னும் பலவற்றை இயற்றியுதவுமாறு திருத்தேவர் பழனியப்பக் கவுண்டரவர்களை தமிழுலகு எதிர்நோக்கி நிற்கின்றது. தமிழரில் ஒரு சாரணை போலி மக்களின் பொய்யுரை வழக்குகளை வேரறக்களைந்து அறியாமை யிருளோட்டும் ஞானச்சுடர் விளக்காய் இவ் வாசிரியர் நெடுங்காலம் வாழுமாறு இறைவனருள் வேண்டி மனமார வாழ்த்துவோமாக.

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம்
சின்னப்பட்டம

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசலதேசிகசுவாமிகள்
குன்றக்குடி.

அணிந்துரை.

திருத்தேவர் பழனியப்ப கவுண்டர் அவர்கள் ஆற்றல் மிக்க அன்பால் அரன்கழல் பூசிக்கும் அன்பர் பாச ஞானத் தாலும், பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே நேசமொடு உள்ளத்தே நாடிடும் அன்பர். ஞானச் செல்வனை ஞானக்கண்ணினிற் சிந்தை நாடிடும் சீரியர். தாம் பெற்ற அறிவொளியைக் கொண்டு உலகின் மடமையிருளை ஒழிக்க உழைக்கும் உத்தமர். உள்ளமைதியுடன் உலகில் உலாவி அருட்பணிகள் செய்யும் சீலர். அஞ்சாமல், நேர்மை யும், பொறுமையும், உண்மையுங் கொண்டு, அன்பைப் பெருக்கி; மனித சமுதாயத்தின் இன்பமே கருதிப் பணிபுரி யுந் தொண்டர். அத்தகைய பணிகளுள் ஒன்று இந்த நூல்.

"கற்பனையே சுரக்காத இடத்தில் கற்பனை குழிதோண் டிப் புதைக்கப்பட்ட இடத்தில்-நாஸ்திக வாதம் தலைதூக்கி நிற்கும் இடத்தில் மனிதனுல் கடவுளைக் காண்பதென்பது நடக்காத காரியம்" என்றுர் ஒரு அறிஞர். இன்றைய உலகம் கடவுளைக் காணக்கூடாத நிலையிலேயே செல்லுகின்றது. இந்த நிலையிலும் ஆசிரியர் "கடவுளைக் காணமுடியும்" என்று துணிந்து கூறுகின்றுர். அவநம்பிக்கையைப் புறத்தொதுக்கும் ஆசாரத்தைக் (Willing suspension of disbelief) கைக்கொண்டு மந்திரத்தைச் சொன்னுல் நிச்சயமாக கடவுளைக் காணலாம். ஆசிரியர் இளமையே கோளமாய், அழகே உருவமாய்க் கரு ணையே வடிவமாய், வான்பழித் திம்மண்புகுந்து மனிதரை ஆட்

அவிநாசி—செல்லப்பம் பாளையம்,
தேசீய வித்யா மந்திரத் தலைவர்.

பலகலையு மினிதுணர்ந்து பரமாத்து
விதம்பகர்ந்த பழநிச் சாமி
நலமுழுது நாமொன்றால் நாடடைய
நாவரசை நடுவ தாக்கி
தலமுழுதுந் தலையேற்கத் தனித்தமிழ் மர்
திரநூலைச் சகத்துக் கீந்தான்
நிலைதளரா திதன்பெருமை நெட்டுருச்செய்
வோர்விருப்ப நிறையு மன்றே.

கொள்ளுநம் வள்ளலாகிய வள்ளிமணாளனிடத்து நம்மை ஆற்றுப்படுத்துகின்றார். ஞாயிற்றைச் சுற்றிச் சுழன்று வரும் கோள்களுள் செவ்வாய்மண்டலத்தில் வாழும் நமக்கு சேவற்கொடியோன் வழிபாடு மிகச் சிறந்ததாகும். முருகனே சிவன்; சிவனே முருகன் என்று ஆசிரியர் விளக்கிக் காட்டுகின்ற இடம் "எத்தனைக் கடவுள்கள்" என்று கேட்கும் நாத்திகர்களின் நாவடக்கும் கருவியாக விளங்குகின்றது. சிவனே முருகன் என்பதை "அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்" என்று கந்தபுராணம் கூறுகின்றது. தண்டாயுதபாணியின் திருவுருவத்தை விளக்கிக் கூறுகின்ற முறையில் ஆசிரியர் சிறந்து விளங்குகின்றார். முருகனது நாமத்தை வாயினாற்பேசி, மனத்தினால் நினைத்தால் மாண்புடன் வாழலாம் என்பது ஆசிரியர் கருத்து. இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் அசத்துப் பொருளுடன் உள்ள பழக்கம் தவிரப்பழகி, கையில் முயற்சியும் கருத்தில் கந்தனுமாக வாழ்ந்து வாழ்க்கையைத் திருவருள் விளக்கமாக்கிக் கொள்ளவேண்டும்.

தனித் தமிழ் மறைமொழி.

தனித் தமிழ் மந்திரம்.

மந்திர மருந்துகளின் உண்மை

உலக வழக்கில் மந்திரத்திற்குப் பயன் உண்டென்பதை நன்றாய்க்காண்கின்றோம். யாதாயினும் ஒருமந்திரத்தை உருப்போட்டு சித்திசெய்துகொண்டவர்கள் சிறந்த முறையில் சில காரியங்களைச் செய்வதைப் பார்க்கிறோம்.

சொக்கு, புழுக்கூடு, விஷகடி வேர் பிடுங்கல் மூன்று முறைக்காய்ச்சல், விப்புறுதி முதலியவைகளுக்கு இன்றும் மந்திரித்து சுகப்படுத்துபவரைக் காணலாம்.

உண்மையில் மருந்தால் போகாத புழுக்கூடுகள் மந்திரத்தால் போகின்றன. சிலவிடத்தில் மந்திரத்தால் போகாதவை மருந்தாலும் போகின்றன. இதனால் இரண்டுக்கும் தனித் தனி ஆற்றல் உண்டு எனத் தெரிகின்றது. தனித்தனி சில விடங்களில் பலிக்காதுபோதற்குக் காரணம் மருந்தோ, மந்திரமோ, வியாதிக்குத் தக்க அளவிற்கு பிரயோகம் செய்யாததும், கொடுப்பா ரேற்பாரிருவருடைய பத்தியத்தாழ்வு, காலத் தாழ்வு முதலியனவாகும்.

மருந்தைக் காட்டிலும் மந்திரத்திற்கு செய்வதில் எளிமையும், காரியத்தை சீக்கிரம் முடித்துக் கொடுப்பதில் வலி

மையும் உண்டு—ஈவா ரேற்பாரிருவருக்கும் வருத்தமும் இல்லாதிருக்கும்.

மருந்தைக் காட்டிலும் மந்திரத்திற்குள்ள எளிமையும் வலிமையும்

ஒரு மருந்தை உற்பத்தி செய்பவனுக்குச் சிரமம் அதிகம் உண்டு. முழுதும் புறச்சாதனங்கள். மந்திரத்தை உற்பத்தி செய்துகொள்பவனுக்கோ இப்படிச் சிரமம் அதிகமொன்றும் இல்லை. பெரும்பாலும் அகச்சாதனங்களேயாகும். வைத்தியன் காடு மேடெல்லாம் சுற்றியலைந்து தழை பூண்டு கிழங்கு தோண்டி வரவேண்டும்; இவன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு சும்மா ருத்திராக்க மணியை உருட்டினலும் போதுமானது. அவன் ஓடி அலைந்து பரித்து இடித்துப் பிழிந்து, ஊற்றிக் காச்சி அறைத்தெடுத்து உருட்டவேண்டும்; இவனே உட்கார்ந்த வண்ணமே ஐம்புலன்களையும் அடக்கி உருட்டினல் போதுமானது. அவனுக்கு நூறு இருநூறு (குளிகை) உருட்ட சில பலநாள் பிடிக்கும்; இவனே ஆயிரத்தை அரை மணி முக்கால் மணி நேரத்தில் உருட்டிவிடுவான். அவனுக்கு 5 பலம் மருந்தானல் இவ்வளவுதான் உருட்டலாம் என்ற அளவுண்டு. அதற்குமேல் உருட்ட முடியாது. மருந்து முடிந்துபோகும். இவனுக்கோ பதினறோ இருபத்துநாலோ உள்ள ஒரு துளசிமாலையோ அல்லது அக்கமாலையோ கிடைத்தால் போதுமானது, எவ்வளவு வேண்டுமானுலும் உருட்டலாம், தேய்ந்தும் போகாது, குறைந்தும் போகாது; நாள்முழுதும் என்பதில்லை; வருடமெல்லாம் உருட்டினுலும் தாங்கும்.

அவனுருட்டின மாத்திரை கொடுக்கக் கொடுக்கத் தீர்ந்து விடும். இவனுருட்டின மந்திரம் கொடுக்கக் கொடுக்கத் தீராது. அவனுருட்டினதற்குக் கொடுக்கத் தேன் முலைப்பால் என்னும் அனுபானங்கள் வேண்டும். இவனுக்கு அவைகளுள் ஒன்றும் வேண்டியதில்லை. அவன் அனுபான மில்லை என்றால் அது வரையும் காத்திருக்க வேண்டும். இவன் ஒன்றை எதிர்பார்த்துக் காக்கவேண்டியதில்லை. மேல் வேட்டியின் ஒரு சிறகைக் கொண்டு காரியத்தை நடத்தி விடுவான். அவன் மூட்டை கட்டித்தூக்கிக் கொண்டு போக வேண்டும். இவன் கைவீசிக் கொண்டு போகலாம். மருந்து வெளியே இருப்பதால் பிறனுக்கு அதன் உளவு தெரிந்து விடும். மந்திரம் உள்ளிருப்பதால் அதன் ஆழநீளத்தைப் பிறர் தெரிந்து கொள்ள முடியாது; மருந்துபோட்டால் (கொடுத்தால்) மனத்தைப் புரட்டிக் கொண்டு ஓ ஓய் என்று வாந்தி வரலாம். மந்திரம் போட்டால் மனத்தையும் புரட்டாது, அடி வயிற்றையும் குழப்பாது. மருந்து போட்டுத் தீராவிட்டாலும் 10, 5 ரூபாய் மருந்துக் கூலியாவது கொடுக்க வேண்டும். மந்திரம்போட்டுத் தீரவில்லையாயின் மந்திரக்கூலி கொடுக்க வேண்டும் என்ற வழக்க மில்லை. மருந்தைச் செலவு செய்து, கொண்டுவந்த வனுதலால் மருந்துக்கூலி கொடுக்காவிட்டால் வைத்தியர் தன் தோள் வேட்டியை எடுத்து ஏற்றவன் கழுத்தில் போட்டிழுக்க நியாயமுண்டு. மாந்திரீகனோ தனக்கொன்றும் நட்டமில்லாத படியினுல், தன் கழுத்திலிருந்த வேட்டியை எடுத்து உதறித் தன் தோளில் போட்டுக் கொண்டு போய்விடுவான்.

மருந்து தேஞகி மந்திரம் மருந்தாயிற்று.

இன்னும் இம்மந்திரத்தின் பெருமையைப் பற்றிப் பேசிஞல் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது. ஆஞல் இந்தக் காலம் மருந்து தேஞகி, மந்திரம் மருந்தாயிருக்கும் காலம். இத்தகைய காலத்தின் ஆழ நீளம் தெரியாமல் மந்திரத்தைப் புகழுவோமேயாஞல் இது பைத்தியம் என்று உலகம் சொல்லும்.

உண்மையில் அந்த அளவுக்குத்தான் நமக்கும் கஷ்டமுண்டு. அதுவரையும் சிரமப்பட்டுப்போய் விடுவோமாஞல் அப்புறம் பேசுவதற்கோ, எழுதுவதற்கோ நமக்கு மாத்திரமின்றி யாருக்குமே சிரமமிருக்காதெனத் தெரிகின்றது. பைத்தியக்காரன் பேசுவதிலும் எழுதுவதிலும் யார்தான் எதைத்தான் எப்படித்தான் சொல்லிவிடமுடியும் கேட்டுவிடமுடியும்.

அவ்வளவு சிரமப்பட்டு அந்த உயர்ந்த நிலைக்குப் போய் நம்மால் சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவுக்குப் பயந்து பயந்தாவது இவ் விஷயங்களைச் சொல்லித்தாஞக வேண்டியிருக்கிறது.

தன் பெருமை தனக்குத் தெரியவில்லை

நம் நாட்டில் முன்ஞேர்களிடத்துச் சிறந்த சில சாதனங்கள் தீகக்கருவிகளாக மந்திரம் முதலியன இருந்திருக்கின்றன. அவைகள் எளிதில் பெறக்கூடியவைகளாகவும் வருத்தமின்றிக் கூடிய சீக்கிரம் பயனளிப்பனவாகவும் அமைந்திருக்கின்றன.

இத்தகைய அகச்சாதனம் ஒருநாட்டில் முன்னோர்களி டத்திலிருந்து அவை அவர்களின் சந்ததியார்களான பின்னோர் களிடத்து வரவில்லை என்றால், இது எவ்வளவு அவகேடான மோசமாகும். உலகம் புறச்சாதனத்தில் முன்னேறுகின்றது என்றால் அதற்காக எளிய சிறந்த ஒன்றைக்கைநழுவவிடவேண் டிய அவசியம் என்ன இருக்கின்றது?

பெருவருத்தப்பட்டுத்தேடி அதை உபயோகிக்கும் போதும் பெருவருத்தத்தை அடைகிறான். இத்தகைய சாத னங்களைக்கடல் கடந்து போயாகிலும் கொண்டுவருகிறேன் என்கின்றான். இதனிலும் சிறந்த ஒன்று தகப்பனாரிடத்திலும் வீட்டிலும் இருக்குமாயின் அதை ஏறெடுத்துப்பார்க்கமாட் டேன் என்கிறான், ஏனென்றுகூடக்கேட்க மாட்டேனென் கின்றான். மக்களுக்கு கஷ்டப்பட்டு தேடிக்கண்டு பிடித்தால் தான் அதன் அருமை பெருமைதெரியும் போலும். அல்லது அவர்களைக்கஷ்டப்படுத்திக் கசக்கிப் பிழிந்து கொடுத்தாலும் அதன் அருமை பெருமை தெரியும் போலும்.

எளிமையிற்கிடைக்குமாயினும் சிரமப்படுத்தாது ஒன் றைக்கொடுப்பார்களாயினும் அதன் அருமையும் பெருமையும் தெரியாதுபோலும்; "தான் தேடாப் பொன்னுக்கு மாற்றில்லை யுரைபில்லை" என்பார்களே அது சரியாகத்தான் இருக்கின்றது.

வருத்த மில்லாத பெரிய தொழில்கள்பூர் வீகச்சொத்தாக இருந்தும் அவைகளைக்கைநழுவவிடலாமா? ஒரு நாட்டுக்கோ

தேசத்திற்கோ புறக்கருவிகளைப்போன்றும் அதைக்காட்டிலும் கூட பெருமை தருவதும் வலிமையுடையதும் அகக்கருவியாகும். யாரும் எப்படியும் எதைக்கொண்டும் அதை அழிக்க முடியாதென்ற பயம் மற்றவர்களுக்கு உண்டு.

ரகஸியக்கருவி

அகச்சாதனத்தின் இயல்பைநோக்கும் போது, கிடைத்ததைக்கைநழுவ விடாமல் நாளுக்கு நாள் அதைப்பெருக்கி அத்துறையில் முன்னேறி வரவேண்டியது அவசியம் என்பது நன்கு விளங்கும்.

அதனால் அகக்கருவியான மந்திரம் முதலியவைகள் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொருவனுக்கும் ரகசியமான பெரும் செல்வமாகும். அது மாத்திரம் அன்று, பெரும் சக்தியும் ஆகும். இது அறிவியலாருக்குத்தெரியாததல்ல, சிலபொழுது அரசியலாருக்குத் தெரியாததுமாகும். ஆதலாலேதான் சில காலங்களில் இதைப் பாழ்பட்டுப்போகும் நிலையளவுக்குக் கூட விட்டுவிடுகிறார்கள்.

உண்மையில் அவ்வப்போது அரசியலார் இத்தகைய அகப்பொருள் செல்வங்களுக்கும் சக்திகளுக்கும் போதிய வசதியும் பாதுகாப்பும் கொடுத்து வந்திருப்பார்களானால் இப்போதுள்ள சீர்கேடான நிலைக்கும் அவமதிக்கத்தக்க நிலைக்கும் இது வந்திருக்காது.

மக்களது பாரம்

உண்மையில் மக்கள் பிறக்கும்போதும் பிறந்து சிலகாலம் வரையும் மிருகவியல்பாகவே இருந்துவளருகிறார்கள். பின்னர் அவர்களை மனிதர்கள் மனிதர்களாக ஆக்கவேண்டும்; அப்படியேதான் ஆக்கியும் வருகிறார்கள்.

மனிதன் செல்லவேண்டிய பாதை முழுதும் ஓரளவு ஸமமில்லை என்று சொல்லக்கூடிய ஏற்றமாகவேதான் இருக்கிறது. அதாவது மனிதன் தன் வாழ்நாள் முழுதும் செல்லச்செல்ல சிறிது உயர்ந்தே செல்லவேண்டியிருக்கிறது; இறக்கம் என்பது கிடையாது.

இப்பாதையில் நன்றாய் பழக்கப்பட்ட மக்களுக்குச் சுருசுருப்பான சில சமயங்களில் இந்தப்பாதை சிறிது இறக்கமாகவும் தோன்றும். ஆனால் உண்மையெப்படியென்றால் போகப்போக ஏற்றமாகவே தானிருக்கும். இதனை, அநேகம் பெரியோர்கள் மரணவரையும் ஓயாது சிரமப்பட்டுக் காலங்கழித்திருப்பதிலிருந்தும் கண்டுகொள்ளலாம்.

ஒரு குடும்பிக்கோ அல்லது ஒரு அறிஞனுக்கோ செல்லச்செல்லப் பாரம் அதிகமாகுமேயொழிய குறையும் என்பது இல்லை. இதை அனுபவத்தில் காணலாம். செல்லச் செல்ல பாரம் குறையும் என்று நினைக்கின்ற மனிதன், மனிதனது கடமையையும் இயல்பையும் முயற்சியின் பெருமையையும் நேர்மையாய் உள்ளவாறு உணராதவனாகும். தன்னைப்போல

வும் தன் குடும்பத்தைப் போலவும் பிறரையும் பிறர் குடும்பத்தையும் கருதுகின்றவனுக்கு இவ்வுலக பாரம் என்று குறையப்போகின்றது? அப்படியும் நேர்மையில் குறையுமானால் அவ்வுலகபாரம் இரட்டிப்பாய் வந்து கட்டாயம் தலையில் ஏறிக்கொள்ளும்.

நம்பிக்கையிழக்கக் காரணம்

இத்தகைய மக்கள் பஞ்சக்கொடுமையினாலும், மதவெறியர் மண்வெறியர் முதலியோர் செய்யும் கொடுமைகளாலும், தங்களது பூர்வீகச் சொத்து சுதந்திரம் முதலியவற்றைப் பலவிதத்தாலும் இழந்துவிடுகிறார்கள்—சில இழந்தும்விட்டார்கள்.

புறத்துள்ள நாடுநகரம் முதலிய சொத்துச் சுதந்திரத்தை இழந்து வருந்துவதைப் போல, அகச்சொத்துச் சுதந்திரமாகிய மந்திர தந்திரமணிகளையும் இழந்தவிட்டு விழிக்கிறார்கள்என்று சொன்னால், அது மிகையானதல்ல.

மக்கள் வாழையடி வாழைஎன வருகின்றார்கள் அப்படியே அவர்களிடத்துள்ள நல்ல குணங்களும் செயல்களும் தொடர்பாய் வரவேண்டியிருக்கின்றன; ஆனால் மேற் சொன்ன படியாயுள்ள பலகாரணத்தாலும் அடிபட்டுத் தொடர்பு விடுபட்டுப் போன மக்கள் மந்திர முதலியவற்றின் வலிமையை இழந்துவிடுகிறார்கள். இப்படியே சில தலை முறையும் சென்று விடுமானால், இம் மக்கள் என்ன செய்வார்கள் பாவம்! திக்கற்றவர்களாய் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும், ஒரு திறமையாளன் எழுந்து எப்படி எல்லாம் ஆட்டுகின்றானோ அப்படி எல்லாம் ஆடுகின்றவர்களாகவும், அவன் பின் ஓடுகின்றவர்களாகவும்

கூட அமைந்து விடுகிறார்கள். அதனால் சில சமயம் முன்னுள்ள பலவற்றில் நம்பிக்கை இழந்தும் விடுகிறார்கள்.

மந்திரத்திற்கு சக்தியில்லை என்றால் அது மனத்துக்கு அதைப்பற்றி மனனஞ் செய்யச்சக்தியில்லை, என்று தான் பொருளாகும். உண்ட அன்னம் இரத்தமாக அமையவில்லை என்றால் அது ஜீரணக் கருவிகளில் ஏதோகோளாறு இருக்கின்றது என்று தான் அருத்தமாகும். அதனாற்றான் இவன் சோறுண்டும் இளைத்துப் போகின்றான் என்பது விளங்குகின்றது.

ஒன்றைப் பற்றி நின்று அழுத்தமாக மனனம் செய்யச் சக்தியில்லாத மனம் மந்திரத்தாலுளதாகும் காரியங்களைப் பற்றிச் சந்தேகம் கொள்ளுவது இயல்புதான்; அத்தகைய மனம் முயற்சித்தாலும் எளிதில் முடியாது. முடிவதானாலும் பலகாலஞ் செல்லும்.

மற்ற பொருள்களில் மோகமில்லாமலும் துராசையும் துரபிமானமும் இல்லாமலும் யாதானுமொரு மந்திரத்தை உறுதியோடும் நம்பிக்கையோடும் எண்ணிவரவேண்டும். எண்ணும் காலம் சிறிதாயிருந்தாலும் குற்றமில்லை. எண்ணும் போது இடையில் எந்த நினைவும் சிறிதும் புகாதிருக்க வேண்டும். குறித்ததை எண்ணுதிருக்கவும் படாது. அதாவது தூங்கி விழவும் படாது; வேறொன்றை எண்ணவும் படாது. இந் நிலையில் நான்கு நிமிடமோ பத்து நிமிடமோ அரை நாழிகையோ இருப்பது, நலம். இவ்வாறு நம்பிக்கையோடும்

உறுதியோடும், அழுந்தி நிற்பது எந்த அளவில் இருக்கின்றது என்பது தனக்குத் தெரியும். அப்படியே அந்த அளவுக்குண்டான நன்மையையும் மனச் சாந்தியையும் மனிதன் (மனன சீலன்) தன்னனுபவத்தால் தானே உணர்ந்து கொள்ளலாம். மனவலிமையைப் பெருக்க மந்திரம் மிகச் சிறந்த சாதனமாகும்; 'யார் தன்னை மனனம் செய்கின்றார்களோ" அவர்களைக் காக்க வல்லதே மந்திர" மெனப்படும்.

மந்திரப் பொது.

மனனம் செய்பவரைக் காப்பது மந்திரமாகும்; அது பஞ்சாக்கரம் அஷ்டாக்கரம் காயத்ரி முதலாகப் பல சிறந்த மந்திரங்கள் உண்டு. இவைகளெல்லாம் பல கோடி வருஷங்களாய்த் தொடர்ச்சியாகப் பல பெரிய அரசர் முனிவர் உத்தம உத்தமிகள் நாவில் தாண்டவமாடின. இருதயத்தில் உருவெழுதித் திகழ்வனவாகும்.

இவற்றுளெல்லாம் இத் தமிழ் நாட்டுக்கு முக்கியமாய் சிறந்ததாய் முடிந்ததன் முடிபாய் யாவருக்கும் எளிதாயுமுள்ள மந்திரம் முருகமந்திரமாகும். இது எல்லா மந்திரங்களின் பொருளையும் தெய்வ சக்தியையும் உட்கொண்டு விளங்குவதாகும்.

சங்கை—மந்திரம் என்பது சில எழுத்துக்களின் கூட்டமான சொல்தானே இது எப்படி மக்களை மனனம் பண்ணினவனைக் காப்பாற்றும் என்று கேட்கலாம். உண்மைதான்—

இதற்கு கீழ்வரும் உதாரணத்தைக் கண்டு ஒரு அறிவாளி ஐயத்தை நீக்கிக் கொள்ளமுடியும்.

மாட்டைப் பிடிப்பதா கயிற்றைப் பிடிப்பதா?

ஸமாதானம்—சிறிது இங்கு நில்லுங்கள்! மீண்டும்போகலாம். மாடு என்பது முன்பாகக் கொம்பு நுனியிலிருந்து பின்பாக வால் நுனிவரையும் கீழே கால் குளம்பு வரையிலும் உள்ள பாகந்தான்—இதையே மாடு என்கின்றோம். இனி:—"பையன் மாட்டைப்பிடித்துக்கொண்டு காட்டுக்கு போனான்" என்பதைக் கவனிப்போம்.

இந்த இடத்தில், முன் கண்டபடியாயுள்ள மாட்டில் எந்த பாகத்தைப் பிடித்துக்கொண்டு காட்டுக்குப்போனான்; என்பதை இங்கு நாம் ஆராயவேண்டும். உண்மையாகப் பையன் மாட்டின் கொம்பையோ வாலையோ காலையோ பிடித்துக்கொண்டு காட்டுக்குப்போகவில்லை. ஆனாலும் மாட்டைப் பிடித்துக்கொண்டு போனான் என்கின்றோம். அப்படியானால் பையன் கையில் இருந்தது என்ன? அது தான் கயிறு.

அந்தக்கயிறுக்கும் மாட்டுக்கும் தொடர்புண்டு. அதே கயிறுக்கும் பையன் கைக்கும் தொடர்புண்டு. இதனால் அவன் கயிற்றைப்பிடித்துக்கொண்டாலே மாட்டைப்பிடித்துக்கொண்டவனாகி விட்டான். இதனால் மாட்டைப்பிடித்துக்கொள்ளாவிட்டாலும் மாடு அவனிஷ்டம் போல் அவனோடு தொடர்பு பட்டு வருகிறதையும் அவன் நின்றால் நிற்கின்றதையும் அவன் போனால் போவதையும் யாவரும் கண்கூடாக காண்கின்றோம்.

இவ்வாறல்லாமல்—நாம் "மாட்டைப்பிடித்துக்கொண்டு காட்டுக்குப்போ" என்ற உடனே அந்தப்பையன் போய் கொம்பையோ வாலையோ பிடித்திருப்பானாயின் அந்தப்பையன் கதி என்னவாகி இருக்கும்? அப்படியும் அது உதைக்கவும் இல்லை முட்டவும் இல்லை என்று வைத்துக்கொண்டாலும் கொம்பையோ வாலையோ பிடித்துக்கொண்டு எந்த முறையில் அதற்கு அவன் வழிகாண்பித்து நடத்துவது? இந்த அசௌகரியத்தினாலேதான் மக்கள் மாட்டைப் பிடிப்பதற்காக மாட்டோடு தொடர்புடைய கயிற்றைப் பிடித்துக்கொள்கிறார்கள்.

இதுபோலவே நாம் முருகன் விஷயத்திலும் கண்டு கொள்ளலாம்.

'முருக' என்பது கடவுளோடு நல்ல சம்பந்தமுடைய சிறந்த வலிய கயிறாகும். அங்கு மாடானதால் கயிறு போட்டிழுத்தோம்; இங்கு கடவுளானதால் மந்திரம் என்னும்கயிறு போட்டிழுக்கிறோம். அங்கு மாடு தூலப்பொருளானதால் கண்ணுக்கு நன்றாய்த் தெரிகிறது; இது காற்றுப்போல சூக்ஷுமப் பொருளானபடியால் கண்ணுக்குத் தெரிகின்றதில்லை. ஆனாலும் மந்திரங்கொண்டு நம் முன்னோர்கள் கடவுளை இழுத்து இருக்கிறார்கள்.

மந்திரக்கயிறு போடும் இடம்

மக்கள் மாட்டுக்குக் கயிறு போடும்போது, அதன் கழுத்திலேயோ, கொம்பிலேயோ போடுவார்கள். இன்னும் அடங்

காததாயிருக்குமானால் மூக்கைத் துளைத்தும் கயிற்றைப் போட்டுத் தம் வசமாக வைத்திருப்பார்கள்.

இங்கும் இம் மந்திரக்கயிற்றை இறைவன் விஷயத்திலும் மூன்று முறையாகவும் போட்டுக்கொள்ள முடியும். ஆயிரம் பல்லாயிர வருடம் தபசு செய்து கடவுளைக்கண்டவர்கள் கழுத்துக் கயிறிட்டாராகும். நூறு வருஷம் தபசு செய்து ஆண்டவனைக் கண்டவர்கள், ஒரு மண்டலம் ஜெபம் செய்து ஆண்டவனைக் கண்டவர்கள் என்று சொல்லப்படுகின்றவர் களெல்லாம் கொம்புக் கயிறு போட்டவர்களாகும். கண்ணப் பர் போல 6 நாளிலும், இன்னும் ஒருநாளில் ஒரே தடவை 'முருகா' என்று சத்தமிட்டுக் கடவுளைக் கண்டவர்களும், அப்படியே ஒரு தடவை 'முருகா' என்று கூப்பிட்ட மாத்தி ரத்தில் திரும்பிப் பார்க்குமளவிற்கு கடவுளைக் கொண்டவர் களும் மூக்கில் கயிறு போட்டு மாட்டிக்கொண்டவர்களாகும். மூக்கில் கயிறு போட்ட மாட்டை ஒரு தடவை இழுத்தால் போதுமானது, அது அப்படியே அலறித் துடித்து அவன் வசமாக நிற்கும். இவ்வாறு கடவுளிடத்து மூக்குக்கயிறு போல முருக மந்திரத்தை மாட்டிக்கொண்டவன், ஒரு தடவை 'முருகா' வென்றாலும் போதுமானது. அப்படியே துள்ளிக் குதித்து இவன் வசமாக நின்றுவிடுவான்.

முருகக்கடவுளுக்குக்கூட மூக்குக்கயிறு மந்திரம் போட வேண்டுமா? என்று கேட்கலாம். உண்மையில் போடவேண் டியதுதான். அடங்காதபேர்வழிகளில் முதல் பேர்வழி இந்த முருகக்கடவுள்தான். வேதத்திற் கடங்காத பொருளில்லை

என்பார்கள். இந்தசாமி அந்த வேதத்திற்குள்ளும் அடங்கமாட்டான்; அப்படியானல் இனி—ஆகமபுராணத்துளெல்லாம் அடங்குவானு? என்று கேட்பானேன்? அப்பனுக்கே அடங்குவதாக யில்லை. இனி சிற்றப்பனுக்கா (பிரமாவுக்கா) அடங்கியிருக்கப்போகிருன்? எல்லாம் படைத்தவன் என்ருெருவன் வந்தால் அவன் தலையில் கையைக் குவித்துப்படைக்கின்ருன்: எல்லாமறிந்தவன் என்ருெருவன் வந்தால் அவன் காதில் வாயைக்குவித்துப்படைக்கிருன்.

இத்தகைய எதற்குமடங்காப் பெரும் பொருளை கட்டியடக்குவதற்கும் ஒரு வலிய கயிறு உளதென்ருல் அது தென்மொழியில் முருக மந்திரமேயாகும். ஓம் காரமானது எவ்வாறு வடமொழி மந்திரங்களனைத்தையும் விழுங்கியுமிழும் இயல்போடுங் கூடியிருக்கின்றதோ—அவ்வாறே தென்மொழியினும் இந்தச் சிறந்த முருக மந்திரமானது, அனைத்து மந்திரங்களின் பெருமையையும் அள்ளி உண்டு, அகத்தடுக்கிப்புறத்தே வெளியிடும் ஆற்றலுள்ளதாக இயல்பில் அமைந்திருக்கின்றது. இதற்குப் பொருள் எதுவோ அதுவே அந்த ஓங்காரத்திற்கும் ஆகும்.

முருக மந்திரப் பொருள்

மற்ற மந்திரங்களின் எழுத்துமுறை வைப்பையும் இதன் வைப்பையும் நன்ருய்க்கவனித்து ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் அரிய பெரிய பொருளையும், அவ்வெழுத்துக்கள் கலந்த கலப்பின் பெருமையையும் நன்ருய் உணர்ந்து முருகனைத்

தியானம் செய்யும் பெருமக்களின் உள்ளத்திலும் அவர்கள் குடும்பத்திலும் தேசத்திலும் முருகன் தாண்டவமாடிக்கொண்டிருப்பான் என்பதில் ஐயமென்ன இருக்கின்றது?

இம் மந்திரத்தில் தெய்வவியல்புகளெல்லாம் நிரம்பிய பகுதிகள் காணப்படுகின்றன. உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் 'முருகு' என்பது அழகு இன்பம் இனிமை எளிமை இளமை முதலிய சிறந்தபொருள்களைக் கொடுத்துக் கொண்டிருப்பதை நன்கறியலாம். முருகன் என்பது இவ்வுயர்ந்த பண்புகளெல்லாம் பூரணமாய் நிறைந்து வழியும் ஒரு சச்சிதானந்தப் பெரும் பொருளை உணர்த்திக்கொண்டிருக்கிறது.

இதில் 3 உயிர் மெய்கள் உண்டு. இரண்டு உகரம் ஒரு அகரமும் ம் ர் க் என 3 மெய்களும் உண்டு. இதில் அகரம் எல்லா உயிருக்கும் எழுத்துக்கும் முதலானது. ஆதிபகவானாகிய கடவுளுக்கு முதல் பெயராயுள்ளது. உண்மையில் அது சொல்லுலகம் முழுமைக்குமே உபாதான(முதல்)காரணமாயுள்ளதுமாகும். ககாரமோ அப்படியே எல்லாமெய்க்கும் முதல் மெய்யாய் எல்லாச் சடப்பொருளுக்கும் மூலகாரணமான மூலப்பிரகிருதியின் வாசகமாகும். இதுவும் கடவுட் சொல்லின் முதற் குறிப்பாயிருந்து ஆதியுண்மைக் கடவுளையே உணர்த்தும்.

இவ்விரண்டு எழுத்துக்களும் இரு முறையிலும் தலைமையாயிருந்து தலைவனையே நேரே சொல்லுவதாயமைந்ததானது மிகவும் போற்றத்தக்கதாகும். ஆதியிலுள்ள இவ்விரண்டும்

இரண்டறக்கலந்து முருக மந்திரத்தின் அந்தத்தில் வந்து வீற்றிருக்கும் பெருமை நம்மாலளவிட முடியாததாயிருக்கின்றது.

ஒரு படி பாலும் ஒரு படி நீரும் இரண்டறக்கலக்கும். கலந்தபின் பால் இது, நீர் இது எனவேறுபடத் தெரியாது. ஆனாலும் ஒன்றும் ஒன்றும் இரண்டு படி என்னும் அளவு வேற்றுமை இருக்கத்தான் செய்யும். இப்படியும் அல்ல இந்த முதற்பொருளைச் சொல்லும் முதலெழுத்துக்களின் கலப்பு. பின்னெப்படி யென்றால் கலந்தபின்னும் அளவு மாத்திரையிலும் அதிகப்படாமல் ஒன்றாகவே இருக்கும். க்—மெய்யுக்கு அரை மாத்திரை, அ-உயிருக்கு ஒரு மாத்திரை ஆக 1½ மாத்திரை அளவுள்ளவைகள் ஒன்றுபட்டு 1 மாத்திரை அளவாகவே இருக்கின்றன. உண்மையில் யோசிக்குமிடத்து இக்கலப்பின் பெருமையும் அளவிடற் கரிதாயிருக்கின்றது. இதற்கோர் உதாரணம் சொல்லவேண்டுமானால் இந்த உடலுயிரைத் தவிர வேறெதைச்சொல்லி விளக்கமுடியும்? மெய்யும் உயிரும் சத்தும் சித்துமாய் இரண்டறக்கலந்து இன்பம்வழிய நிற்கும் இந்நிலைக்கு உவமைகாண வேதமே விழிக்கின்றது என்றால் மற்றதைப்பற்றிப் பேசுவானேன்?

ஆனாலும் வேதம் சிரமப்பட்டு இரண்டறக்கலந்த இந்த மேலான ஒற்றுமையை சொல்லிக்கொண்டுதானிருக்கின்றது.

வீட்டில் இருந்தது 4 குண்டுமணி எடையுள்ள பொன்னாகும். அதைப் பொன்னாக வைத்திருந்து என்னசெய்வது என்று மோதிரஞ் செய்யக்கொடுக்கப்பட்டது.

மீண்டது 4 குண்டுமணி எடையுள்ள மோதிரமாய் ஆசாரியால் கொண்டுவரப்பட்டது. சரி—ஆனால் ஆசாரிமோதிரங் கொண்டுவரும் போது அதற்குக் கொடுத்த பொன்னை வீட்டில் வைத்து விட்டு வந்தானா? இல்லை. மோதிரத்தோடு கூடத்தான் கொண்டுவருகிறான். அப்படியானால் அதற்கு நாலு இதற்கு நாலு ஆக எட்டு குண்டுமணி எடை இருக்குமா? மோதிரத்தைத்தானே கொண்டுவந்திருக்கிறான். தங்கம் எங்கே? மோதிரமாகத்தானிருக்கிறது. உரைத்தால் பொன்மாற்றுக்காணப்படுகிறதே! அதற்குள் இதை எப்படி வைத்தான், உண்மையாக இதுமோதிரந்தானா அல்லதுதங்கமா? மோதிரமில்லை என்றால் விரலில் அணிய முடியாது; பொன்னாயில்லை என்றாலும் உறைகல்லுக்கு நிற்காது; இரண்டும் இருக்கும் என்றால் இரண்டுக்கும் சேர்ந்து 8 குண்டுமணி எடை இருக்குமா! இல்லை. இரண்டுக்கும் சேர்ந்து 4 தான் என்றால் பொன்னுக்கு 2 பணிக்கு இரண்டாக இருக்குமா? இப்படியெல்லாமில்லை என்றால் பின்னெப்படித்தான் அவை ஒன்றுபட்டிருக்கின்றன? என்ற கேள்விகள் வரும்.

இந்த இடந்தான் உண்மையில் சிறிது சங்கடமான இடம். அறிஞராக மதிக்கப்பட்டவர்கள்கூட முன்னாளில் இந்தவிடத்தில் ஏமாந்து போயிருக்கிறார்கள். உண்மையில் 8 குண்டுமணி எடைதானிருக்குமோ என்று பயந்தும் மயங்கியும் இந்த விசாரத்தைத்தாங்கமாட்டாமல் இந்த வேதப்பொருளினின்றும் மெல்ல அப்புறம் நகர்ந்தவர்களும் உண்டு.

பொன் வீட்டிலிருக்கும்போது மோதிரமில்லை; அது ஆசாரி வீட்டுக்குப்போய் வந்தபோது மோதிரமிருக்கிறது. பொன்னும் மோதிரத்தில் இருக்கிறது. மோதிரமிருப்பதால் தான் முன் அணியமுடியாததைப் பின்னர் விரலுக்கு அணிகின்றான். அதில் பொன்னும் இருக்கின்றது. முன்னே செம்பொன்னாயுள்ளது, இப்போது கரும்பொன்னாகிவிடவில்லை. முன் பத்தரைமாத்தாயுள்ளது இப்போது ஐந்தரை மாற்றுமாய் விடவில்லை. அதனிலும் பளபளப்பாகவேயிருக்கிறது. நிறையும் குறையவில்லை. மாற்றும் மாறவில்லை. இரண்டும் ஓரிடத்திருக்கின்றன. இரண்டறக்கலந்து அத்துவிதமாய் விளங்குகின்றன. இந்த மேலான ஒற்றுமையின் பெருமையினால் இரண்டுக்கும் ஒரே எடைதான் (4) இருக்கின்றது.

பொன்னைத்தவிர மோதிரத்திற்கு என்று அணுமாத்திரமும் வேறில்லை. எந்தவிடத்தில் உரைத்துப் பார்த்தாலும் வெட்டிப்பார்த்தாலும் பொன்னேதான் இருக்கின்றது. ஆனாலும் அதில் மோதிரமும் இருக்கின்றது. அப்படியானால் பொன் மோதிரத்துக்குள்ளா, அல்லது மோதிரம் பொன்னுக்குள்ளா? என்றும் கேட்கலாம். நல்லது, கேட்கவேண்டியதுதான். தட்டிக்கேட்டு நேர்மையில் விபரமாய்ப்புரிந்துகொள்ளாதவரையிலும் இவ்விஷயத்தில் அமைதி ஏற்படாது. இதில் அமைதி ஏற்படாமல் மீண்டும் எதில் அமைதி ஏற்பட்டாலும் அது கலவரத்தை உண்டுபண்ணிக்கொண்டுதான் இருக்கும். தெரிந்தவர்களும் தம்மாலியன்றவரை பொறுமையுடன்

வேதம்போல விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் அது அவர்களுக்கு உரிமைப்பட்டதுங்கூட.

4 குண்டுமணி பொன்முழுதிலும் பணி இருக்கிறது. அப்படியே மோதிரம் முழுதும் பொன் இருக்கின்றது. ஆனால் இவ்விரண்டுக்கும் கனம் முதலானவையும் அவை இருக்கும் நிலையும் எப்படி என்றால், அது வருமாறு:— ஒன்றில் வேறொன்று முழுதுமாக இருக்கின்றது; என்றால்— காரியமும் அதன் முதற்காரணமுந்தான் இப்படி இரண்டறக் கலந்த நிலையில் அதுவாக இருக்க முடியும். இப்படிப்பட்ட இடத்தில்தான் இரண்டுக்கும் சேர்ந்து ஒரே எடை, நிறம் முதலியன கூடும், இதில் அதற்குப் பகுதி இதற்குப் பகுதி என்பதில்லை. கனம், மாற்று, நிறம் முதலிய எல்லாம் காரணத்துக்குள்ளேயாகும். காரியத்திற்கென்று காரணத்தைத்தவிர ஒரு அணுமாத்திரமுங்கூட வேறு இல்லை. காரணமே காரியமாயமைந்திருக்கிறது. இவ்விரண்டுக்கும் பாலும் நீரும்போலப் பொருள் வேற்றுமை கிடையாது. காரியம் காரணம் என்பதைத்தவிர வேறு வேற்றுமை யிராது. இந்த இடத்தில்தான் இரண்டிற்கு இரண்டற்ற அபேத நிலை கூடும். இங்கு பொன் பணியாகவும் இருக்கும் பொன்னாகவும் இருக்கும். இதனாற்றான் இருமையும் கூடி, நேரிய ஒருமையும் கூடுகின்றது. இப்படியேதான் ககரமும் அகரமும் கூடிக்கலந்தும் ஒருமாத்திரையளவாயிருக்கிறது.

இன்னும் அகரமும் ககரமும் கூடி முருகமந்திரத்தின் முடியில் நிற்குமிது மிகமுடிந்த வேதப்பொருளை விளக்குகின்றது.

மெய்யெழுத்து என்று ஒன்று தனித்திருந்து அதை உயிர் கூடிக்கலந்து எழுப்பி நடத்துகிறது என்னும் வழக்கொன்றுண்டு. இது மூலப்பகுதி என்றொருமாயை தனித்துண்டு; அத்தோடு கடவுள் இரண்டறக் கூடிக்கலந்து அதை எழுப்பி இவ்வுலகமாக ஆக்கி நடத்துகின்றார்! என்னும் பேத—விசிட்ட அத்துவித சித்தாந்தங்களுக்கு விளங்கிய எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது.

இனி அகரமாகிய மூல ஒலி ஒன்றே பலவெழுத்தாகிப் பயின்று எழுத்து—சொல்—வாக்கியம் எனப் பொருள் பிரபஞ்சத்தின்மேல் நடக்கும் சொற்பிரபஞ்சமாயிருக்கும் என்னும் பெருவழக்கும் ஒன்று உண்டு. இது பருத்தி ஒன்றே பஞ்சு திரி, நூல், வேட்டி, துண்டு, சீலை, சட்டை, முதலாக ஆகிப் பலவாய்ப்பயின்று மக்களது மானங்காப்பதுபோல அகரமாகிய மூலஒலி ஒன்றே மற்றஉயிர் மெய்வர்க்கமெல்லாமாகிச் சொல் லுலகமாய்விளங்குகின்றது என்பதாம். இது அகரவுயிரின் வாச்சியமான ஒரு பரம்பெரும்பொருள் மூலப்பகுதி முதற்கொண்டு உடம்பீறுகிய பொருட்பிரபஞ்சமனைத்துமாய் விளங்குகின்றது என்பதைத் தெற்றென விளக்கும் அரிய எளிய வெடுத்துக் காட்டா யமைந்துள்ளது.

பலவற்றில் ஒன்றுபுகுந்து ஆட்டுகின்றதா? ஒன்று பலவாகி ஆடுகின்றதா? என்று இந்தவிடத்தில் ஐயம் நிகழும். உண்மைதான் இருட்டில் இது கட்டையா கள்ளனு என்று வரவேண்டியதுதான். பொழுது புலர்ந்தபின்னுமா அந்த ஐயமிருக்கும். திருவாசகவானில் "உலகு ஏழெனத் திசைபத்

தெனத் தானொருவனுமே பலவாகி நின்றவா தோணேக்க மாடாமோ" என்னும் ஞானசூரியனுதித்தபின்னுமா இத்தகைய ஐயங்கள் இருக்கப்போகின்றன?

ககரம் மெய்யெழுத்துக்களுள் ஆதியாய் இருப்பது இருப்புமாத்திரத்தை முக்கியமாயுடைய சூக்கும ஆகாயம் முதற்கொண்டு தூல உடம்புவரையுமுள்ள பொருள்பிரபஞ்சம் முழுமைக்கும் மூலகாரணமாயுள்ள மூலப் பிரகிருதியை உணர்த்தும். அந்த அகரவாச்சியமான பரம்பொருளே இந்தக் ககரவாச்சியமான மூலப்பகுதி முதல்யாவுமாயிருந்து நடிக்கின்றது என்பதை "ஒன்றாய் உலகனைத்தும் ஆனாய் நீயே, ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே, உலகுக்கோருவனாய் நின்றாய் நீயே" நின்னுவார் பிறர் இன்றி நீயேயானாய்" முதல் தனிவித்தேயோ முழுமுவுலகாதிக் கேல்லாம்" அகர முதல்எழுத்தேல்லாம் ஆதிபகவன் முதற்றேஉலகு" என்னும் அரசவாக்கு முதற்கொண்ட முப்பெருமக்கள் வாக்கும் இமசிகரமென எங்குமுள்ளாருக்கும் விளக்கிக் கொண்டிருக்கின்றன. (இப்பகுதியில் ஐயம் நிகழுமாயின் பரமாத்வைத ஸித்தாந்தமென்னும் நூலில் தெளிந்துகொள்ளலாம்.)

(1) இதில் ஓரளவு மக்களுக்கு அகர ஆகாரவரிசையிலுள்ளவைகள்தான் உயிர் எனத்தெரியும், ககரம்—கா—கி—கு—கே—கொ—கௌ—முதலியவற்றில் உயிருண்டு எனத் தெரியாது. இவ்வாறு ஒரு பகுதி உண்டு. உலகப் பொருள்கள் யாவையும் அணு பரமாணுவரையும் பிரிக்கக்கூடத்

தெரியும்; ஆனால் அதில் உயிர்ப் பொருளொன்றுண்டு எனத் தெரியாது; இப் பகுதி மண்ணாதி பொருள்களில் அதன் காரணமான ஆண்டவனைச் சிறிதும் அறியாததாய் இருக்கும். (2) இன்னொருபகுதியுண்டு, அது:- இந்தக் ககாரமுதலிய எல்லா எழுத்துக்களிலும் மெய்களோடு உயிரும் உண்டு என்பதாகும். இது ஒரு நடுப்பகுதி, மண்ணாதி எல்லாப் பொருளிலும் அகரவாச்சியனை அவனும் ஊடுருவிக் கலந்துமிடைந்து இருக்கின்றான் எனக்கொள்வதாகும். (3) மேலும் ஒரு பகுதியுண்டு, உண்மையில் அது மேற்பகுதியுமாகும். அகரமுதல எழுத்தெல்லாமென்றதால் (முதல் = முதல் காரணம் = உபாதான காரணம்) காரியமுழுதும் முதற்காரண சொரூபமாய் (வடிவமாய்) இருக்கும் என்பது நியதியாதலின் வேறுபட்ட எல்லா எழுத்துக்களுள்ளும் அகரமாகிய பரமூலநாதத்தையே வேற்றுமையின்றிக் காண்பதாகும். இது காரியவேற்றுமையில் மயங்கி விழாமல் எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளில் காரணமான மெய்ப்பொருளைத்தேடி, முழுதிலும் மேலான ஒற்றுமை கண்டு யாவும் சரிஎன அதனதன் மரியாதை கடவாமல் அணைத்துக்கொண்டுபோவதாகும். எவ்வளவோ வேற்றுமையான எழுத்துச் சொல் வாக்கியம் முதலனைத்துச் சொற்பிரபஞ்சமும் பிரித்துப் பிரித்துப் பார்க்குமிடத்து மூல ஒலியல்லையைத்தவிரச் சிறிதுமில்லை என்று காண்பதுபோல அப்படியே (பாஞ்சபூதிகம் அனைத்தும்) "தேய்ந்து தேய்ந்து சிவமல்லதில்லை என்று ஓய்ந்து போனது என்னுள்ளம்" என்றபடியில் காரணமான

சிவசொரூபத்தையே கண்டு காரியப்பிரபஞ்சத்தையும் அக் காரண சிவவடிவமாகவே காண்பதாகும்.

இவ்வாறு கடவுளுக்கும் உலகிற்கும் உண்டான பரம அத்துவித நிலையைத் தெளிய உணர்த்தும் ககார அக்ஷரத்தை சிகரமாகவுடைய மஹாமந்திரம் முருகமந்திரமேயாகும். மற்ற பிரசித்த மந்திரங்களுக்கும் இத்தகைய வாய்ப்புக் கிடைக்க வில்லை.

இன்னும் இதில், மூன்று உயிர் மெய்யெழுத்திலும், மெல்லெழுத்தான மு-என்பதை முன்னேயே நிறுத்தி, இடையினமான ரு-என்பதை இடையிலேயே நிறுத்தி வன் கணத்தைக் கடைசியில் நிறுத்தியமைந்த முறைமையானது காலாள்படை குதிரைப்படைகளைப் முன்னிறுத்தி வலிய யானைப்படையைப்பின் நிறுத்திய சிறந்த சேனை போன்று காணப்படுகிறது.

எதற்கெல்லாம் பின்பல முண்டோ அது உண்மையில் தோல்வியடையாது, ஜெயம் பெறும். உலகமெல்லாம் தோன்றுதற்குமுன்னுள்ள மௌன நிலை-ம்-என்பதாகும், இது ஓங்காரத்தின் கடைசி எழுத்தாகும். இந்த நிலையிலுள்ள கடவுள் உ-என்னும் சத்தியோடு கூடி ரு-என்னும் உலகத்தை உண்டாக்குகிறது. இப்படி இருந்தும் "எல்லாம் சிவமென நின்றாய் போற்றி" என்ற அப்பர் வாக்குக்கு இலக்கியமாய் ககரமானது காரியமனைத்தும் காரணத்துக்குவேறில்லை என்ற பெரும் பொருளை உணர்த்திக்கொண்டு முடியில் சிகரமென விளங்குகின்றது.

இன்னும் இம் மந்திரத்தின் தனித்தனி எழுத்தின் பெருமையும் அவை சேர்ந்து கொடுக்கும் பொருட் பெருமையும் இதை ஓயாது தூக்கத்திலும் ஜெபித்து நாத்தழும்பேறிய அகத்தியர் முதலிய பெருமக்களே நன்குணர்வார்கள்.

முருக மறைத்தனிச் சிறப்பு.

ஒரு சொல் இரண்டு பாலிலும் வருதலும் உண்டு. அதாவது பிரசித்த மந்திரங்களும் நாராயணன் என ஆண்பாலில் வருவது 'நாராயணி' எனப் பெண்பாலில் வரும். 'சிவன்' என ஆண்பாலில் வருவது பெண்பாலைக்குறிக்கும்போது 'சிவை' என வரும். அப்படியே 'மஹேசவரன்' 'மகேச்வரி' 'குமரன்' குமரி 'அழகன்' 'அழகி' என்றெல்லாம் மந்திரச் சொற்களும் மற்ற சொற்களும் இருபாலிலும் கலந்து வருவதைக் காண்கின்றோம்.

இவைகள் இப்படியாகவும், நமது 'முருக' மந்திரமோ இவ்வாறு ஒரு மாறுதலும் அடையக்காணோம். பெண்பாலை உணர்த்துவதற்காக, 'முருகி' என்றோ அல்லது 'முருகீ' என்றோ, அல்லது 'முருகை' என்றோ நாம் எவரும் கூறக் கேட்டதுமில்லை, எழுதக் கண்டதுமில்லை. இன்னும் ஆண்பாலில்கூட பன்மையை உணர்த்துவதற்காகவாவது அல்லது உபசார உயர்வுக்காகவாவது, 'முருகர்' என்று வருவதைக் கூடக் கண்டோமில்லை. ஒரு பக்தனாவது உபசார வழக்குக்காகவாவது 'முருகரே' எனக் கூப்பிடுவதைக் காணோம். முருகனை என்பார்கள். இன்னும் வேண்டுமானால் கடையிலுள்ள னகர

மெய்யெழுத்தைக்கூட எடுத்து விட்டு 'முருகா முருகா' என்றே அழைப்பார்கள். அதுவே முருகனுக்குப் போதிய தனிச் சிறப்புடையதாகவும், இன்பமாகவும், பொருத்தமாகவும், அமைகின்றது.

இன்னும் 'சிவன்' என்பதைச் சிலர் ஒருவித உயர்வு கருதிச் 'சிவம்' சதா சிவம், என அஃறிணையில் கூறுவதையும் அவரும் அதைச் சகித்துக்கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் நம் முருகனோ அத்தகைய 'முருகம்' என்னும் மாறுபாட்டைக்கூட ஒருபொழுதும் சகித்துக்கொள்ள மாட்டான்.

எதைக் கருதியும், எத்தகைய மாறுபாட்டை வேண்டுமானாலும், மற்றயக் கடவுளின் பெயர்களாகிய மந்திரங்கள் அடைகின்றன. முருக மந்திரமோ உயர்வைக் கருதியும், பெண்பாலைக் கருதியும், பன்மை எண்ணைக் கருதியும், யாதொரு மாறுதலும் அடைகின்றதில்லை.

இப்படியிருந்தாலும் முருகமந்திரம் ஆண்பாலையும், ஒருமை• எண்ணையும் மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டு இரண்டுக்கும் சேர்ந்து அன்விகுதியை மாத்திரம் ஏற்றுக் கொள்வதாயிருக்கின்றது.

எதற்காவும் ஒரு மாறுதலையும் ஏற்றுக்கொள்ளாத இந்த 'முருக மந்திரம்' எது கருதியோ இந்த ஆண்பாலொருமையை ஏற்றிருக்கிறது. இந்தவிடத்தில் சிறிது நின்று நாம் விசாரிப்

போமானல், 'மந்திர விசாரமுள்ளவர்களுக்குச் சில மெய்ப் பொருள்கள் உள்ளவாறு விளங்கலாம் எனத்தெரிகின்றது. அதனுல் அப்பொருளிலுள்ள தெளியாத பேரையங்களும் எளிதில் தெளிய வழி பிறக்கின்றதென்பதும் தெரிகின்றது. ஏனென்ருல்,எல்லாவற்றுள்ளும் தெளிந்த பொருள்'முருகன், ஞானமேனியன். ஊனக்கண்ணைப் பிறப்பிடமாக உடைய மக்களே ஞானக்கண் பெற்றவர்களாக வீற்றிருக்க முடியும் என்ருல், ஞானக் கண்ணையே பிறப்பிடமாக உடைய ஒருவனைப் பற்றிக் கேட்பானேன். ஆதலால் அவனை அறியத் தொடங்கி அவன் மந்திரத்தை விசாரிக்கும் போதாவது மற்றவற்றிலுள்ள தீராத பெரிய ஐயங்களெல்லாம் போய்விட வேண்டாமா? அங்கிலையிலல்லவோ அவன் மந்திரமும் அமைந்திருக்கும். ஆதலின் சிறிது ஒருமைப்பட்டு விசாரித்துத் தெரிந்து கொள்ளுவோமாக.

ஒன்றே தெய்வம்.

முதலில் தெய்வம் ஒன்ரு பலவா என்ற சந்தேகம் அடிபட்டுப்போகிறது. முருகன் என ஒருமையைத் தவிர மற்ற விகுதிகளை ஏற்காதது இதை நன்ருயறிவிக்கின்றது.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்ற பட்டினத்தார் வாக்கும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலர் வாக்கும், "ஒன்ருய் உலகனைத்தும் ஆனுய் நீயே" என்ற நாவரசர் வாக்கும் "ஏகோ தேவ சாக்ஷி" என்ற உபநிடதவாக்கும் "முதல் தனிவித்து முழுமுவுலகாதிக்கெல்

லாம்" என்னும் நம்மாழ்வார் வாக்கும் இதை வற்புறுத்துகின்றன.

இவ்விடத்தில் மதவாதிகள் என்ன சொல்கின்றார்களென்றால்:—

உண்மையில் வேதம் சொன்னபடியும், பெரியோர்கள் கண்ட முறைப்படியும், தெய்வம் ஒன்றுதான்; ஆனால் அது நாங்கள் சொல்லும் தெய்வந்தான், என்று ஒவ்வொருவாதியரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் இத்தோடும் நின்றுவிடுவதில்லை. ஒவ்வொருவரும் மற்றவர் சொல்லும் தெய்வத்தில் குற்றம் குறைகளை யெல்லாம் சொல்லிக் காட்டுகிறார்கள். ஆதலால் இவர்களெல்லாம் யானைகண்ட குருடர்கள் போல கொஞ்சம் தெரிந்தும் முழுதும் தெரியாதவர்களாகவும் ஆகிறார்கள்.

யானைகண்ட குருடர்கள்.

யானைகண்ட குருடர்கதை யாவருக்கும் தெரியும். இவர்கள் யானையைத் தொடாமலேயே இது யானை, யானை இப்படி இருக்கிறது என்று சொன்னவர்களல்ல. ஒவ்வொருவரும் கால் கை வால் முதலியவற்றைத் தொட்டுப்பார்த்துதான் இது யானை என்று சொன்னார்கள். ஆனால் கண்ணில்லாவிட்டாலும் போகட்டும்; கைதானிருக்கிறதே அதாலாவது அவசரப்படாமல் பொறுமையாக நிதானமாக முழுதும் தடவிப்பார்த்து இந்த முறம் போலும் உரல்போலும் உலக்கைபோலும் துடைப்பம்போலும் இருக்கும் அவயவங்களெல்லாம் சேர்ந்துதான் யானை என்று

முழுதுமாக அறிந்து கொண்டார்களா? அதுவும் இல்லை. தொட்டுக்கூடப் பாராத குருடர்கள், யானை யெங்களுக்குத் தெரியாது" என்று சொல்லுவதுபோல இவர்கள் தெரியா தென்று சொல்லப்போகிறார்களா? அதற்கும் இல்லாத முறையில் யானையைத் தொட்டுப்பார்த்துவிட்டார்கள். உண்மையாக இவர்களுக்கு வாயும் ஊமையாக இல்லை. அப்படியானால் அங்கு அவர்கள் நடத்தும் விவாதத்திற்கு அளவு சொல்ல முடியுமா? நீட்டிப்பேசும் கைக்குத்தான் நேர்காண முடியுமா? அல்லது அவர்கள்தான் அந்த விவாதத்திற்கு எல்லை காணப்போகிறார்களா?

இவர்கள் இரண்டும் கெட்டான் நிலையிலே அல்லலுறுவ தன்றியும் மக்களாலும் மதியிலிகளாகக் கருதப்பட்டும் தாழ்த் தப்பட்டும் போவார்கள்.

தெய்வ வேடிக்கை.

இப்படியே தெய்வம் பலவென்று கொண்டு அதில் என் சாமி மேல் உன் சாமி கீழ் என்று சொல்லிக்கொண்டு அதற் காக கதை கட்டிக்கொண்டும் இருக்கிற மக்கள் மேற்சொன்ன குருடர்களுக்கு அண்ணன்மார்களே யாவர்கள். அவர்கள் போலப் பிற்கால மக்களாலே உண்மையில் இகழவும் படுவார் கள். என் தெய்வம் இந்த உலகமெல்லாம் படைத்துக் காக்கும் இயல்புடையது அல்ல. நிறைந்த கருணையும் ஆற்றலும் இல்லை; என்று சொல்லும் மதம் ஏதாகிலும் உலகத்தில் உண்டா? அல்லது என் தெய்வத்திற்கு படைக்கத்தான் தெரியும் அந்த

மதத்தான் சாமி வந்துதான் காக்கவேண்டும் 'என்றும், என் தேய்வத்துக்குக் கருணை தான் உண்டு, ஆற்றலுக்கு அவர்கள் தெய்வம்தான் வரவேண்டும் என்றுவது எந்த மதவாதியாவது சொல்லுகின்ருனு? அல்லது இனிமேல்தான் சொல்லுவானு? இல்லை. ஒன்று குறையாகத் தன் தெய்வத்தை எந்த மதத்தாரும் ஒப்புக்கொண்டதில்லை. கடவுளுக்கு உண்டான முழு இலக்கணத்தையும் சொல்லியே கடவுளைக் கொள்ளுகிருர்கள் ஐந்தாறு கூட்டத்தார்கள் இத்தகைய நிறைந்த கடவுள் ஐந்தாறு பேர்களைக்கொண்டு வந்து இந்த ஒரே உலகத்தில் விட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் இந்த உலகத்தையே படையுங்கள், காப்பாற்றுங்கள் அழியுங்கள் என்று சொன்னுல் இந்த உலகம் என்னவாகுமோ தெரியவில்லை.

கடவுளர்கள் தங்களுக்குண்டான பெருந்தன்மையால் கலவரமன்றி ஆளுக்கொரு மூலையில் இதிலேயே வேலை செய்யலாமென்று ஒத்துக்கொண்டாலும் கடவுளர்களைக்கொண்டு வந்துவிட்ட இவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் எனத் தெரிகின்றது. இன்னும் ஒவ்வொரு மதத்தவரும், மகத்திலன்றி, ஒவ்வொரு அணுவிலேயும் தந்தம் தெய்வத்தை போயிருக்கச் சொல்லுகிருர்கள். மஹத்திலிருந்தால் போதாது என்கிருர்கள். அணுவிலும் மஹத்திலும் எங்கும் இல்லாவிட்டால் தெய்வதன்மை கெட்டுப்போகும் என்பதும் ஒருசேர எல்லா மதத்தாரும் கருதுகிருர்கள்.

இந்தத் தொந்தரவுக்காக அணுவானுலும் எல்லார் தெய்வமும் அதிலே போயிருக்க வேண்டியிருக்கிறது. பரமாணுவா

யிருந்தாலும் கடவுள் திறத்தாலே ஆளுக்கொரு மூலையில் இருக்கலாம் என்றாலும் இம்மதவாதியர் அதற்கும் விட்டுக்கொடுப்பதில்லை. "அணுவின் ஒரு மூலையையும் பிறிதொன்றுக்கு விட்டுக்கொடுத்து விடாதே நீ அவ்வளவு பெரியவனாகும், முழு இடத்தையும் நீயே பிடித்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் பூரணத்தில் துவாரம் விழுந்துவிடும். அப்போது அதில் தெய்வத்தன்மை நழுவி ஒழுகிப்போய்விடும், ஆதலால் அணுவின் எந்தப் பகுதியையும் இன்னொருவன் தெய்வத்திற்கு விட்டுக் கொடுத்து விடாதே என்று ஒவ்வொரு வாதியும் தந்தஞ்சாமிக்குச்சொல்லிக்கொடுத்துத்தூண்டிவிடுகிறான். ஆறேழு பெருஞ்சாமிகள் ஒரு அணுவில் முழு இடத்தையும் பிடித்துக்கொள்ளப் போராடுமானால் பொறுக்க முடியாமல் அந்த அணு திடீரென்று வெடிக்காமல் என்னதான் செய்யும்?

இந்த மதவாதிகளெல்லாம் தன்னையும் உலகத்தையும் அறிந்து அதற்கு மேலும் தலைவனும் ஒருவன் வேண்டும் என்ற அறிவு நிலைக்கு வந்ததைக்காணுமிடத்து உண்மையில் இவர்கள் மகிழ்ச்சிக்குரியவர்களே யாவர்கள்; ஆனால், இன்னும் கொஞ்சம் மேலேறி நில்லாமல் நாம ரூபத்தில் மயங்கிக் கலகம் விளைத்துக் கொள்வதைப் பார்த்தால் மிக்க வருந்தத்தக்கவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

இனிக்கடவுளின் அருவத்தையும் உருவத்தையும் சிறிது சொல்லுவாம்:—

கடவுள் இருப்பாய் அறிவாய் இன்பமாய் ஆகாசம்போல தேசகால திக்குகளைக் கடந்து எங்கும் வியாபித்திருக்கின்றார்.

BESANT

தன்னிடத்தில் உண்டுபண்ணப்பட்ட இந்த உலகத்திற்கு நன்மையை ஆக்கும் பொருட்டும் தீமையை நீக்கும் பொருட்டும் அருவமான அவர் உருவத்தை எடுக்கின்றார். இது எப்படியென்றால் உருக்கி கொப்பரையில் விட்ட நெய் எல்லாப் பக்கமும் ஒன்றுபோலவே இருக்கும். குளிர்முதலிய யாதாயினும் ஒரு நிமித்தங்கொண்டு ஒரு உழக்கு நெய் துணிந்து உறைந்து காட்சிக்காவதுபோல இருக்கும். நிறமும் தடிப்புமில்லாத நெய் வெண்மை நிறமும் கெட்டியாகவும் தோன்றுகின்றது. மீண்டும் அந்த நிமித்தம் நீங்கிய பின்னர் பழைய அருவநிலையே ஆகும்.

மற்ற உருவ தெய்வங்களெல்லாம் கடவுளின் இம்மாதிரியான வடிவங்களேயாகும். இமவான் மேனகை விருப்பத்திற்குத் தக்க வடிவத்தில் கடவுள் பார்வதி வடிவமானார். அப்படியே இரணியனுக்குத் தக்க வடிவத்தில் நரஸிம்மமாக வந்தார். அன்பருக்கு அனுக்கிரகமாகவோ தீயரை ஒழிக்கும் பொருட்டோ வந்து, வந்த கருமம் முடியும் வரையும் அப்படியிருந்து பின் தனது ஞானனந்த மேனியில் அதை மறைத்துவிடுகின்றார். இதற்கறிகுறியாக இப்போது ஒரு கோயில் கட்டி அதில் கல்லாலோ செம்பாலோ பார்வதியோ நரஸிம்மமோ செய்துவைப்பது முன்னொரு காலம் அன்பருக்காக அப்படி நிகழ்ந்ததென்பதற்கு அறிகுறியாகும். வழிபடுவதற்கு ஏதுவுமாகும். இப்படியன்றி அனாதியில் முளைக்கும்போதே கடவுள் முளைத்துவிடாது.

ஒரு பரம்பொருள் அடங்காப் பிடாரிகளை நாசம் செய்யும் பொருட்டும் உத்தம உத்தமிகளைக் காக்கும்பொருட்டும் அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கோரவடிவமாகவும் சாந்த வடிவமாகவும் பல திருவுருவங்களை எடுக்கின்றார். அவ்வக்கால முனிவர்களும் அரசர்களும் மக்களும் அவற்றை வழிபட்டு வரவே பிற்கால மக்கள் உருவ அளவில் நின்றுகொண்டு சைவம் வைணவம் முதலாக பல வேற்றுமைகளை ஆரம்பித்து விட்டார்கள். இவைகளெல்லாம் அந்த ஒன்றன் திருவிளையாட்டு என்று உண்மையுணர்ந்தமைந்த பெருமக்களும் இருந்தார்கள். "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்பனவாதியாக பெருமக்கள் வாக்கில் இக்கருத்தை நிரம்பக் காணலாம்.

அனாதிகாலமாய் கடவுள் இச்சையாற் கொண்ட வடிவங்கள் கரகபாணி சூலபாணி பரசுபாணி சக்கரபாணி சாரங்கபாணி முதலாகப் பல வடிவங்கள் உண்டு. இவற்றுளெல்லாம் இவ்வாறு இதுவரையும் வந்தவடிவங்களில் முடிவாய்க்கொண்ட திருவுருவம், வேல்சாமியும் தண்டபாணியும் ஆகும். துஷ்ட நிக்கிரகத்திற்கு வேல்சாமியும் சிஷ்ட ரக்ஷணத்திற்கு தண்டபாணியுமாயமைந்துள்ளது. ஒவ்வொரு திருவுருவங்களிலும் பல சிறப்புகள் இருக்கின்றன. முருக மந்திரத் திருவுருவத்தில் உள்ள சிறப்புகள் உண்மையில் நம்மால் சொல்லியாவனவல்ல.

குளம்படி நீரில் விழுந்தாலே கொசு தப்பிப்போவது அதன் முன்னோர்கள் செய்த புண்யமாகும்; பின்னது சமுத்தி

ரத்தில் விழுமானால் பேசுவானேன்? அக்கரையல்ல இக்கரை அல்ல; எக்கரைதான் என்றுதான் காணப்போகின்றது. எப்படியோ தெரிந்தோ தெரியாமலோ தப்பித்தவறி நாம் முருக மந்திரக் கடலில் விழுந்தாய்விட்டது.

கடல் பெரிதென்பதற்காகவும் நீந்துதற்கரிது என்பதற்காகவும் ஒருவன் கையைக் கட்டிக்கொண்டு பிடிவாதமாய் முழுகுவானா? இல்லை; தன்னாலியன்றவளவு கையைக் காலை ஆட்டத்தானே செய்வான். கரைபேற முடியாது என்ற நிச்சயம் இருந்தாலும் விழுந்த கொசு சிறிது நேரம் சிறகை அடிக்காமல் சும்மா இருக்கமுடியுமா? இந்த அளவுதான் இங்கு நமது முயற்சியாகும். அந்தக் கடலின் பெருமையை நோக்கும் போது இந்த முயற்சியின் சிறுமைக்கு ஏதாயினும் பயனுண்டா என்றால்; நல்லது, அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அலை கொண்டு தள்ளிவிடட்டும், அல்லது, சுழிகொண்டு அமுக்கிக் கொள்ளட்டும் அது அந்த முருகன்பாற் பட்டதேயாகும்.

இனி பலவுருவங்களின் தோற்றநிலைகளைப் பற்றிச் சிறிது பேசுவாம்:—

1. கரகபாணி 2. சூலபாணி 3. சக்கரபாணி 4. பரசுபாணி 5. பாசாங்குசபாணி 6. கோதண்டபாணி 7. சக்திபாணி 8. தண்டபாணி எனப் பல வடிவங்களும் அதற்குத் தக்க நாமங்களும் உண்டு. இவைகள் ஆண்டவன் அந்தந்த சமயத்தில் எடுத்த வடிவங்களாகும். இதன் பொருள்—பாணி=என்பது கை என்று அருத்தம். பரசு=என்றால் மழு, மழுவைக்

கையிலுடையவன் = பர்சுபாணி என்று பொருள். இப்படியே சக்கரபாணி, கரகபாணிஎன்பவைகளுக்கும் சக்கரத்தைக்கையி லுடையவர், நீர்ப்பாத்திரத்தைக் கைக்கொண்டவர் என்று அருத்தமாகும். இந்த ஆயுதம், சொம்பு முதலிய அடையா ளங்களெல்லாம் கடவுள் கொண்ட கோலத்தின் அனுக்கிரக நிக்கிரகக் குறிகளாகும். இவற்றில் கரகபாணியைச் சிறிது சொல்லுவோம்.

கரகபாணி = நீர்ச்சொம்புக்கையர். (பிரமா)

எந்த ஒரு விதையை உற்பத்தி செய்பவனுக்கும் அது உற்பத்தியாவதற்கும், துணை செய்வது நீரேயாகும். மற்ற ஜீவராசிகளுற்பத்திக்கும் இது நியதியாகும். ஜடப்பொருளுற் பத்தியிலும் கூடப் பெரும்பாலும் இது காணப்படுகின்றது. மண்கொண்டு குடம் படைப்பவனுக்கும், நூல்கொண்டாடை யுண்டாக்குபவனுக்கும், இவைபோல்வனவற்றிற்கும் நீர் இன்றி யமையாது துணை செய்கின்றது. அப்படியே கருமானும் பொற்கொல்லனும் தந்தம் பொருள்களை உண்டாக்கும்போது கல்யாண ஆரம்பத்தில் முதலில் சீர்த்தண்ணீருக்குப் போவது போல நீர்ச்சட்டியை முன் வைத்துக்கொள்வதை இன்னும் பார்க்கிறோம். இதனால் ஒரு பொருளை உற்பத்தி செய்பவ னுக்கு நீர்க்கரகம் அவசியம் வேண்டப்படும் என்பதைப் படைப்புக் கடவுளின் கையிலிருக்கும் தண்ணீர்ச் சொம்பு முதலிலேயே மக்களுக்கு அறிவிக்கின்றது.

இருமொழி வேதப்பிரமாணம்

இவ்விஷயத்தில் பொருத்தமானதும் ருசிகரமானதுமான ஒரு பொருள் காணப்படுகின்றது. ஈசுரன் ஜீவன் கர்மம் முதலிய சில பதார்த்தங்கள் அனாதி பொருள்கள் என்று சொல்லப்படும். அவற்றுள் வேதம் என்பதும் ஒன்றாகும். அது படைப்புத்தோறும் சில பெருமக்கள் (முனிகள்) வாயிலாக வெளியாகும். இந்த வேதம் ஆரியமும் செந்தமிழும் என ஒருபொருளறிதற்கு இரண்டு கண் போன்று விளங்கும். இதனாலேதான் நாவரசர் முதலியோர் "ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்" ஆரியன் கண்டாய் தமிழன்கண்டாய், ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா அந்தகர்' என்றும், "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்பனவாதியாகத் திருவாய்மலர்ந்திருக்கின்றனர். இன்னும் திருமந்திரத்தில், "ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக், காரிகையார்க்குக் கருணை செய்தானே" எனப் பார்வதிக்கு ஆதியிலேயே இவ்விருமொழி வேதத்தையும் சொல்லியருளினார் என்ற பிரமாணவாக்கால் இவைகள் அனாதியும் இறைவன் முனிகளால் சிருஷ்டியுகந்தோறும் வெளியிடப்படுவதும் பெறும்.

வடமொழிக்கு உத்தாலகர் முதலியோரும் தமிழ் வேதத்திற்கு திருவள்ளுவர் நாவரசர் ஆழ்வார் சம்பந்தர் திருமூலர் முதலியோரும் இந்த சிருஷ்டிக்குப் பிரவர்த்தகராவர். இந்த இரண்டு வேதம்—வேதசாகைகளாலும் கண்ட பொருள் அறமாதி ஒன்றேயாகும்.

அறமர்திகளை நேர்மையில் உணர்த்தும் இவ்விருமொழி வேதமும் அனாதியாகவே இருந்து படைப்புக் காலந்தோறும் பெருமக்கள் வாயிலாக இறைவனாணையில் வெளிப்படும்.

பிரமா உலகம் படைக்கும் சமயத்தில் இந்த வேதங்களை நினைத்து அதில் கூறிய முறையில் உலகத்தை உண்டாக்குவார். **"படைத்தவனைப்படைத்து அவர்க்குப் பண்டையே மறையனைத்தும் கொடுத்தவன் நான் ஆதலின் எக்குறவர்க்கும் குரு பரனுன்"** என்று ஈசுவரகீதையில் பிரமாவைப் படைத்து அவருக்கு முதலில் (இருமொழி) வேதமனைத்தையும் கொடுத்ததாக இறைவனே கூறுகின்றபடியினாலும், பிரம கீதையில் **"பரமனுக்கினையினாலே பஞ்ச பூதங்களாலே பிரமாண்டம் படைத்தேன்"** என்று கூறியதாலும், பிரமாவானவர் இறைவனருளால் வேதத்தைப் பெற்று அவனாணையால் அதுகொண்டு உலகம் படைக்கிறார் என்பது பெறப்படுகின்றது. சில சமயங்களில் பிரமாவுக்கு படைக்குமாற்றல் இன்றி நகர முதலான மூல பஞ்சாக்கரத்தைப் பல தடவை இறையருளால் ஜெபிக்கப்பெற்று மீண்டு உலகத்தைப் படைத்ததாகப் புராணங்களில் காணப்படுகின்றது.

இப்படி இருக்க ஒருசிருஷ்டியாரம்பத்தில் பலவிதமுயற்சி செய்தும் தபசு ஜெபம் முதலியன செய்தும் தமிழ் வேதத்தை மறந்த குறையால் பிரமாவுக்கு உலகப்படைப்பு அமையவில்லை. இறைவனைக் கேட்க அவர் முருகனைக் கேட்கச் சொல்ல, அவர் அகத்தியரைக்காட்ட, அவர் திருவள்ளுவரைக் காட்ட, அவர், சூக்கும உடம்போடும் இருந்து எல்லாப்பயனை

யும் சுருங்கவிளக்கி பல அதிகாரங்களாய்த் தெளியச் சொல்லி யருளினர்.

அவ்வளவையும் பெற்று வணங்கிப் போய்த் தனியிடத் திருந்து தபசுடன் மனனம் செய்தார். அப்போது, அதில் உலகு நீர் இன்றி அமையாது' என வந்தது. உடனே இவர், திடுக்கிட்டு பிரமாவாகிய எனக்குமா நீர் வேண்டும் என்று நினைத்தார். உடனே அக்குறள் மந்திரமே சொல்லிற்று:— நீ பிரமாவாயிருந்தால்தானென்ன; அவனைப் பெற்றவனுயிருந் தால்தானென்ன? "யார் யார்க்கும் நீரின்றி அமையாது உலகு" என்றது.

உடனே இவருக்கு நீரின் நீர்மை விளங்கிற்று; நீர்க்கர கத்தைக் கையிலெடுத்து முருக மந்திரத்தை 108 தடவை பொருளோர்டு மந்திரித்து உலகம் படைக்கலானர். பின்னிவ ருக்கு எல்லா ஆற்றலும் வந்து உலகத்தைப் படைத்தார்.

நீரின் இயல்பும் செயலும்.

மற்ற பூதங்களைக் காட்டிலும் நீரினிடத்தில் ஒன்றைப்பற்றி இழுத்துச் செல்லும் ஆற்றல் அமைந்திருக்கின்றது. ஒன்றைப் பற்றிக்கொள்வதற்கு யோக்கியமான பசையும், அப்படிப் பற்றிய பலவற்றை ஒன்றோடொன்று இறுகப்பிணைத்தற்கும், இழுத்துப் போவதற்கும் தகுதியான இளகலும் அதனி டத்தில் உண்டு. ஏற்றுக்கொண்டதை விரிவு செய்து வளர்த் தும் தன்மையும், நீரணுக்களுக்கு உண்டு. இதனது அரிய பெரிய பண்புகளாலே தான் நீர்மை என்றும் இதன் தன்மை,

பெருமக்களிடத்திலும் நன்கு மதிப்பதற்குரியதாய் நல்லிடம் பெற்று விளங்குகிறது.

தார்க்கீகர்களும் கூட 24 குணத்தில் சினேகம் என்ற குணம் நீரிலே தான் உண்டு என்கின்றார்கள். இந்த குணத்தின் இயல்பு என்னவென்றால் பல கோடி மாவணுக்களையும் ஒரு பிண்டமாக ஆக்குவது. ஒரு படி மாவை நீரின்றி, காற்றைக் கொண்டும், அல்லது நெருப்பைக்கொண்டும், பிண்டமாக்க முடியாது. மண் கொண்டு என்றாலும் அவ்வாறு தான். இவைக ளால் எல்லாம் பிண்டமாக்க முயன்றால் அது விருப்பத்துக்கு மாறான பயனைக் கொடுத்து விட்டுப்போய்விடும். அதாவது முன்னமே கூடியிருந்த மாவை இன்னும் கூட்டி வைக்கக் கருதி, காற்று, தீ, மண் இவைகளைக் கொண்டு பலவாறாக ஓட்டுவித்ததாய்ச் சிதறடித்ததாய் முடியும்.

பலவற்றை ஒன்றாகக்கூட்டி ஒன்றோடு ஒன்றைக் கெட்டி யாய்ப்பிடித்துக் கொள்ளச் செய்யும் பிண்டீகரணத்தன்மை நீருக்கே சிறந்தது. ஒருபடி மாவைக்குவியலாய் கொட்டி அதில் ஒருபிடி கையால் எடுப்பானாயின் பிடித்த அளவுக்கே வரும் மற்ற பகுதியோ வாராது. நீரை விட்டுப்பிசைந்து விட் டால் படி மாவில் பிடி எடுத்தாலும் மற்றதும் கூடவே வரும். கீழே போட்டு உருட்டினாலும் எல்லாம் சேர்ந்து ஒரே உருண் டையாய் உருளும். மேலெடுத்துக்கீழே போட்டாலும் சிதறு வது இல்லை.

பல்லாயிரம் கோடி மாவணுக்களை எந்த ஒரு நுட்பமான எவ்வளவு நீளக்கயிறு போட்டால் அத்தனை கோடி அணுக்

களையும் ஒன்றாய்ச்சேர்த்து ஒரேகட்டாய், கட்டினகயிறு தெரியாதபடி இறுகக்கட்டிவைக்கமுடியும்? ஒரு படி மாவையும் உள்ளங்கையால் மேலே எடுத்தும் கீழே போட்டும் சிந்தாமல், சிதறாமல் இருக்குமாறு கட்டிவைக்க வேண்டுமானால் அது எந்தக் கயிற்றால் எப்படிக் கட்டவேண்டுமோ உண்மையில் நமக்கு விளங்க வில்லை.

ஆ ஆ நீரினால் மாத்திரம் அத்தனை கோடியணுக்களும் எவ்வாறு கட்டுப்பட்டு கிடக்கின்றதோ, அதுவும் தான் விளங்கவில்லை. கட்டின விதம் விளங்கா விட்டாலும், ஒரு அணுவும் கூட அந்தக் கட்டை அவிழ்த்துக்கொண்டு ஓடமுடியாமல் ஒன்றாய் கட்டுப்பட்டு கிடக்கின்றது என்பது மாத்திரம் நன்றாய்க் காணப்படுகிறது. நீர்மையானது பல்கோடி அணுக்களையும் இறைவன் போல அணுவுக்குள் அணுவாய் ஊடுருவி விரவிச்சென்று, ஓரோரணுவையும் முழுதும் தழுவி இறுக அணைத்து கெட்டியாய்ச்சிறிதும் நழுவாதவாறு கட்டிப்பிடித்திருக்கிறது. இதனால் அது ஊதினாலும் பிரியாது, உதைத்தாலும் பிரிந்து போவதில்லை.

• "நீரின்றியமையாது உலகு"
என்ற தொடர் விளக்கும் மெய்ப்பொருள் உரை.

இது போல இன்னும் பலவற்றையும் கண்டு கொள்ளலாம். இவ்வாறு நினைத்துப் பார்க்கு மிடத்து உலகத்து காரியங்கள் சிறிதோ, பெரிதோ, எதைத்தான் நீரின்றி ஆக்கவோ அமைக்கவோ முடியும்! இதனால்தான் நாயனார் "நீர் இன்றி

உலகம் அமையாது" எனக்கூறியுள்ளார். இது உலகக் காரியப் பொருள்களுக்குச் சொல்வதுபோல்வதன்றியும், உலகத்தை அமைப்பவனுக்கும் "நீர் எடுத்துக் கொண்டகாரியம் நீரின்றி யமையாது. இது உமக்கு மாத்திரம், அன்று, யார் யார்க்கும் ஒப்பமுடிந்ததாகும்" எனச்சொல்வது போன்றும், அமைந்திருக்கின்றது. ஒரு குறளின் இச்சிறு பகுதியானது மக்களுக்கேயன்றி படைப்புக்கடவுளுக்கும் வழி காட்டும் முறையில் அமைந்திருத்தல் கண்டும் பிரமாவின் கைக்காக நீரைக்கொண்டும் இந்த இடத்தில் சிறிது விளங்கப் பேச நேர்ந்து விட்டது.

இங்கு "நீரின்றியமையாது உலகு" என வள்ளுவர்சொல்லதிலிருந்து எவனோ ஒருவன் உலகையமைப்பது போலும், சிறந்த சாதனம் தெரியாமல் அதை அமைப்பதில் அவன் திணறுவது போலும், அதைக்கண்ட வழிப்போக்கறிஞன் ஒருவன் நீர் செய்யும்காரியம் நீர் இன்றியமையாதெனச்சொல்வது போலும், இதற்கு அவன் 'நான்யாரென்று தெரியுமா'? படைக்கும் கடவுளான பிரம்மாவாகும்! என்று சொன்னது போலும், இதற்கு மற்றவர் நீ பிரம்மாவானால்தான் என்ன? சங்கர நாராயணராய் இருந்தாலென்ன? யார் யார்க்கும் "நீரின்றி உலகம் அமையாது" எனச் சொன்னது போலும் குறிப்பால் உணரக்கிடக்கின்றன.

இவ்வாறே மற்ற ஆயுத முதலிய அடையாளங்களையெல்லாம் பொருந்துமாறு விரித்துக் கண்டுகொள்ளலாம்.

தண்டபாணி என்பதன் உண்மைப் பொருள்.

இந்தப் பெயருக்குப் பொருள் 'தடிக்கை யாண்டவன்' என்பார்கள். பலரும் சூலம், சக்கரம், வில், வாள் முதலிய போர்க்கருவிகள் வைத்திருக்கிறார்கள். மன்மதன் பூ வைத்திருந்தாலும் அவனுக்கு அது போர்க்கருவியே யாகும். இதனால் அவன் பிறரோடு சண்டை செய்கிறான் என்பது இல்லை, ஆனால் சண்டையை தீர்க்கிறான். இது யார் யாருக்கு என்பது தான் மக்களுக்குத் தெரியும். பிரமா வைத்திருப்பது படைத்தற்காங் கருவி என்பதையும் கண்டோம். நம் சுவாமியின் வேலாயுதமும் போர்க்குறிப்பையும் உணர்த்தும். ஆனால் தடியோ பிறரைத் திருத்துபவனது கையிலிருப்பதாகும். உபாத்தியாயர் கையிலிருப்பதும் அப்படித்தானே திருத்துகிறது. மாடுகளை மேய்ப்பவன் கையிலிருப்பதும் அவைகள் விளையும் பயிர், விளைந்த கதிர் முதலியவற்றை அழிக்காது காத்துக் கொள்ள உதவுகிறது. மேலும் தீயவழியினின்று அவைகளைத் திருப்பவும், நன்னெறியில் நாள் முழுதும் செலுத்தவும் அது மிகவும் உதவியாயிருக்கிறது.

வேலைக்காட்டிலும் தடிக்கென்ன விசேடம் என்றால் அதையும் சிறிது விசாரிப்போம். முருகன் அக்கிரமத்தின் பேரிலும், அட்டூழியத்தின் பேரிலும் முதலாக வேலை விட்டார். அன்றே அது முடிந்தது. அது முடிந்தவுடனே தடியைக் கையிலெடுத்தார். பார்த்தார், இனி யாரும் ஆயுதங்களைக் கையிலெடுக்கக் கூடாதென்று உத்தரவிட்டார். "நீங்களும் வேண்டுமானால் தடியைக் கைக்கொள்ளுங்கள்.

உங்களுக்கும் பலவாற்ருனும் உதவும், பிறருக்கும் வழிகாட்டலாம். இதுவன்றிக் கொலைக் கருவியை இனித் தொடாதீர்." என்று சொன்னுர். இதைச் செய்யாதவர்களுக்கு இத்தண்டத்தால் தண்டம் சமர்ப்பிக்கப்படும் என்று தடியைக் கைக்கொண்டார். அதிலிருந்து யாவரும் ஆயுதங்களை யெடுத்துப் போர் செய்வதில்லை. முன் சொன்ன பாணிகளுங்கூட தம் தம் ஆயுதத்தை கீழே போட்டு விட்டனர். இப்படிப் போட்டது இப்போதல்ல— இனி வேலையிருக்காதெனத் தெரிந்து முருகன் வேலெடுக்கும் போதே கீழே வைத்துவிட்டார்கள்.

மற்றவர்கள் சக்கரமெடுத்ததும், சூலம், வஜ்ஜிரம், வில் முதலியன எடுத்ததும், சாமி வேலெடுப்பதற்கு முன்னுகும். முருகன் வேல்தோட்டபின்னர் ஒருவரும் சிறியகோல் தொட்டுக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாது போயிற்று.

அமைதி ஏற்பட்ட உடனே இந்த வேலாயுதசாமி வேஷத்தையும் கலைத்துவிட்டு தண்டபாணி வேடம் கொண்டான். உண்மையில் இவன் தடிபிடித்தது, கிருஷ்ணனைப்போல மாடு மேய்க்கும் அவசரமாகவும் மக்கள் கேள்விப்படவில்லை. கிழவனுகிவிட்டான் என்ருலும் ஒருவன் தடி பிடிக்கலாம்; அதற்கும் இல்லை. என்றும் மாரு இளையவன் என்றும், குறுகா நெடுகாக் குமரன் என்றும் கேள்விப்படுகிருேம். இல்லை; நோயாளியா? அல்லது அசக்தனு தடிபிடிக்க? அப்படியெல்லாம் ஆசங்கிக்கவேண்டாம். அதற்கெல்லாம் அவனிடத்தில் இடமில்லை. அரசனுயினும் செங்கோல் பிடிக்கலாம்; அதுவுமில்லை, இவன் கோவணுண்டி.

அப்படியானால் பின் எதற்காகத் தடிபிடிக்க வேண்டும் என்றால் உண்மையில் எல்லாமான மக்கள், தேவரனைவரையும் அஹிம்சா முறையில் திருத்துவதற்காகவே தடிகொண்டு நின்றான். ஆண்டவன் தனது பல வேடங்களிலும் ஹிம்சிக்கும் கருவிகளைக் கையில் கொண்டு குத்தியும், வெட்டியும், அறுத்தும், கூறுபோட்டும், அலரடித்தும், சிதைத்தும் உண்மையில் அலுத்துப்போனார். ஆதலால் அஹிம்சையே சிறந்தது; இதைப் போன்று மக்களைத் திருத்தியமைக்கும் சாதனம் வேறொன்றுமில்லை. ஆதலால் 'கொலைக்கருவியை தூர எறியச்சொல்லுவாயாக' என்று காந்தியடிகளுக்கு இறைவன் சொல்லியிருப்பாரெனத் தெரிகின்றது. இன்னும் வெறும் கையோடும் இருக்கவேண்டாம், பயப்படமாட்டார்கள். அதனால் கிழவனானும் தடியை விடாதே, அஹிம்சா மூர்த்தியாய் மக்கள் அனைவரையும் திருத்தியமைக்கத் தடியானது சிறந்த அறிகுறியாயும், சாதனமாயும் இருக்கிறது. என்னைப் பார்த்து நீ அஹிம்சா மூர்த்தியாய் நடந்துகொண்டது போல, உன்னைப் பார்த்தும், மக்களும் தேவர்களும் நடந்துகொள்வார்களாக என்று தடியைக்கையாண்டவன் காந்தியடிகளுக்கு அஹிம்சா தத்துவத்தைத் தடியைக்காட்டி காட்டினார் என்று சொன்னால் இதை இக்காலத்துப் புலவர்கள் மிகை என்று சொல்லமாட்டார்கள் என எண்ணுகிறோம். இந்தத் தடியால் விளக்கிக் காட்டித் திருத்தமுடியாத ஒருபகுதி இல்லையென்பது தெரிந்த விஷயம்.

நேர்தடி, கோணற்றடி

இதனால்தான் அங்கு ராவணனும் துரியோதனும் அடிபட்டு விழுந்தார் என்றால், உடனே மடிந்தார் என்று கேள்விப்படுகிறோம். இங்கு சூரன் வேல்பட்டு விழுந்தான் என்றால் உடனே சேவலும் மயிலுமாக எழுந்தான் என்று கேள்விப் படுகிறோம். இச் சிறந்த கருத்தை அறிவிக்கவே முருகன் வேலைவிட்டதும் திருத்தியமைக்கும் தடிக்கையாண்டவ வேடத்தோடு நின்றான் போலும். கதையின் முடிந்த விடத்தில் இந்தப் புகழ் கந்தப்புராணத்தல்லாமல் எந்தப்புராணத்திலும் இல்லை என்று சொல்லும்படி அமைந்திருக்கின்றது.

இதனாலும் திருத்தியமைக்கத் தகுந்தது நேர்தடி என்பதும், திருத்தமுடியாமல் கொல்லுவது கோணைத்தடி (வில்), கதை, மழு முதலியன என்பதும் பெறப்படுகின்றன. இதில் ஒரு நியாயமும் கிடைக்கின்றது: அதுவே கோணலாய் ஏறுமாறாய் வளர்ந்து கிடக்குமொன்று இனி இன்னொன்றைத் திருத்துவதென்பது எப்படி முடியும்? என்னும் நியாயமும் இதனால் விளக்குகிறது.

கோவணாண்டிக் கோலக் குறிப்பு.

இன்னும் இந்த வேடம் தடியோடன்றியும், ஒருசாண் உடையோடும் நின்று மானத்தையும், சுயமரியாதையையும் காக்க இது போதும். பஞ்ச காலத்தில் மற்றப் பகுதியைக் கிழித்துப் பிறர்க்கு உதவுங்கள் என்று உபதேசிப்பது போலி

ருக்கிறது. தேவைக்கு மேற்பட்டதைச் சுற்றியிழுத்துக் கொண்டு தெருத்தோறும் திரிவதில் யாது பயன் என்பதையும் இந்த நின்ற கோலம் காட்டுகிறது.

இன்னும் தடிபிடித்தது ஒருவன் தான் எவ்வளவு பெரியவனும் நேர்மையாளனுமானாலும் தனித்து நிற்கவேண்டாம் ஒரு நேர்மையாளனது துணைக் (நட்புக்) கொண்டு நிற்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது. மேலும் கொல்லும் நோக்கத்தோடாவது, அடிக்கும் நோக்கத்தோடாவது, பிழக்கும் நோக்கத்தோடாவது முறையே வில்லையும், கதையையும், மழுவையும் பிடிக்க வேண்டாமென்பதையும் வற்புறுத்தி அறிவிக்கின்றது.

தண்டாயுதத்தின் தனிப்பெருமை.

சூலம், வேல், வாள், சக்கிரம் முதலியனவும் ஆயுதந்தான்; அப்படியே தண்டமும், தண்டாயுதம் என்று சொல்லப்படும். ஆனால் அவற்றுள் ஒன்றாவது அடியும், முடியும், நடுவும் ஓரேவியல்புள்ளதாய் அமையவில்லை. வாளும், அம்பும், சூலமும் வேலும் முதலியனவெல்லாம் நுனிசிறுத்து அதற்கு மாறாக அடிப்பாகம் இருக்கும். கதை முதலியன அவைக்கும் மாறாக யிருக்கும். தண்டமானது அடிமுடி நடுவாகிய மூன்றிடத்தும் ஒருபடித்தாய் அமைந்திருக்கிறது.

மற்றவைகளுக் கெல்லாம் இல்லாத இந்த அமைப்பானது சில முக்கிய உண்மைகளை விளக்குவதாக அமைகிறது. இன்னும் எத்தனையோ சிறந்த ஆயுதங்களெல்லாம் இருந்தும்,

அவற்றுள்ளும் சிறந்த ஒன்றன் பெயரால் குமரன் விளங்காமல் சாதரணமான ஒரு தண்டத்தை எடுத்துக்கொண்டு தண்டபாணி என்னும் கோலத்தோடு தான் மிகவும் உயர்ந்த தானத்திலிருந்து விளக்கம் பெறுகின்றான்.

ஆண்டவனது பன்னிரண்டு கரங்களில் எத்தனையோ ஆயுதங்கள் இருக்கலாம். ஆனால் அவைகளையெல்லாம் போட்டுவிட்டு இந்த நேர்மையான தடியோடு மாத்திரம் நிற்கின்றான். மற்றவற்றையெல்லாம் பிடிக்க வேண்டிய அவசரத்தை முடித்துவிட்டே இறுதியில் இறைவன் இதைப் பிடித்திருக்கின்றான் என்று தெரிகிறது.

மற்றவற்றை எல்லாம் பிடித்திருக்கும் போது ஆங்காங்கு எதிர்த்த உயிர்களுக்கு அவரவர்கள் இயல்பை உணர்த்தினான்; மற்ற பொருள்களின் இயல்பையும் உணர்த்தினான். அவர்களும் உயிர்களுக்குண்டான கீழ்முக நிலையிலிருந்து கொண்டே அற்ப சுகத்தை விரும்பினார்கள். "வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றபடி இறைவனும் அந்நிலையில் அதைக் கொடுத்தான்.

பின்னர் மக்கள் தேவர்களாகிய உயிர்களனைத்திற்கும், தனது உண்மையான இயற்கை நிலையை உயர்த்த வேண்டிய அவசியம் இறைவனுக்கு ஏற்பட்டது. அவரவர்களுக்குண்டான இடுக்கண்களை நீக்கிக் கர்வத்தையடக்கி அவரவர் நிலையை அவரவர்களுக்கு உணர்த்திய பின்னர் இனி அவர்களுக்கு உயிர்கள் தனது ஞான மேனியின் ஒருபுறத்து இடம் பெற்றி

ருக்கிறார்கள் என்னும் முழு நன்மையையும் அறிவிக்க வேண்டியது அவசியந்தானே.

தேவரானாலும் சரி, மக்களுள் சிறந்த மகா பண்டிதனானாலும் சரி அல்லது பெரிய அரசன்—பணக்காரனானாலும் சரி, இந்த உண்மை நிலையை உள்ளபடி உணரும் வரையும் பூரண ஓய்வின் (சாந்தியின்) ஒரு துளிகூடக்காண முடியாது. ஆனால் ஆய், ஆய் என்னும் அலைச்சல் மாத்திரம் அவன் வீடு வாசலெல்லாம் குவிந்துகிடக்கக் காணலாம்.

மக்கள் நிரம்பத்தேடவிரும்புகிறார்கள்; அப்படியே நிரம்பத் தேடுகிறார்கள். ஆனால் அப்படி தேடின பொருளை நேர்மையாயழிக்க விரும்புகிறார்களில்லை. உவந்து கொடுக்கிறார்களுமில்லை. உண்மையில் மனிதன் மிகவும் தேடவேண்டியதுதான். சோற்றை ஆக்கிச் சிரமப்பட்டும் குவிக்கவேண்டியதுதான். ஆனால் அதை நேர்மையில் அழிக்கவும் தெரிந்திருக்கவேண்டும். அதை நேர்மையாய் அழிப்பது எப்படி என்றால் சூட்டோடு சூடாகத் தேவையான பிறருக்கிட்டுத் தானும் உண்பதாகும். "இட்டு உண்டு இரு" என்று நம் பெருமாட்டி சொல்லவில்லையா? இப்படியன்றி இவன் ஆக்கிக் குவித்துக் காத்துக்கிடப்பானேயானால் உண்மையில் அச்சிரமத்தின் பெரும் பயன் வீணாகத் தான் போய்விடும். இட்டுண்ணாவிட்டாலும் உண்டுவிட்டாவது இடவேண்டும். அதுவும் இன்றிக் காத்துக்கிடப்பானேயானால் அந்தப்பேயை இந்தியாவினின்று ஓட்டுவதற்கு எந்தமந்திரம் போடவேண்டுமோ நமக்கது தெரியவில்லை.

ஆனால் இங்கிலையிலும் தாங்கள் கணந்தோறும் அழிந்து கொண்டிருப்பதை எவ்வாறு விரும்பி இருக்கிருர்களோ தெரியவில்லை. உண்மையில் தாங்கள் அழிந்து போவதும் அழிந்துகொண்டிருப்பதும் மக்களுக்குத் தெரியாமலும் அல்ல. ஒருவேளை மயக்கத்தால் சிலவேளை மறந்துவிட்டாலும் அதை ஞாபகமூட்ட ஒவ்வொரு வீட்டிலும் அதற்கான சம்பவங்கள் திடீர் திடீரென அடிக்கடி நிகழ்வதையும் காண்கிருர்கள். அங்கு இவர்கள் முகத்தையும், கண்ணையும், கண்ணீரையும், கம்பலையையும், தலைவிரி கோலத்தையும் பார்த்தால் இவ்வாறு அலறும்படி சுட்ட தழும்பு அந்த மனத்தில் ஏழேழு பிறவிக்கும் மாருதெனத் தெரிகின்றது. இப்படியிருந்தும் எப்படி மறந்தார்களோ தெரியவில்லை. அடுத்த நாளில் இந்தத் தழும்புக்குண்டான அறிகுறி சிறிதும் காணப்படவில்லை.

மூடமலையில் வாழ்க்கை

இதை உணர்ந்து, இந்த உணர்ச்சிக்காம் நிலையில் தங்கள் நிகழ்ச்சியைக் கொண்டுபோக முடிவதில்லை. மக்களாகட்டும் தேவர்களாகட்டும் மூடமென்னும் மலையின் சிகரத்தில் வீடு கட்டிக்கொண்டு, அங்கிருந்து இறங்காமல் தங்கள் வாழ்க்கையை நடத்துகிருர்கள். 'இங்கு மூடமலை என்பது இருட்குவியல் தான்' அல்லது இவர்கள் வசிக்குமிடம் பாதாள இருட்குழியோ என்னவோ தெரியவில்லை! அதில் உள்ளவர்களுக்கு எங்கிருந்துதான் வெளிச்சமுண்டாகப் போகின்றது? இதனுல் தான் ஒருவருக்கொருவர் நிதானமின்றி அடித்துக்கொள்கிருர்

கள். தன்னினத்தாரையே கொல்கிறார்கள். குனிந்து எடுப்பது கஷ்டம் என்று அடுத்தவன் கையிலிருப்பதைப் பிடுங்குகிறார்கள். ஒருவன் விடவில்லையானால் அவன் கையைத்திருகுவது மாத்திரமன்றி, முறிக்கவும் துணிகின்றார்கள். இவனுவது சிச்சீ, இந்தா நாயே என்று அவனுக்கெதிரில் விட்டெறிகின்றானா, அதுவும் இல்லை. காலுக்குக் கீழே கிடக்கும் பெரும்பொருளின் மதிப்பைத் தெரிந்துகொள்ளக் கண்ணில்லை பாவம்; அதைச் சிறிது என்று மதிக்கிறார்கள். பிறன் கையிலிருப்பதானால் மிகவும் பெரிதெனக் கருதி மோகங் கொள்கிறார்கள். இன்னும் சிலர் 'மடியைப் பிடித்து மாங்காயைப் போடுகிறார்கள்' குடுமியைப் பிடித்து காசு கேட்கிறார்கள். சிலர் கோழியும், நாயும் போல பார்த்தபோதே தன்னினத்தைப் பகைத்துக் கொள்கிறார்கள். கன்றுமான், கருப்பமான் என்றும் பாராத புலி போலும் சிறிதும் ஈவிரக்கமின்றிப்பிறரிடம் நடந்து கொள்கிறார்கள். சிலர் குள்ளநரிகள் போல் அல்ல, குள்ளநரியாகவேயிருந்து தந்திரமனைத்தையும் செய்கிறார்கள். சிலர் பூனைபோலப் பார்வையிற் சாதுவாகவும், செயலில் தீயராகவும் காணப்படுகிறார்கள். இன்னும் சிலர் கழுகு போல எங்கேயோ இருந்து வந்து பாய்ந்தடித்துக் கொண்டு போகிறார்கள். சிலர் யானையைப்போல் பெரிய மனிதர்களாகக் காணப்படுகிறார்கள். கை கூட அவ்வளவு நீளமுண்டு. ஆனால் கொடை என்பதற்குத் தான் அங்கு தடை என்பது உண்டு. இத்தகையார் மேலெல்லாம் இறைவன் வேலை (வேலாயுதத்தை) விடாமல் என்ன செய்வான். துஷ்ட மிருகங்கள்மீது வில்,

வேல், வாள் முதலிய கொலைக் கருவிகளை எய்வதும் அடக்க முடியாமல் கொல்வதும் வழக்கும் நியாயமுமாகி விட்டதல்லவா?

உண்மையில் இவை போன்ற செய்திகள் அசுரர்களிடத்தில் காதில் கேட்கின்றோம். மக்களிடத்தில் நேரே கண்ணில் பார்க்கின்றோம். இந்த அசுரர்களும்கூட நம் கண்ணுக்குத்தூரத்திலேயே இருக்கிறார்களென்பதும் இல்லை. கண் முன்னும்கூட அங்கும் இங்குமாக வருகின்றதைப்பார்க்கலாம்.

தண்டபாணி—பசுபதி.

இத்தகைய மிருகசுபாவத்தோடு கூடியவர்களைக் கடவுள் பலவிதத்தாலும் திருத்தியமைக்க வேண்டியிருக்கிறது. புலி முன்பும், நரி முன்னும் வெறும் தடியோடு மாத்திரம் மனிதன் போவதில்லை. வில், வாள், வேலோடு தானே போகின்றான். பசு முன்னர் வில்லும், வாளும், மழுவும், சூலமும் எதற்காக வேண்டும்?

உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளிலும் பசுவானது சாந்தமும் தருமமும்சேர்ந்து வடிவெடுத்தது போன்றதல்லவா! பரோபகாரமே சொரூபமாயுள்ளது பசு என்றால் இது மிகையானதல்லவே. இதன் முன்னர் வெறும் கையோடும்போய்ப் பயன்பெறலாம், பண்படுத்தலாம். அவசியமானால் தடியொன்றே போதும்

இம் முறையினால் இறைவனுக்குப் பல போர்க்கருவி, கொலைக் கருவிகளைக்கொண்ட பல வேடங்கள் ஏற்பட்டன.

பசுப்போன்ற மக்களிடத்தில் அவன் தண்டாயுதபாணி வேடங் கொண்டு பசுபதியாகவேயிருக்கின்றான். இறைவனின் பல மூர்த்தங்களிலும் தடிக்கையாண்டவன் வடிவம் மிகவும் சாந்த சீலமான வடிவம், கொலைக்கருவி கிடையாது. வெறும் கையு மில்லை, திருத்தும் கை காணப்படுகிறது. இங்கு உயிர்களாகிய நமக்கு வேண்டப்படுவது அதுவே யாகும்.

உயிர்களாகிய நாம் திருத்தியமைக்கப்பட வேண்டியவர்கள்.

முற்றறிவும் முழுச்செயலும், உடையவராக நாம் இருந்தால் நம்மைத்திருத்த வேண்டியதில்லை. திருத்தாவிட்டாலும் இந் நிலையிலாவது இருப்போமா? என்றால் அப்படியும் தெரியவில்லை; அதோகதியாய்ப் போய்விடும் போலிருக்கின்றது. பத்து வயதுப் பையனையும் 5 வயதுப் பையனையும் அப்படியே திருத்தாமல் விட்டால் அவன் கதி என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டாம். அப்படியே மீசை முளைத்துவிட்டதனாலும் தாடி நரைத்துவிட்டதனாலும் இவன் திருத்தவேண்டாத பெரியவனாகிவிட்டான் என்பது இல்லை. சில பகுதியில் அப்போதும் இவன் சிறுபிள்ளையாகத் தானிருக்கின்றான். "என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி நின்று எய்த்தலைந்தேன்" என்னும் மணிவாசகத்தாலும் மகன் எனும் சொல் பிள்ளைக்கேயன்றி 'மகனெனல் மக்கட் பதடி யெனல்" என மக்கட் பொதுமைக்கும் வருதலினாலும், மக்களென்னும் சொல்லும் மனிதர்க்கு சாம்வரையும் இப் பிள்ளைமையை வலியுறுத்துவதனாலும், கிழவனாகிய முத்தபிள்ளைமைத்தன்மையை உணர்ந்து கொள்ளலாம். எப்பொழுது மனிதனுக்கு, "தனக்கு இது புரியவில்லை என்ற

நிலை இல்லாதுபோய், எல்லாம் தனக்குத், தானும்கூட, உள்ளங்கைக்கனியென உள்ளபடியில் விளங்குகின்றனவோ" அதுவரையும் மனிதன் திருந்தியமையத்தக்கவனாகியும், இவனைத் திருத்தியமைப்பவன் ஒருவன் வேண்டப்படுவதாயும் அமைந்திருக்கின்றது.

ஏனென்றால்—மனிதன் எப்படியோ அறிவாளி என்ற பேர்படைத்து வந்துவிட்டான். மேலும் பிறந்ததிலிருந்து அறிவு திருந்தியமைந்துகொண்டும் வருகின்றான். இப்படி வருகின்ற அறிவாளி, தனக்கு இயல்பாயுள்ள இந்த அறிவுப்பாதையின்முடிவெல்லைவரையிலும் போகவேண்டாமா? நான் அறிவாளி என்று திருந்திவந்தவன் எனக்கு இது நன்கு விளங்கவில்லை என்ற அளவில் இவன் நின்றுவிடலாமா? இது தானா இவன் அறிவாளி என்றதன் முடிவும் பெருமையும்? ஆதலால் மனிதன் அறிவாளி என்று வந்தபின்னர் 'எனக்கு இது அறியப்படவில்லை' என்ற நிலை எப்பொருளிலும் ஏற்படாதவாறு திருந்தியமைத் தக்கவனாயிருக்கின்றான். அப்போது தான் "மனிதன்அறிவாளி, அறிஞனாய்திருந்திவந்தான், இடையில் நின்றுவிடவில்லை; மெல்லமெல்லத்திருந்தி முழு அறிஞன் ஆகிவிட்டான்; இப்போது அவனால் எல்லா விதத்தாலும் அறியப்படாத ஒருபொருளும் கிடையாது" என்ற உயர்ந்த சிறந்த முடிந்த நல்ல பெயர் அவனுக்குக் கிடைக்கும்.

ஆதலால் இங்கு உயிர்களாகிய நமக்கு வேண்டப்படுவது நம்மைத் திருத்தியமைப்பதேயாகும். நான் அல்லாத உடம்பை

நான் எனக்கருதி, எனதல்லாப் பொருள்களை எனதெனக் கருதி, வீண் அபிமானம் செய்து தலைகீழாக நடந்து, சொற்ப ஆயுளையும் தனக்கும் பிறர்க்கும் பயன்படாதவாறு கழிக்கின்றோம். இஃதைத் திருத்தியமைக்க தடிக்கையாண்டவனால்தான் முடியும்.

பொருள்களின் இயல்பை, உண்மையை உள்ளவாறு அறிவித்தால்—அநித்தியத்தை, அநித்தியம் என்று காட்டினால்—நீர்க்குமிழி வாழ்வை உள்ளபடியறிவித்தால், அந்த உணர்வு அறியாமையால் மறைபாதபடி காப்பாற்றப்பட்டால், பின்னர் மக்கள் தமக்குள்ள சொற்ப ஆயுளையும் பழுதுபடாமல் பயன்படுத்திக்கொள்வார்கள்.

முருகன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கன் நிலைகளையும், இதற்காதாரமாயிருக்கும் உலகப்பொருள்களின் இயல்புகளையும், தடியைச் சாதனமாகக்கொண்டு ஒவ்வொன்றையும் சுட்டியும், தொட்டும், கொட்டியும், தட்டியும் அறிவிக்கின்றான். உலகமாகிய காரியப்பொருள்களின் இயல்பையெல்லாம் நன்குணர்த்திய பின்னர் இதற்குக் காரணமான மூலப்பொருள் எது? அதற்கும் மற்றபொருளுக்கும் என்ன சம்பந்தம்? அப் பரம்பொருளின் இயல்பு என்ன? இந்த பரம மூலப்பொருளுக்கும் வேறாகக் கடவுட்பொருள் வேண்டப்படுவது நியாயந்தானா? என்ற அடிப்படைக் கேள்விகள் மக்களுக்கு உண்டாகின்றன. இக் கேள்விகளுக்குத் தகுந்த பதில் தடிகொண்டே முருகன் விளக்கிக் காட்டுகின்றான்.

இறைவன் எங்கும் ஒரே படித்தாய் இருக்கிறான்.

இந்தத்தடி, அடி, நடு, முடியாகிய மூவிடத்தும் ஓரே வியல்பாயிருப்பது போல நானும் அந்த மூன்றினிடத்தும் ஓரே வியல்பாயிருக்கிறேன். மேலே கைலாசம் வைகுண்டம் பரம பதம் பரமமண்டலங்களிலும், பாதாளக்குழிகளிலும், ஒ ரே படித்தாகவேயிருக்கின்றேன்.

என் கைப்பாகத்தைக்காட்டிலும் கால்பாகத்திலிருப்பது சிறுத்தோ, பெருத்தோயில்லையல்லவா அப்படித்தான் எ ன் வடிவம் எங்கும் ஓரே படியாய் உள்ளது என்று நினையுங்கள்.

இந்தத்தடி என் தலைக்குக்கீழே கால் வரையுமிருப்பது போலப் பலவிதமான எல்லா அண்ட கோடிகளும் என் காலள வில் இருக்கின்றன. என்னளவுக்கு ஒ ரு பொருளுமில்லை. ஆகாயம் காலம் திக்கு எங்கும் இருக்கும் என்று நினைக்கிறீர் கள். இதுவும் என் காலோடு சரி என் முடியளவுக்கு ஒன்று மில்லை எ ன் று இத்தடியைக்காட்டி தன்னியல்பைக் காட்டு கிறான்.

சத்து சித்து ஆனந்தம் நித்தியம் பூரணம் சத்தாதி ஐந்தையும் தடி விளக்கும் தன்மை

இத்தடியானது பாதத்திலிருந்து தோளளவுக்கு காண படுகிறது. இதிலிருந்து விளக்குவது யாது?

எண்சாண் உடம்பிற்கு சிரசு பிரதானம். அறிவின் பகுதிகளெல்லாம் அதில் மிகுதியும் உண்டு. தலை யொழிந்த கால் வரையுமுள்ள பகுதியில் பரிசத்தை உணரும் அறிவு ஒன்று தான் உண்டு. இது தோலைப்பற்றி நிற்றலால் தோலுணர்பு என்றும் உடம்பு பற்றி நிற்றலால் மெய் உணர்வு என்றும் சொல்வார்கள். இதற்கு மேற்பாகமான தலையில் இந்த உணர்வும் உண்டு. இஃதன்றி இன்னும் நாலு உணர்வுகளுமுண்டு. அவைகள் உருவம், ஓசை, நாற்றம், சுவை, ஆகிய நான்கையும் அறிகின்ற கண், காது, மூக்கு, நாக்கு என்பவைகளாகும்.

உடம்பில் இயல்பாயுள்ள இந்த ஐந்தும் கடவுளிடத்தில் இயல்பாயுள்ள சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணம் என்னும் பெருந்தன்மைகளை அறிவிக்கின்றன. இத்தகைய சிறந்த பகுதியாகிய தலைப்பாகத்தில் தடி விளங்கவில்லை. அதாவது ஐந்தும் நிரம்பிஉள்ள முகப்பாகத்தில் தடி விளங்க வில்லை. தோளிலிருந்து பாதம் வரையுள்ள ஒருணர்வுமாத்திரமுள்ள பகுதியில் மாத்திரமே இந்தத்தடி விளங்குகிறது.

தடி தோளின் அளவு நிற்பதன் தத்துவம்.

இது இந்த உலகமானது இறைவனது இருப்பு ஒன்றை மாத்திரம் பெற்று "உலகம் இருக்கின்றது" என்பதை உணர்த்துகின்றது. இதனாலேதான் உலகம் நம்மனோர்க்கு ஞானமயமாக அறியப்படுவதில்லை. "உலகம் இருக்கிறது" என்று ஒன்று மாத்திரம் அறியப்படுகிறது. இவ்வுலகம் ஞானரூபமாக

விளங்காமையினாலேயே மக்கள் அதை ஜடம் (அசித்து) என்று கருதுகிறார்கள். உண்மையில் ஜடம் என்று தனித்து ஒரு பொருள் இல்லை. எப்படி என்றால்:—மெய் யென்று தனித்து ஒரு எழுத்தில்லை..."எழும் அணுத்திரள் ஒலி...வெவ்வேறு எழுத்தொலியாய் வரல்" என்னும் இலக்கணத்தில் காரணமான மூலஒலியலைகளே உயிர்என்றும் மெய்என்றும் அவற்றுள்ளும் குறில் நெடில் வண்கணம் மென்கணம் இடைக்கணம் என்றும் இவற்றுள்ளும் இன்னும் பல வெவ்வேறு பகுதிகளாகவும் காரிய எழுத்துக்களாய் அமைகின்றன. அது போல முதற் காரணப்பொருளினின்றும் பல்வேறு உலகப் பொருள்களுண் டாயின. குடத்திற்கு மண்போன்று இவ்வுலகத்திற்கு ஆதா வாயிருக்கும் ஞானநந்தங்களெல்லாம் மக்களுக் குண்டான அறியாமை காரணமாக விளங்குவதில்லை. "நல்லறிவோர் உலகை ஞானவடிவென்றே சொல்லுவர்" என்னும் ஈசுவர கீதைப்பிரமாணத்தாலும் இதையறியலாம். எல்லாம் சிவம் என நின்றாய் போற்றி! என்னும் ஆளுடையரசர் வாக்காலும் இதை அறியலாம்.

உலகப் பொருள்களில் முருகனின் இருப்பு விளக்க இன்பங்கள்.

மண், கடல், மலைகளிடத்திலும் ஞானேந்திரிய அந்தக் காரணங்களிடத்திலும் உயிரிடத்தும் இறைவனது இருப்போடு விளக்கமும் (இன்பமும்) தகுதிக்குத் தக்கவாறு விளங்கும். இதனாற்றான் மண், கல், மரம் முதலிய பொருள்களில் மண்

ணிருக்கின்றது, மரம்இருக்கின்றது கல்லிருக்கின்றது என்று, இருக்கின்றது என்னும் இருப்பு ஒன்று மாத்திரம் விளங்குகிறது. ஞானேந்திரிய அந்தக்கரணங்களில் கண்ணிருக்கின்றது, கண் பார்க்கின்றது; காதிருக்கின்றது, காது கேட்கின்றது; மனம் இருக்கின்றது, மனம் அறிகின்றது; புத்தி இருக்கின்றது, புத்தி ஆலோசிக்கின்றது என்னும் இரண்டியல்பும் விளங்குகின்றன. இனி உயிர்களாகிய ஆன்மாக்களிடத்தில் உயிர் 'இருக்கின்றது' நீ 'அறிகின்றாய்' நான் 'ஆனந்திக்கின்றேன்' என்று சத்து, சித்து, ஆனந்தமாகிய மூன்றும் விளங்குகின்றன. இதில் காரியப் பார்வை மாத்திரமுள்ளவன் உயிர்வேறு மெய்வேறு அதுவேறு இதுவேறு என்றுதான் உணருவான். பாவம் அவன் மேலே குற்றமில்லை. அவன் கண்ணுக்கு அவ்வளவுதான் வெளிச்சமுண்டு. காரியத்தோடு காரணப்பார்வையும் உள்ளவனோ இவ்வளவு வேற்றுப்பொருள்களையும் அறிந்து இவையெல்லாம் அதுவாக இருக்கின்றன என்னும் மேலான ஒற்றுமைப்பொருளையும் அறிந்து கொள்வான்.

தடி ஒரே இயல்புள்ளதாயிருந்தாலும் அடி நடு முடி என்னும் இவ்வளவு பேதமிருப்பது இதை விளக்குகின்றது:— அடிப் பாகமான பூத பௌதிகங்களெல்லாம் இறைவனின் இருப்பு மாத்திரத்தைப் பெற்றிருக்கின்றன. அவன் கைக்குள்ளிருக்கும் முடிப் பாகமான உயிர்களெல்லாம் மெய், அறிவு, இன்பம் என்னும் மூன்றையும் பெற்று

விளங்குகின்றன. இடைப்பட்ட கருவி கரணங்களெல்லாம் உண்மையையும் உணர்வையும் பெற்று விளங்குகின்றன என்னும் பொருள் குறிப்பாலுணரக் கிடக்கின்றது.

இன்னும் இத்தடியில் அடி, முடி, நடுவாகிய முப்பகுதியும் நேர்மையாய் அமைந்திருப்பது, மக்களும் அறம்,பொருள் இன்பங்களில் சாயாது நேர்மையாயொழுகி வருவார்களானால் நாலாவது வீட்டுப்பகுதி தானே கிடைக்கும். அதற்கும் சேர்த்து தடி பிடிக்கவேண்டிய அவசியமில்லை, அது தானே சித்திக்கும் என்பதையும் விளக்குகின்றது.

"தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்"

"இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை"

என்னும் குறள் மந்திரங்களும் இதற்கு உதாரணமாயிருக்கின்றன.

இன்னும் இத்தடியைக் காட்டி முருகன் சொல்வதாவது, மக்களே! அடியிலும், முடியிலும், இத்தடி நேர்ப்பட்டிருப்பது போல நீங்களும் வாழ்விலும், தாழ்விலும், நேர்பட்டிருக்க வேண்டும். அப்படியே இரட்டையிரட்டையாயுள்ள இன்ப துன்பம், நன்மை தீமை, இகழ்ச்சி புகழ்ச்சி, லாப நஷ்டம் முதலியவற்றில் நேர்பட்டு சாந்த சீலர்களாக இருங்கள். அப்போது எனக்குமுன் நேர்பட்ட இது நிற்பதுபோல, நேர்

பட்ட உங்களுக்கு முன்னானும் நேர்பட்டு விடுவேன் என்பதாகும்.

இன்னும் இத்தடி கோணுதிருப்பது—மக்களே! இத்தடி போல உங்கள் அந்தக்கரணத்தையும் (மனம் புத்திகளையும்) கோணுது வைத்திருங்கள். உடம்பு கோணினும் குற்றமில்லை உள்ளங்கோணைப்படாது. உங்களுள்ளம் கோணுமாயின் அப்போது தண்டபாணியாய் உங்கள் முன் நிற்க மாட்டேன். பின்னர் கோதண்ட பாணியாகவோ, பரசுபாணியாகவோ தான் வருவேன். அப்பொழுது உங்களைத்திருத்த முடியாது. கொன்று போடுவேன், சித்திரவதை கூடச்செய்து விடுவேன், என்பது போன்ற பல மேலான உண்மைகளை இத்திருக்கோலம் விளக்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வாருக முருக மந்திரம் ஆண்பால் ஒருமையை ஏற்றுக்கொண்டதற்கு இதுவரையும் சிறிது சொன்னேம்.

தனித்து நிற்காது.

இனி இது மற்ற மந்திரங்களைப்போலப் பெண்பாலை ஏற்பதில்லை என்றேம். இது எதை உணர்த்துகின்றது என்ருல்:—

கொடியானது கொம்பைப்பற்றிச் சுற்றிப்படர்ந்து அதை அழகு செய்து மலர்ந்து பல்லோர்க்கு முபகாரமாக மணம் வீசுகின்றது. தனித்து நின்று இவ்வாறு செய்யத்தக்கது அன்று.

உண்மையில் சூடு இல்லாவிட்டால் நெருப்புக்கு எந்த மதிப்பும் கிடையாது. பஞ்ச பூதம் கொஞ்ச பூதமாகிவிடும். மண்ணுதிவரிசையில் எண்ணுவாரற்றுப்போய்விடும். சூடானது நெருப்பென்னும்பொருளில் அனுதியே இரண்டற இயல்பாய்க் கலந்து முழு உலகத்தையும் சுட்டுவிடும் என்று பயமுறுத்து கின்றது. அனுகூலம் செய்து அன்பு காட்டி ஆதரவும் செய் கின்றது. இவ்வளவு பெரிய சூடு என்னும் ஆற்றல், தீப் பொருளைப் பற்றிநின்றபொழுதுதான் கூடுகின்றது. தனித்துக் கூடுவதில்லை.

இதுபோலத் தனித்துநிற்கும் ஆற்றல் சிவத்துக்குத்தான் உண்டு; சத்திக்கில்லை. சத்தி சிவத்தைப்பற்றி நின்று தான் தனது சகல வல்லமைகளையும் ஆடம்பரங்களையும் செய்யும். கூடாததைக் கூட்டிவைக்கும், உண்மையாக இல்லாததை உண் மையாகவே சத்தியமாய் இருக்க—நடக்கச் செய்யும். இவை யெல்லாம் பராசத்திக்குப் பரம்பெரும் பொருளோடு அனன்ய மாய்க் கூடிக்கிடந்தபொழுதுதான் கூடுகின்றது. இப்படிச் சொல்லுவது, வாங்கிக்கொள்ளும் புத்திக்கு விளக்கத்தின் பொருட்டேயாகும். இவ்விரண்டுக்கும் உள்ள கூட்டம் இன் றைப நேற்றைபதல்ல, அனுதியே உள்ளதாகும். இந்த அனுதி கூட்டத்தின் பெருமையினுல்தான் அதன் காரியமாகிய உலகம் இன்றும் அழகோடும் இளமையோடும் வலிமையோடும் மறி யாதை கடவாமலும் வந்து (தோன்றிக்) கொண்டே இருக் கின்றது.

இதனது அபேத நிலையினால் சிலர் இச் செயலெல்லாம் சத்தி பரமாகவே சொல்லுவார்கள். இரண்டுக்கும் அமைந்த உடநிகழ்ச்சியின் பெருமையினாலே சொல்லுவோனுடைய சாதுரியம்போல இவ் விரண்டினுள் எதுவொன்றையும் முதநிலைப் பொருளாக வைத்துச் சாதிக்க முடியும். ஆனால் உண்மை எது என்பதை முருக மந்திரந்தான் ஐயமின்றி விளக்கமாக அறிவிக்கின்றது.

மற்ற மந்திரங்களெல்லாம் சிவா சிவை, ரமா நாராயணீ, பிரம்மாணீ, மஹேச்வரீ, குமரீ, அழகி என்று பெண்பாலாகவும் அமைந்து தனித்து நிற்கவும், முருக மந்திரம் மாத்திரம் இதற்கிடங் கொடுக்காது ஆண்பாலுயர்திணையாய் தனித்து நின்று இறைவனை விளக்கும் பெருமை தமிழ் மொழிக்கெனச் சிறந்து விளங்கும் ஒருதனிப் பெருமையாகும். உண்மையில் தேவாரத்தை அடியிலிருந்து உள்ளத்தால் தடவி, முடிவரையும் கண்ட பெருமக்களுக்கு இதன் உண்மை நன்கு விளங்கும். இதை மீண்டும் சொல்லலாம்.

சிவ முருக ஒருமை. (பன்மை இல்லை)

இது முருகர் என உபசார வழக்கிலாவது, பக்திப்பெருக்காலாவது மற்ற எதனாலும் வாராததுகொண்டு ஒரு பேருண்மையை அறிவிக்கிறது. இனியனும் அழகனுமான கடவுளது தோற்றங்கள் சூலபாணி சக்கரபாணி கரகபாணி முதல் பலப் பல உருவங்களாக, அதற்குத்தக்க செயல் குணம் ஆற்றல்களுடன் அமைந்திருந்தாலும், அந்தந்தப் புராணாதிகளில் அப்படியே பெரிது சிறிதாகவும் பல்வேறு விதமாகவும் சொல்லி

யிருந்தாலும் உண்மையில் அவை அப்படிப்பல அல்ல. ஆங் காங்கு நன்மை செய்யவும் தீமையகற்றவும் அவ்வப்போது எடுத்த வடிவங்களேயன்றி உண்மையில் கடவுள் ஒருவனே யாகும் என்பதை அது தீரத் தெளிய அசைவின்றி நின்று விளக்கிவிடுகின்றது. இதுவும் தமிழ் மொழிக்கெனச் சிறந் ததுபோலும். அவ்வாறனால் தகப்பன் பிள்ளை என்ற வேற் றுமையாவது சிவ-முருகனிடத்துண்டல்லவா என்றால்—நல் லது, சொல்லுவாம்:—

சிவ என்பதும் முருக என்பதும் ஒரேபொருளைச் சொல் லுவன. முன்னது வடமொழியில் நின்று எல்லாமொழிக் கும் பொதுவாயிருக்கும்; பின்னது தமிழ் மொழிக்கே சிறந்து விளங்கும். இவ்விரண்டும் அனாதி காலமாய் உலக மூலப் பொருளான கடவுளைச் சொல்கின்றன. இச்சொற்கள் சமயம் போலவும் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறும் அச்சிவபரம் பெரும் பொருள் அருளால் எடுக்கும் திருவுருவங்களின் மேல் பொது வாகவும் சிறப்பாயும் நிற்கும். இதை "சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" "முன்னையார் மயி லூர்தி முருகவேள் தன்னையார் எனில் தானோர் தலைமகன் என்னையாளும் இறையவன் எம்பிரான்" என்ற தேவாரத்தா லும், "அரும் பெறல் மரபில் பெரும் பெயர் முருக பேரியோ ரேத்தும் பெரும் பெயர் இயவுள்" என்ற நக்கீரர் வாக்காலும் இவ்விருமந்திரமும் இருமொழியிலும் சிறிதும் ஏற்றத்தாழ் வின்றி ஒரு பொருளுக்கே மிகவுரிய சிறந்த மந்திரங்களாய்த் தொன்றுதொட்டு, விளங்குவன அறியத்தக்கதாம்.

ஓரளவுள்ள மக்களுக்கு விளக்கத்துக்காகப் பிள்ளையென்றும் தகப்பனென்றும் சொன்னதேயொழிய உண்மையில் ஒன்றேயாகும். பெரும் பெயர்க் கடவுள் என்றபின் பிள்ளையெனச் சொல்லலாமா? என்றால்:—சொல்லும்விதத்தில் சொன்னால், நன்றாகச் சொல்லலாம். எல்லாமாகவும் சொல்லுமாறமைந்த ஒன்றை மகனென்று சொல்லுவது மற்றவற்றை எல்லாங்காட்டிலும் மிகச் சிறந்ததேயாகும். ஒரு பொருளை வடிகட்டினபொழுது அதன் முன்நிலைக்கும் பின்னிலைக்கும் என்ன வித்தியாசம் உண்டோ அவ்வளவுதான் இங்கு தகப்பனும்—பிள்ளையும்.

உடம்பென்று வந்தபின்னர் அதில் சிறந்தது தலையாகும். அத்தலையிலும் சிறந்தது கண். அதிலும் சிறந்தது கருவிழியாகும். அதிலும் சிறந்தது அதன் நடுக் கடுகுபோன்ற சிறு பாவையாகும். அதிலும் சிறந்தது அதன்வாயிலாக வெளிவரும் ஆன்ம அறிவொளியாகும். உடம்பெடுத்ததன் பயனும் அதில் தான முடிவடைகின்றது. ஆன்மாவானது உயிர்வாழும் காலத்தில் உடம்பினின்றும் வெளிவரவேண்டுமானால் கண்வாயிலாகத்தான் வெளிவரும். மற்ற இந்திரியங்களின் வாயிலாக வெளிப்போகாது. கிணற்றுத்தண்ணீர் வாய்க்கால் வாயிலாக வெளிவரும் காலந்தான் மக்கள் பெரும்பயன் பெறும் காலமாகும்.

இவ்வாறு வெளிவந்த கண்ணொளிதான் சூரியமண்டலம் சந்திரமண்டலமும் கடந்து வியாபிக்கும் தன்மையுடையது. இப்படியாக இந்தச்சாதாரண உடம்பிலேயே கண்ணுக்கும் அதன் ஒளிக்கும் இவ்வளவு சிறப்பும் ஆற்றலும் மேன்மையும்

இருக்குமானால் இனி சச்சிதானந்த சொரூபமே முன்சொன்ன முறையில் நெய்தடித்ததுபோலத் திருவுருக்கொண்டு, அந்த உருவத்திலேயும் பொதுவான மற்ற அவயவங்கள் அல்ல, கண்ணாகும். கண்ணுள்ளும் சாதாரணமான பக்கவாட்டமாயுள்ள கண்ணல்ல, ஞானமேனியில் உள்ள கண்களிலும், மேனோக்கிய தீபஜ்வாலை போன்ற கண்ணாகும். இந்த ஞானக்கண்வழியாக வரும் சிவத்தெளிவின் ஜோதிப்பிழம்பே மீண்டும் ஒரு திருவுருக்கொண்டு காலும் கையும் மார்பும் முகமும் கண்ணும் கொண்டு வேலும் ஒரு தடியும் பிடித்து நிற்கின்றது என்றால் உண்மையில் அதன் முன் சென்றும் அந்தக்கண்முன் நின்றும் எது அதைக் காணமுடியும்? எங்கு சுட்டுவிடுமோ என்று கள்ளம் கபடம் நிறைந்த நம்மனம் பயப்படுகின்றது. பனியை விழுங்கிய சூரியன், உண்மையில் அப்பெரும் பரமான அறிவுத் திரட்ஜோதி விழுங்குவதற்குப் பனியாகவே ஆகின்றான். அந்த அளவுக்குக்கூடப்போதாதோ என்னவோ தெரியவில்லை; இதனாலேதான் ஒன்று பிரமம் என்றும், அதன் தெளிவாய இது சுப்பிரமம் என்றும் சொல்லப்படுகின்றது. இப் பூரண அறிவின் தெளிவின் தெளிவைத்தான் தந்தை மைந்தன் என்று சொல்லப்படுகின்றது. இந்த முடிந்த நிலையை அறிவிக்கத்தான் தமிழெழுத்துக்களின் வரிசையில் முடிவாயுள்ள னகரத்தைத் தன் பெரும் பெயரின் முடியில் வைத்துக் காட்டுகின்றான்.— அரும் பெறல் மரபில் பெரும் பெயர் முருகா—முன்னையார் மயிலூர்தி முருகவேள்" என்ற நக்கீரர்-அப்பர் வாக்காலும் இப்பொருள் அசைவின்றியது என்று கண்டுகொள்ளலாம்.

நாவரசின் பாவரசு.

தமிழ்மொழியில் பிரமாணமாய்ச்சிறந்த நூற்கள் தேவர் குறள் முதலாக நம்மாழ்வார்மொழிநடுநாயகமாகத் திருமந்திரம் ஈறாக உள்ளவைகளாகும். இவற்றுள்ளும் இறைவனாலே அரச வாக்கென்று அங்கீகரித்து அனைவரும் கேட்க உலகுக்குச் சொல்லியது அப்பர் தேவாரமாகும். அவற்றுள்ளும் ஒன்று இப்பெரும் விஷயத்தை ஐயமயக்கங்களின்றித்தெளிவாய் விளக்கிநிற்கின்றது. "தனித்தமிழ் மந்திரம் இதுவேதான்" என்று சொல்லும்படி அப்பாசுரம் அரசு செய்து கொண்டிருக்கிறது. அது வருமாறு:—

முன்னையார் மயிலூர்தி முருகவேள்
தன்னையாரெனில் தானோர் தலைமகன்
என்னையாளும் இறையவன் எம்பிரான்
பின்னையாரவர் பேரெயிலாளரே!

தேவார திருவாசகங்களில் பல விடங்களில் முருகனைப் பற்றி சொற்கள் பயின்று வருகின்றன. வந்த விடமெல்லாம் சிறிது கூர்ந்து கவனிப்போமானால், பிதாபுத்திர சம்பந்தமே பெரும்பாலும் வழக்கமாகவரும். சில விடங்களில் "மற்றவரோடும் வணங்கினான் குமரன்" என்பன போன்றவையும் வரும். ஒருஇடத்தில் சிறுவனையும் தேரேன் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு வருமிடங்களில் கந்தன், குமரன், கடம்பன், வள்ளிமணாளன் பன்னிரெண்டு கண்ணுடைய பிள்ளை, ஆறுமுகன், சூரபன்மாவைத் தடிந்த வேல் குமரன் இவைகளும்

இவைபோன்ற இன்னும் சில பெயர்களும் வருகின்றன. இத்தோடு முருகன் என்னும் சொல்லும் பயன்று வருகின்றது. எல்லாவிடங்களிலும் வந்திப்பவன் வணக்கத்திற் குரியவன் தந்தை மைந்தன் ஆண்டானடிமை சிறு பிள்ளை முதலியன வாகத்தலைமைத் தானத்தைக் காட்டிலும் சிறிது அதற்கு அடுத்த தானங்களே இச் சொற்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் எந்தச் சொல்லுக்கும் தலைமைத் தானம் கொடுக்கப்படவில்லை, ஆனால் ஒரே இடத்தில், ஒரே பாசுரத்தில், ஒரே சொல்லுக்கு, ஒரே தடவை, தலைமைத் தானத்திலிருந்து அரசு செலுத்தும் நாக்குத் தலைமைத்தானம் கொடுத்திருக்கின்றது. அது—முருகவேள் என்னும் மந்திரத்திற்கேயாகும்.

அந்தத் தனியரசுப் பாசுரத்தின் சுருங்கிய பொருள்:— முன்னையார்-இவர் யாவற்றிற்கும் ஆதியாயுள்ளவர், ஆதி பகவன், ஆதிமூலப்பொருள். மயிலூர்தி என்பது மயில் பச்சை, அது கருணை. இதைத்தவிர அவனுக்கு நேர்மையான தகுந்த வேறு இடம் எது? யாவருக்கும் முன்னவன், அருட்டிருவங்களில் யாவருக்கும் பின்னவனாய் வேல்சாமியும் தண்டபாணியாகவும் வந்து, அடித்துக் கொல்லாமல் மயிலாய்த் திருத்திப் பாதத்தின்கீழாட்கொண்டிருக்கின்றான் என்னும் பிறவற்றிற்கில்லாத முருகனது தனிச்சிறப்பை எடுத்துக்காட்டுகின்றார். மயிலூர்தி என்று. எத்தகைய பெரிய கொடியவனையும், கொன்று தொலைத்துவிடாமல் அவனையும் திருத்தி எடுத்து ஆட்கொள்ள முடியும் என்று அப்பர் குறிப்பிடுகின்றார்.

இனி முதல்வனும் பரங்கருணையினால் பசுக்களைத்திருத்தி யமைத்தாள்பவனுமான பசுபதி எந்தத்திருநாமத்தால் வேதங்களாலும் உலகத்தாராலும் அழைக்கப்படுகின்றான் என்றால், சொல்கின்றார்:— **முருகவேள்** என்று. எத்தனையோ பலமுறை கொண்ட நாமங்களை, தானே பலவிடங்களிலும் சொல்லியிருந்தும், முடிந்த அபேத நிலைகூறும்போது அரசவாக்குச் சொல்லும் திருநாமத்தைப் பாருங்கள், முருகவேள் என்கின்றார். ஆஹா இந்த மூன்று பதங்களும் தனித்தமிழ் சொற்களாய் இந்த வரிசையில் அமைந்த முறைமையானது அரசவாக்குக் கென்றே அமைந்தது போலும். அல்லது அரசவாக்கே இதன் அருமைகண்டு இப்படி அமைத்தது போலும். எல்லாப் பொருளுக்கும் முதல்வனும் (முதல் காரணனும்) பசுக்களுக்குப் பசுபதியாயுமுள்ளவனும்தான் முருக சப்த வாச்சியம் என்னும் முடிந்த பெரும் பொருளை இக்கிரமத்தினுணர்த்துகின்றார்.

இம் முருகனைச் சிலர் பின் மகன் என்றல்லவோ சொல்லுகின்றார் என்று கேட்டவர்க்குச் சொல்லுகின்றார்:- **தன்னையார் எனில் தான் ஓர் தலை மகன்** என்று. ஒருவன் முதல்வனாக இருக்கலாம் ஆனால் தலைவனாகவும் இருப்பது என்பது முடியாத காரியமாகும். இங்கு முருகனே முதல்வனாகவும் ஒப்பற்ற தலைவனாகவும் இருக்கின்றான். முருகனைத்தவிர முதல்வனும் தலைவனும் வேறொருவர் இல்லை என்பதாம்.

அவ்வாறானால் அருந்துணையாய் என்னை அனாதிகாலமாய் ஆள்பவனும், இப்போது எனக்குச் சூலைநோய் கொடுத்துத்

தடுத்தாண்டவனும்யாரோ என்று நினைக்க வேண்டாம். என்று கூறுகின்றார்—முருகவேள், தலைமகன், என்னையாளும் இறையவன் எம்பிரான் என்று—அப்படியானால் பழநி, திருச்செந்தூர் திருத்தணிகைக்குப் போயல்லவோ இப்படிச்சொல்ல வேண்டும் என்று கேட்டதற்குச் சொல்கின்றார்:—பின்னையார் அவர் பேரெயிலாளரே! என்று முன்னவனும் அருட்கடலும், பசுபதியும் முருகவேளென்னும் சிறப்புப் பெயரைக் கொண்டவனும் தனித்தலைவனுமான அவன் யாரோ என்று நினைக்காதீர்கள்! இதோ இப் பேரெயில் என்னும் திருப்பதியை இடமாகக் கொண்ட சிவலிங்கப் பெருமானேயாகும் என்கின்றார்.

சிவத்திற்கும் முருகனுக்கும் இது மிகப்பொருத்தமான இரண்டற்ற அபேத நிலையாகும். இப்பாசுரம் ஸாமான்ய வாக்கினின்றும் வெளிவந்ததல்ல. சொல்லுலகமனைத்திலும் சுருதியாதி மூன்றிலும் நடு நிலையில் நின்று செங்கோல் செலுத்தும் பேறுபெற்ற திருநாப்பெற்ற பெருமான் சொன்னதாகும். இது பின்வரும் முருகசம்பந்தமான நூல்களுக்கெல்லாம் அஸ்திவாரமாகும். அரசவாக்கில் இடம் பெறாதபோது மீண்டு யார் சொல்லித்தான் அது என்ன பலம் பெறப்போகின்றது? அல்லது நேர்மையானதும்உண்மையானதுமானஒன்றை உள்ளபடி விளக்கி அழுத்தம் திருத்தமாகச் சொல்லாதபொழுது அரசநாவுக்குத்தான் என்னபெருமை இருக்கப்போகின்றது? இவ்விரண்டு (குற்றமும்) நேராதமுறையில்தேவாரத்திலும் இது அரசவாக்கில் சிறப்பாயமைந்திருக்கின்றது. உண்மையில் இது நம் முன்னோர்களும் சந்ததியார்களும் செய்தபுண்ணியப்பயனாகும்.

இது முருக மந்திரத்தின் முடியிலுள்ள அன் • என்பதற்கு நேரிய விரிவுரைபோன்றும் அமைந்திருக்கின்றது. மற்ற இரு மொழியிலும் உள்ள முருக சிவ சம்பந்தமான புராண இதிகா சங்களெல்லாம் இந்த நாவரசின் பாவரசுக்கு விளங்கிய வியாக்கியானம் போன்றும் அமைந்திருக்கின்றன.

முருகனுக்கும் சிவனுக்கும் இத்தகைய நேர்மையான அபேத நிலையைச் சொல்லும் பிரமாண பாசுரத்தைக் காண்பது உண்மையில் அரிதாகும். இதனாற்றான் சிவ பஞ்சாக்கரத்திற்கு எவ்வளவு மகத்துவமுண்டோ அவ்வளவும் முருகபஞ்சாக்கரத்திற்குமுண்டு என்று சொல்லப்படுகின்றது. இந்த ஒற்றுமை (அபேதம்) சிவனுக்கும் முருகனுக்கும் மாத்திரமா? இல்லை இல்லை. வடமொழிக்கும் தென்மொழிக்கும் உண்டான அபேத ஒற்றுமை யாகும். "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" ஆரியமுஞ் செந்தமிழும் ஆனான் கண்டாய், ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன், செந்திரத்த தமிழோசை வடசொல்லாகி, என்ற பிரமாண சுருதி வாக்கியங்களினாலும் இவ்வொருமையின் பெருமையை நன்குணரலாம்.

ஐந்தெழுத்து அனைத்திற்குமாகும்.

ஒன்று பலவற்றிற்கும் உதவும். ஒன்று ஒன்றுக்கும் உதவாமற்போவதும் உண்டு. ஒருவன் பல குடும்பத்தையும் காப்பான், பல வழக்குகளுக்கும் யோசனை சொல்லித்தீர்ப்பான். ஒருவன் தன் குடும்பத்தையே சரியாய்க்காக்க மாட்டாது அலைவான், தன் வழக்கையே காலமெல்லாம் பிறரிடம் கொண்டு போய்த்தொலைவான். இப்படி இருக்கப்பின் இவன் பிறர் வழக்கைத்தீர்ப்பது என்பது எங்கே நடக்கப்போகின்றது, பாவம்.

ஒன்றே பசிக்கு உணவாகவும் நோயுக்கு மருந்தாகவும் அமைவதுபோல, இந்த நகர முதலான ஒன்றே அறம் பொருள் முதலியவற்றிற்குச்சாதனமாதல்போல வீட்டுவழிக்கான சிவோகம் பாவனைக்கும் இது கிடந்தபடியே சாதனமாகும். ஒவ்வொன்று ஒவ்வொன்றற்குத்தனிச்சாதனமாயிருக்கின்றது. இது அப்படி இல்லை.— ஒரு விவசாயிப்பெருமகனுக்கு உள்ள இரண்டு காளைகள் உழவுக்கும்போய் சவாரிவண்டிக்கும் விரைவாய்க்கருத்தறிந்து பகையாது முன்னுக்குப்போகுமானால் அப்படியே கமலைக்கும் பின்னுக்கு நன்றாய் வருமானால் அக்குடும்பத்தாருடைய கண்ணும் கருத்தும் இக்காளைகள்மேல்தானிருக்கும். பெரும் சிரமத்தைக்குறைத்து அதிக லாபத்தை உண்டு பண்ணுகின்றன. இன்னும் தனித்தனி உள்ளதைக் காட்டிலும் இது ஒவ்வொன்றிலும் சிறப்பாய் வேலை செய்து வருமானால்—பின்னர் இதன் மேன்மையையும் நன்மையையும் பற்றிப் பேசுவானேன்? அத்தகையது இப்பஞ்சாக்கரம், இதன் பெருமை, சிறப்பு, ஜெபம், சிவோகம்பாவனை, எழுத்துமுறை வைப்பு, விபரத்தோடு மாற்றிச்ஜெபிக்கும் முறை. விபரமின்றி மாற்றுவதால் வரும் குற்றம், இதன் எளிமை-வலிமை முதலியன, "இறைவனும் எழுத்தைந்தும்" என்னும் நூலில் ஓரளவுக்கு எட்டினமட்டும் விசாரித்துச் சொல்லியிருக்கிறோம். இம்மந்திரத்தில் இடையில் ஏற்பட்ட தவறுதலையும் விசாரித்து விளக்கிக்காட்டிப் பதில்சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும் ஒன்று:—கடவுள் இயவுள் போன்றவைகள் தனித்தமிழ்ச்சொற்களாயினும், அவைகள் அஃறிணை முடிபை

யும் ஏற்கும் இயல்புடைத்தாயிருத்தலின் இவ்விடத்திற்கவைகள் நேர்படாவென்றுவிடுக்கலாம். இறைவன் என்னும் சொல்லில் இந்த இழுக்கில்லை என்ருலும் முருகமந்திரத்தின் பல சிறப்புக்களில் சிலவற்றைக்கூடத் தொடர முடியாதிருத்தலின் இதுவும் அதற்கு நேர்படாது என விடுக்கலாம்.

மூன்று, ஐந்து, ஆறு எழுத்து—ஜபம்.

இனி எழுத்து முறை—வாக்கு ஜபத்துக்காலுைம் அருச்சனைக்காலுைம் மானசீகமாலுைம் முருக மந்திரத்தோடு போற்றி என்னும் இரண்டெழுத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அப்போது அது ஐந்தெழுத்தாந் தன்மையை அடைகின்றது. போற்றி என்பதில் றகரமெய் அதிகப்பட்டு ஐந்தெழுத்துக்குமேலும் காணப்பட்டாலும், பஞ்சாக்கரத்தில் "நமச்சிவாய வாழ்க, நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே, நமச்சிவாயவே நாநவின் றேத்துமே" என்ற திருவாசக தேவாரங்களில், சகரமெய் அதிகப்படினும் பஞ்சாக்கரம் என்பதே நியாயமாகும். ஏனென்ருல்:—உயிரோ அல்லது மெய்யோடு கூடிய உயிரோதான் எழுத்து என்று சொல்லப்படும். தனித்தமெய் ஒலிக்கப்பட்டு எழுத்தென்னும் விவகாரத்தை அடைவதில்லை. இந்த நியாய முறையில் போற்றி என்பது இரண்டெழுத்தேயாகும். அதனுல் **முருகா போற்றி** யென்பது பஞ்சாக்கரமேயாகும்.

வடமொழியில் மூலபஞ்சாக்கரத்திற்கு எவ்வளவு பெருமையும் பொருளும் உண்டோ அதில் எள்ளளவும் குறையாத

தும், ஏற்றத்தில் இன்னும் அதிகமுமாகும். அப்பனுக்கு மகன் அதிகக்கோளாறு படைத்தவன் என்ற உண்மையை யும் இதில் காணலாம். இதன் பொருள் முருகனே உனக்கு வணக்கம் என்பதாகும்; உனக்கு என்ற சொல் இத்தகைய பெரிய மந்திரங்களிலெல்லாம் மறைந்திருக்கும் என்றுசொல் வார்கள். இன்னும் பல அரிய பொருள்கள் இத்தகையமந்திரத் தில் மறைந்திருந்து உபதேசத்தாலும் மனனத்தாலும், ஜபத் தாலும் தியானத்தாலும் வெளிப்படும் நிலையில் இருக்கும். இதனாற்றான் இதற்கு மறை என்ற காரணப் பெயரும் இருக் கின்றது. இது பதி பசு பாசங்களையும் அதன் மேலான ஒற் றுமையையும் விளக்கும் தன்மையை 'இறைவனும் எழுத் தைந்தும்' என்னும் நூலில் காணலாம்.

"பழுத்தன ஐந்தும் பழமறை வுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறிவாரில்லை என்னும்
ஆரியமும் தமிழும் உடனே சொல்லி
காரிகை யார்க்கு கருணைசெய் தானே"

என்னும் உறுதிப்பிரமாணமான திருமூலர் திருமந்திர வாக் கிருப்பதால் இரண்டு வேதமும் இறைவனால் இறைவிக்கு முன் சொல்லப்பட்டதென்பதும், அதில் ஆரியமறையில் பழுத்தது நகாரமுதலான ஐந்தெழுத்தென்பதும், தமிழ்மறையில் பழுத் தது முருக மந்திர பஞ்சாக்கரமென்பதும் முன்சொன்ன காரணங்களாலும் நன்கு பெறப்படுகின்றது. ஓங்காரம் கூடும் போது இவ்விரண்டுமே தனித்தனி ஆறெழுத்து மந்திரமாகும்.

வாசிகம், உபாம்சு, மானசம்.

இத்தகைய மஹாமந்திரத்தை வாய்விட்டுப் பிறர் கேட்கும்படிக்கு தொடர்ச்சியாய் உச்சரிப்பது வாக்குச்ஜெபமாகும். இந்த வாக்கு ஜபத்தைப் பலரோடுங் கூடியும் பஜனைகளிலும், ஆலயப்பிரஹாரம் வரும்போதும், வாய்விட்டுச் சொல்லலாம். இது தனக்கேயன்றிக் கேட்கும் பிறருக்கும் புண்ணியமாயிருக்கும்.

இன்னொன்றுண்டு, அது உபாம்சுஎன்றுசொல்லப்படும். அது உதடு மாத்திரம் முணுமுணுவென்று அசையச்செபிப்பதாகும். இது இனிச்சொல்லும் மானசீகம் போல வாய்மூடியும் இராது. முன் சொன்ன வாசிகம் போலப் பிறர்க்குச் சப்தமும் கேட்காது. ஆனால் பார்ப்பவருக்கு மாத்திரம் (கேட்பவருக்கல்ல) ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றான் என்று தோன்றும்.

இனி மூன்றாவது ஜபம் மானசீகம். இது சப்தமுஞ்செய்யாமல் முணுமுணுத்தலும் இல்லாமல் தனித்தமனதின் வேலையாகும். பொறிபுலன்களில் செல்லாதடங்கிய மனதினால் ஒரே தாரையாகச் சிந்தித்தல் வேண்டும். இது பார்ப்போருக்கு உண்மையில் இவன் ஜபிக்கிறனா? அல்லது காட்டை மேட்டை நினைத்துக் கொண்டு கண்ணை இறுக மூடி உட்கார்ந்திருக்கின்றனா என்றுகூடத்தோன்றலாம். இது இவனுக்கும் அந்த **முருகனுக்குந்தான்** தெரிந்த விஷயமாகும்.

இந்த மூன்று பகுதி ஜபமும் ஒன்றினுக்கொன்று ஆயிரமடங்கு புண்ணியம் அதிகமாம் என்று இறைவனே தனது

கீதையில் (கூர்ம புராணத்தில்) கூறியிருக்கின்றார்.
அது வருமாறு:—

"வாசிக முபாம்சு மானதம் என்று அவற்றுளொன்றொன் றினுக்கொன்று—தேசுடைத்தென்று செப்பினர் பிறர்க்குத் தெரியவே ஜபித்திடும் ஜபந்தான்—வாசிகம் உபாம்சு வாயிதழ டித்தல் மாத்திரம் மானதம் அடங்கி—ஆசரச்சிந்தை செய்தல் ஒன்றினுக்கொன்று ஆயிரமடங்கு நல்லனவாம்" என்பதனு லும் இதை அறியலாம்.

ஓங்காரம் இவ்விருமொழி மந்திரத்திற்கும் பொதுவா யமைந்ததால் அதையும் ஆதியில் கூட்டிச் செபிப்பது நல்லது. அப்போது இரண்டிலும் ஓங்காரங் கூடி ஷடாக்ஷரம்—ஆறெ ழுத்து மந்திரம் என்னும் பெயர் பெருகின்றது. இச் சிவ—முருக மந்திரமிரண்டையும், ஓங்காரத்தோடு கூட்டியும் கூட் டாதும் உச்சரிக்கலாம். மற்ற மந்திரங்களெல்லாம் ஓங்காரம் கூட்டியே ஜெபிக்கவேண்டும் என்று பெரியோர் சொல் லுவார்கள்.

"அரும்பெறன் மரபில் பெரும்பெயர் முருகா" என்று திருமுருகாற்றுப்படையில் பெறுதற்கரிய மரபிற்பெற்ற மிகப் பெரிய பெயர் முருகன் என்பது வெளிப்படையாக விளங்கு கின்றது. பெரும் பெயராகக் கூறப்படுபவைகள் ஓம், சிவ, பிரஹ்ம, ஹர, ஹரி, நாராயண, பவ, ராம, குக—முதலியவை களாகும். இவற்றுளெல்லாம் அரும்பெறன் மரபில் பெற்ற பெரும்பெயர் எது என்றபொழுது அது முருகன் தான்என்று சிவத்தைக்கண்ட கண்கொண்டு வேறினிக்காண்பதில்லை என்று

கங்கணங் கட்டிக்கொண்டிருந்த மாபெரும் புலவன் கூறுகின்றான். எந்தக்கண் பெரும்பெயர்ப் பொருளாகச் சிவத்தைக் கண்டதோ! அதே கண் மீண்டும் சிறிது அதில் களங்கமிருக்கிறதென்று அந்தக் கல்மஷத்தையும் நீக்கித் தெளியக்கண்ட போது சொல்கின்றது:—"அரும்பெறன்மரபில் பெரும்பெயர் முருகா" என்று—இப்போது அவர் கண்ட காட்சி பூரணமாய் தெளிவடைந்ததாகின்றது. இதனால் எல்லாப் பெரும் பெயர்களின் ஆழ நீளம் அகலம் முழுதும் இம்மந்திரத்தின் ஏக தேசத்திலடங்கிக் கிடப்பது வெளியாகின்றது.

அ, உ, ம், மூன்றும் ஓங்காரத்தின் பகுதியாகும். படைப்புக்காப்பு அழிப்பும், பிரமா விஷ்ணு ருத்திரனும் முறையே அதன் தொழிலும் தெய்வமும் ஆகும். ஆகவே ஓங்காரத்தின் முடிந்ததும் சிவனைச் சொல்லுவதாயுமுள்ள மகரமும் விஷ்ணுவான உகரமும் ஒன்று சேர்ந்து முருகமந்திரத்தின் முதலில் இருக்கின்றன. நம் தனித் தமிழ் மந்திரத்தின் முதலில் சங்கர நாராயணரிருவரும் ஒருங்கு கூடி முதலெழுத்தில் அடங்கி நிற்குமானால் இனி இம் மந்திரத்தின் மற்ற சிறப்புக்களைப் பற்றி நம்மாலென்ன! தேவரால்தான் சொல்ல முடியுமா?

தனிக்கோவிலும், தனிமூர்த்தியும், தனிப்புராணமுங் கொண்ட இவ்விரு பெருந்தெய்வங்களும் உண்மையில் வேறாய்த் தனித்துநின்று மக்கள் போரிடுவதற்கு யோக்கியமாயிருக்கவில்லை. ஒரு பெரும் பெயர்ப் பொருளின் ஒரு அம்ஸமாய்க் கூடிக்கிடக்கின்றன என்பதையும் விளக்குகின்றது. ஆதலால் இது மாணிக்க விளக்குப்போன்று ஒன்றனுதவியும் வேண்

டாது விளங்கத்தக்கதும் ஜபிக்கத் தக்கதுமாகும். இதனு தவியே மற்றவைகளுக்கு வேண்டும். தீவிளக்குக்கு எண் ணையே, திரியே, அகலே வேண்டும், மின்னொளி விளக்குக்கு கம்பியும் கண்ணாடியும் வேண்டும்; மாணிக்கவிளக்குக்கு என்ன வேண்டும்? அதன் பயனையனுபவிக்கக் கண்கள் மாத்திரந்தான் திறந்திருக்க வேண்டும்.

இதைத் திரியக்ஷரமாக முருக, முருக, என்றே ஜபிக்க லாம். நிறைந்த முழுமனிதனையும் ஆடையுடுத்திக் காண்பது போல, போற்றியைச் சேர்த்துப் பஞ்சாக்ஷரமாக ஜபிப்பது இன்னும் நல்லதாகும். அத்தகைய முழுமனிதனையும் ஆடை யோடு ஆபரணமும் பூட்டிக் காண்பதுபோல ஐந்தெழுத்தோடு முன்னர் ஓங்காரமுங் கூட்டிச் ஷடாக்கரமாய் ஜெபிப்பது அதனினும் நலமாகும்.

ஜெபிக்கும்போதாவது மனச் சுத்தி உடல் சுத்தி 2ம் அவசியம். 108 தடவை காலைமாலை ஜெபிக்கவும். யானைக் கைக்கு சங்கிலிபோல ஜபகாலத்தில் தனக்கியன்ற ஒரு ருத்தி ராக்கமணியோ படிகமணியோ பவளமணியோ வைத்துக் கொண்டு எப்படி வேண்டுமானாலும் முன் சொன்ன மூன்று வித ஜபத்துக்குமே உருட்டலாம். குடும்பப்பெரும்பாரம் தலைக் கொண்ட நமக்கு சிலவேளை சமயம் கிடைக்காவிட்டாலும் விரல்கொண்டேனும் (16) தடவையாவது எண்ணிவிட்டுப் போகலாம். உண்ணலாம், உடுக்கலாம்.

முடிந்தால் சரி, முடியாவிட்டால் குளிக்கவில்லை என்று நிறுத்தப்படாது; கால்முகம் கழுவி திருநீறு தரித்து காலை

மாலையிலும் செய்யலாம். அதுவும் இயலாததற்குப் படுக்கைக்குப்போயும் 108 ஜெபித்துத் தூங்கலாம். எழும்போதும் அப்படிச் செய்துவிட்டு போகலாம். அங்கேயும் 108 முடியாதவர்கள் 16 ஆவது செய்து வருவது நல்லது. ஒருவனுக்குத் தாய்மொழி, தமிழாயிருந்தபின், அவன் இத்தனித் தமிழ் மந்திரத்தை மறந்திருப்பது நலமல்ல. எப்படியோ நடையிலோ இடையிலோ உண்ணும்போதோ உறங்கும்போதோ உழும்போதோ தொழும்போதோ வேலையோடு வேலையாக நினைப்பது நல்லது. வாழ்வு வந்த காலத்திலும் தாழ்வு வந்த காலத்திலும் சரி, உடலுக்காகப் பல நாழிகை நேரம் உழைத்துவிட்டாலும், இந்த உயிருக்கு அரை நாழிகை நேரமாவது கருத்தூன்றி உழைப்பது நல்லது. முடியாத காலத்திலும் கால், அரைக் கால், வீசம் நாழிகையாவது இதற்குச் செலவிடுவது நல்லது. சரி, அதுவும் முடியவில்லை என்பது மனப்பூர்வமாயிருக்குமானால் அப்போதும், இது விஷயத்தில் எப்போதும் யாருக்கும் முடியத்தகுந்ததாய் நல்லதொன்று இருக்கின்றது. கடைசியாக இந்தத் தமிழ்மகன் அதையாவது செய்துவந்தாற்போதுமானது. அதுவே முடிந்த பயனை அடைவிக்கும்.

உலகப் பெருவழக்காய்க் கடலொலியெனக் குமுறிஎழும் இந்த மந்திர ஓசையானது தானே (அதுவே) வலியவந்து மக்கள் காதுக்குள்ளே புகும். பின்பு அவ்வாறே வலியவந்து இந்த மக்கள் வாயினுள்ளும் நுழையும். அப்போது எந்த மகனும் ஜாக்கிரதையாயிருந்து செய்யவேண்டியது ஒன்றுண்டு. அதாவது அது நுழையும் சமயம் பார்த்திருந்து, அதற்கு முன்கணத்தில் காதைக் கையால் மூடிக் கொள்ளப்படாது.

வாயையும் உதடைப்பல்லால் கடித்துக்கொள்ளப்படாது. இந்த அளவிலாவது, தானே வரும் அதற்கு வழிவிட்டுக் குறுக்கே நில்லாதிருப்பானாயின் உண்மையில் அப்போதே அவனை—மனிதன் மனிதனானான், கடைத்தேறினான், கரையும் ஏறினான் என்று அவசியம் சொல்லலாம். இதுவுங்கூட முடியாமல், அது நுழைய வருமாயின் காதையும் வாயையும் மூடத்தான் செய்வேனென ஒருவன் உண்டாயின், அவனுருவம் நம் கண் வழியாக நுழையுமுன் நாமும் நம் கண் கதவுகளை மூடிக்கொள்ளவேண்டியதுதான். அந்த முடிவான பிடிவாதத்திற்கு இந்த முடிவான விஷயத்தைத் தவிரப் பரிகாரம் வேறொன்றிருப்பதாகத் தெரியவில்லை.

இடம் எதுவாயினும் குற்றமில்லை. மனஅமைதி ஏற்படுவதாயும் சலனமின்றி இருக்கத்தக்கதாயுமுள்ள இடமாயிருந்தால் போதுமானது. உழுத புழுதி, காலைக்கல், மாலைப்புல் தரை, பசுக்கள் மேய்ந்த—கட்டின இடம், அதன் சாணம் நீர் தெளித்த இடம், வம்பர் தும்பர் வீண் வாய்க்காரர் கூடாத இடம் முதலியனவும் நலமாம். இன்னும் இதுபற்றிய சில விஷயங்கள் திருப்பரங்குன்ற விசேட விளக்கத்தில் கூறியிருக்கிறோம். அங்கும் இதைக்கண்டுகொள்ளலாம். அதில் ஜபத்திற்குத் தடையாயுள்ள வெளிப் பகையோடு உட்பகையும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஈசுர கீதையில் இது விளங்கும்.

பயன்.

இதை அன்புகொண்டு அசிரத்தையின்றி ஜபிப்பவருக்கு அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு பயனும் உண்டு.

னதைக்கருதி—கேடு நீக்கத்தைக் கருதினாலும்சரி, லாப ஆக்கத்தைக்கருதியானாலும் அதையதை விரும்பியமுறையில் பெற முடியும். ஆனால் தனக்கு எட்டாததில் ஆசை வைத்துக் கொண்டு கஷ்டப்படப்படாது. தகுதிக்குத்தக்கதில் நேர்மையான ஆசை வைத்து அதற்குத்தக்க புறச்சாதனங்களையும் செய்து அப்போதே அகச்சாதனமான இதையும் அன்போடு செபித்து வரல் வேண்டும். உண்மையில் காரியசித்தி எளிதில் கூடும்.

முயற்சிதான் மக்களுக்குப் பயனைக்கொடுப்பது, இதில் சிறிதும் ஐயமே இல்லை. தெய்வத்திருவருளென்பதும் சிறிதங்கு வேண்டும். கண்தான் உண்மையில் உருவப்பொருளைத் தெரிவது. இதில் சந்தேகமேவேண்டாம், ஆனால் வெளிச்சமுஞ் சிறிது அதற்குத்துணை செய்யவேண்டும். அது உதவி சிறிதும் செய்யாதபோது திருதிருவென்று கண்ணை இமைகொட்டாது விழித்துப்பார்த்தாலும் பொருள் சிறிதும் தெரியப்போவதில்லை. போதாக் குறைக்குக் கண்ணிலும் நீர் வடியும், எரியவும் செய்யும். இப்படிப்போல நல்ல முயற்சிசெய்தும் திருவருள் சிறிதில்லாக் குறையினாலே உடம்பும் உள்ளமும் அலுத்துக் காரியத்தையும் சாதனங்களையும் வாய் வந்தவரையிலும் திட்டி அலுத்துப்போன மக்களும் அநேகருண்டு.

அப்படியே காரியத்துக்குண்டான புறச்சாதனத்தைக் கவனித்து முன்கூட்டியே செப்பனிட்டு ஒழுங்குபடுத்திக் கொள்ளாதவர்கள், பெரிய காரியங்களை நினைத்துக் கொண்டு மந்திர உருப்போட்டுக் கொண்டு மாத்திரம் இருப்பார்களானால் சீக்கிரம் காரியசித்தி அதனாலும் ஏற்பட்டுவிடாது. இப்படி எட்டாததில் ஆசைவைத்துக் கொண்டு ருத்திராக்ஷத்தைக் கையி

லெடுத்து அடிக்கடி கொட்டாவியையும் விட்டுக்கொண்டிருக்கும் பக்தர்களும் உண்டு. இவர்கள்தான் பின்னர் மந்திரத்தையும் மாலையையும் ஜெபத்தையும் நிந்தித்துக்கொண்டு சோம்பிகளாகிறார்கள்; முன்னிருந்த கடவுற் பற்றையும் ஜெபிக்கும்போது வந்த கொட்டாவியோடு சேர்த்து விட்டுவிட்டு இரண்டுங் கெட்டான் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். ஆதலின் எவன் காரியத்தில் நல்ல முயற்சியாளனோ அவன்தான் மன உறுதியோடும் ஊக்கத்தோடும் ஜெபிக்கவேண்டியது. இன்னும் எவன் ஜபதபத்தில் அன்பு கொண்டவனாயிருக்கிறானோ அவன் விடா முயற்சியோடும் காரியங்களில் சாதுரியமாக வேலை செய்யவேண்டியது. இததகையாருக்குக் காரியம் மிக விரைவில் கைகூடும். சிலபொழுது பாழ்த்த கருமத்தால் தடைபடினும் ஜபவலிமையினால் மீண்டும் விரைவில் கைகூடும்.

இம்முருகமந்திரத்தை மிகவும் சுவைத்து அநாதிகாலமாய் பல முனிவரும் புலவரும் அரசரும் மக்களும் பெரும் பசி தீர்ந்து ஆறி இருக்கிறார்கள். "மெய்மை குன்றாமொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்" "முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வென்று அருள்வாய்" 'படிக்கின்றிலை பழநித்திருநாமம், படித்தவர் தாழ் முடிக்கின்றிலை முருகா என்கிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே' 'ஒரு முருகா வென்று என்னுள்ளங் குளிர உவந்துடனே வருமுருகா' என்று பலவாறு முருகமந்திரத்தைச் சுவைத்துக் கூறுகின்றார் அருணகிரிப் பெருமகனார். முருகமந்திரம் ஜெபிப்பவருக்கு இம்மையில் தரித்திரமணுகாது, மறுமையில் பிறவியும் ஏற்படாதுஎன்றும் கூறுகின்றார்.

முடியாப் பிறவிக்கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரே.

இதுவெல்லாம் நாடு மெச்சப்பால் குடிக்கும் விஷயமல்ல, நாவு மெச்சப் பால் குடிக்கும் செய்தியாகும். இதில் அவரவர்களுக்கே பாடும் பயனும் நன்கு விளங்கிவிடும்.

முடிவுரை

இப்படியாக இணையற்ற சிறந்த இந்த மந்திரத்தின் பெருமையை உண்மையில் நான் சொல்லச் சிறிதும் தகுதியற்றவன் தான். இருந்தாலும் எனக்கு அலுப்புத்தட்டிய பொழுதெல்லாம் எப்படியோ இது என்னை ஏமாற்றி என் வாயின்வழியாக உள்ளேபோய்விடும். இது அடிக்கடி இப்படிப் போவதை இருபுறமும் இமையாது காத்து நிற்கும் காதுகளிரண்டும் கண்டுகொள்ளும். சிலசமயம் அவைகளையும் ஏமாற்றிப் போவதும் உண்டு. எப்படியோ இளமையில் புகுந்த இது இப்போது இந்த அளவுக்கு குளறிக் குளறியாவது முருகனைச் சொல்லும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. நண்பர்களும் புலவர் பெருமக்களும் இதற்குப் பேருதவியாயிருந்தது எனக்கல்ல, நாட்டு நலத்திற்காகட்டும்.

நூல் முடியச் சிறந்த காரணம்.

இங்கு இது ரசமானதும், உண்மையானதும் வேத முடிவானதுமான பகுதியாகும்.

இவ்வளவிலாவது இந்த நூல் முடிவு பெருவதற்குக் காரணம் இன்னும் ஒன்று சிறந்தது உண்டு. அது அந்த முருக

னுடைய தவறுதல் தான். எப்படியென்றால்:—முருகன் எல்லாப் பொருளுக்கும் அதுவதுவாக விளங்குகின்றான் என்று வேதமும் உண்மை கண்ட பெரியோர்களும் சொல்லுகிறார்கள். உண்மையில் இது பிரசித்தமான விஷயந்தான்.

முருகன் ஒவ்வொன்றுக்கும் அதுவதுவாக இருந்தால் தான் அது தந்தங் காரியத்தில் பயன்படுதற்கு யோக்கியமாய் மெய்யாயிருக்க முடியும். இப்படி இல்லையேல் அதுவும் இல்லாமலேயே பொய்யாய்ப் பயனற்றுப் போய்விடும். இந் நிலையில் எல்லாப் பொருளுக்கும் அதுவதுவாக இருந்த முருகன் இப் புத்தகத்திற்கு என்பாழ்த்த கர்மத்தால் வந்த இடையூறுக்கு அதுவாயிருக்கத் தவறியதே இந் நூல் முடியக் காரணம் ஆயிற்று. உண்மையாய் இதைத்தவிர வேறெதை இங்கு நாம் நேர்மையாய்ச் சொல்லி முடிக்க முடியும்.

மண் கூடையைத் தலையில் கவிழ்த்து மண்வெட்டியையும் தோளில் போட்டு வைகைக்கும் வந்தி முற்றத்திற்கும் மதுரை வீதியில் நடந்த பெருமான் ஒன்றுக்கும் பற்றாத என்னை இரும்பைப் பொன்னாக்கியதுபோல, ஏழுழவனை நாவுழவனாக்கி சில நாள் இங்கு (மதுரையில்) வைத்திருக்க விரும்பியதும் இவற்றுக் கெல்லாம் சிறந்த காரணம் ஆயிற்று; என்பதையும் நல்லுலகத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முன்னையார் மயிலூர்தி முருகவேள்
தன்னையார் எனில் தானோர் தலைமகன்
என்னையாளும் இறையவன் எம்பிரான்
பின்னையார் அவர் பேரெயிலாளரே.

முற்றிற்று.

ஆசிரியரின் மற்ற வெளியீடுகள்.

---

1. மனித இயல்பு ரூ.. 1—0—0

(பேய் மனிதன், மிருக மனிதன், தேவ மனிதன். மனிதலக்ஷணம்—முக்குற்றம்—பரிகாரம்)

2. ஏழை பங்காளன் ரூ. 0—12—0

(இதில் மதுரை பிட்டுவாணிச்சியம்மாளின் பக்தி—கடவுள் ஒட்டவேஷம் போட்ட காரணம்—ஒட்டர்(போயர்) பெருமை— இன்றுவரை காணுததைக் கண்டு, அதில் தன்னைக் காணும் தியானம் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.)

3. திருப்பரங்குன்றம் ரூ. 0—6—0

(இதில் மூர்த்திகள் அமைப்பு குடும்ப ஒற்றுமை சகோதர ஒற்றுமை. வெளித்தராசு—உள்தராசு—நிறுக்கும் விதம். நக்கீரர் திருத்திய விதம் ஜபிக்கும் முறை. தீர்த்தம் முதலியன.)

4. பரமாத்வைத சித்தாந்தம் ரூ. 4—0—0

5. ஊசி நுனிப் புத்தியும்—உலக்கை நுனிப் புத்தியும் ரூ. 0—8—0

சிலகுறளின் துணை கொண்டு ஒரு குறளின் விரிவுரை—நுண்மாண்நுழைபுலம்)

கிடைக்குமிடம்:—

(ஆசிரியர் விலாசம்) வடக்காடி வீதி, வாசகசாலை மதுரை.

இ. மா. கோபாலகிருஷ்ண கோன் புக்ஷாப், மதுரை.

டி. ராமசுப்பு, தேங்காய் பழ வியாபாரம்,
சந்நதிதெரு, திருப்பரங்குன்றம்.

ராஜன் பப்ளிஸிட்டி, 44, லக்ஷிமிபுரம் 6-தெரு, மதுரை.